GOKULAM


கோகுலம்

நவம்பர் '98 ரூ. 600



மழையில் நனைந்தாலும் பயமில்லை!

பருந்தாவனம்



9 மாம்பழங்களை 20 பேருக்கு சமமாகப் பங்கிட வேண்டும்! ஒரு பழத்தை அதிகமாக 5 துண்டுகள் வரை வெட்டலாம். பங்கிடுங்கள் பார்க்கலாம்?

— எம். வினோத், ஐந்தாம் வகுப்பு, விருத்தாசலம்

விடை: 5 மாம்பழங்களை 4 சமதுண்டுகளாகவும் 4 மாம்பழங்களை 5 சம துண்டுகளாகவும் வெட்டினால் 20 பேருக்கு சமமாகப் பங்கிடலாம்.




"பாம்பு பண்ணையில் உள்ள பாம்பெல்லாம் எங்கிருந்து வந்ததுடா?"


"முட்டையிலிருந்துதான் வந்தது. அதில் என்ன சந்தேகம்?"

— சீர்காழி ரேவதி

இரண்டு படங்களுக்கும் இடையே இருக்கும் ஐந்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!



விடை: 1. கைத்தடி, 2. பட்டன், 3. மோதிரம், 4. மூச்சுக்காற்று, 5. பறவை



கோகுலம்

நவம்பர் 1998

மலர் : 16 இதழ் : 10



அன்பார்ந்த சிறுவர்
சிறுமியரே,

மழை சீசன் ஆரம்பித்தாலே ஜாலிதான். அதிலும் கன மழை காரணமாக பள்ளிக்கூடம் லீவு விட்டு விட்டால் கேட்கவே வேண்டாம்! அம்மா, கொரிப்பதற்கு ஏதாவது சூடாகத் தயாரித்துத் தந்தால் ஜன்னல் ஓரம் கதைப் புத்தகத்துடன் உட்கார்ந்து மழையை நோட்டம் விட்டபடியே படிக்கலாம்; கொரிக்கவும் செய்யலாம்!

மழையில் வெளியே போக நேர்ந்தால் முன்பெல்லாம் குடைதான் கை கொடுக்கும். பாதி நனைந்தும் பாதி நனையாமலும் பள்ளிக்கூடம் போய்ச் சேருவோம். ஆனால் இப்போதெல்லாம் விதம் விதமான வண்ணங்களிலும் டிசைன்களிலும் பிளாஸ்டிக் ரெய்ன் கோட்டுகள் வந்து விட்டன. உடல் நனையாமல் பாதுகாப்புத் தருகின்றன. எனவே மழைக்குப் பயப்பட அவசியமில்லை என்பது உண்மைதான். ஆனால் வேறு வித ஆபத்துகள் உண்டு.

என்னுடைய இளம் வயதில் ஒருநாள் மோட்டார் சைக்கிள் ஓட்டியபடி வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். அப்போது இலேசாகத் தூற ஆரம்பித்தது. 'மழை வலுக்கு முன் வீடு போய்ச் சேரலாம்' என்று வேகத்தைக் கூட்டினேன். சாலையில் ஒரு சின்ன ஏற்ற இறக்கம். அவ்வளவுதான்; டயர் வழுக்கி, மோட்டார் சைக்கிள் சாலையில் படுத்தபடியே முன்னேற, நான் தெரு ஓரச் சாக்கடையில் கிடந்தேன்! நல்லவேளை, இலேசான சிராய்ப்புதான்.

மழைத் தூறலின் போதுதான் வாகனங்களுக்கு ஆபத்து அதிகம். சாலையில் உள்ள அழுக்குடன் நீர் கலந்து வழுக்கும். பலத்த மழையெனில் அழுக்கு அடித்துக் கொண்டு போகப்பட்டிருக்கும். ஆனால் அப்போது வேறு வித விபத்துக்கு வாய்ப்புண்டு. சாலைகளில் நீர் தேங்கி நிற்பதால் பள்ளம் இருப்பது தெரியாது. இசகு பிசகாகக் காலை விட்டு விட்டால் சுளுக்கிக் கொள்ளும். வாகனங்கள் பள்ளத்தில் விழுந்து எழுந்தால் ஆடிப் போய் விடுவோம்!

ரெய்ன் கோட் மழைக்குப் பாதுகாப்புத் தரலாம்; ஆனால் ஆபத்துகளைத் தவிர்க்காது. எச்சரிக்கையாக இருப்பது அவசியம். அதே சமயம் பருவக் காற்றும் மழையும், மின்னலும் இடியும் செய்கிற ஜகஜ்ஜாலங்களைக் கவனியுங்கள். மழை சற்று விட்டதும் தவளைகளின் 'கொரட், கொரட்' ஆரம்பித்து விடும். அதிலும் ஒரு லயம் இருப்பதை உணரலாம்!

இயற்கையின் விளையாட்டுகளில் மழைக்கால நர்த்தனம் ஒரு அலாதி ரகம். அதை ரசித்து ரசித்து பாரதியார் பாடியிருக்கிறார். இசையோடு கலந்து உணர்ச்சியில் நிறைந்து அதைப் பாடிப் பாருங்கள்!

மழையை விட அழகான ஒன்று உண்டென்றால் அது மழையைப் பற்றிய பாரதியின் பாடல் வரிகள்தாம்!

அன்புடன்,

கி. ராஜேந்திரன்
ஆசிரியர்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் — பாரதியார்.

கோகுலம்


நவம்பர் 1998


இந்த இதழில்...









பள்ளியில் –
புவனா பணக்காரி... வள்ளி ஏழை.. ஆனாலும் எவ்வளவு நெருங்கிய தோழிகளா இருக்காங்க இல்லே?
ஏன் பேசவில்லை?
ஆமா ராதா!
கதை: கோபாகி
படம்:
வகுப்பில் –
அடடா! வள்ளி கிளாஃப் நோட்டைக் கொண்டுவர மறந் துட்டேனே...
புவனா! என் நோட்டை வச் சுக்க....
ஐயய்யோ! வள்ளி, என்ன இது?
இன்னிக்கு கிளாஃப் ஆரம் பிக்கப் போறேன் இல்லியா? கிளாஃப்நோட்டு கொண்டுவராத வங்க வெளியே நில்லுங்க!
அப்புறம் பேசிக்கலாம். முதலில் நோட்டை வாங்கிக்க!


கணக்கு வகுப்பு முழுவதும் வெளியே நின்ற வள்ளியை மாலையில் புவனா சந்தித்து-
நான் செய்த தப்புக்கு, உனக்கு தண்டனை-இது சரியா?
உனக்கு எப்படி நன்றி சொல்ல?
நாளைக்கு நோட்டு கொண்டுவா மறக்காதே!
ஒரு நாள் பள்ளியில்~
வள்ளி ஏன் பேச மாட்டேங்கிறே?
நேத்து உன் பேனாவை உடைச்சிட்டேனே, அதனால கோபமா?
என்ன, தலையாட்டறே? புதுப்பேனாதான் வாங்கித் தந்தாச்சே!
சரி திங்கட்கிழமை யோசிக்கலாம்!
புவனா வீட்டில்~
இன்னிக்கி வள்ளி பேசவே இல்லியே..ஏன்? நான் பேனாவைத் தெரியாமல் தானே கீழே போட்டேன்...


திங்கட் கிழமை பள்ளியில்..
புவனா! புவனா!
கோபமா! உன் மேலையா? எதுக்கு?
என்ன வள்ளி, கோபமெல்லாம் போயிருச்சா?
என்ன வள்ளி! ரெண்டு கடவாய்ப் பல்லைக் காணோமே?
பல்வலி! வாய் அசைக்க முடியாமலிருந்தேன். நேற்றுதான் பல்லை எடுத்தோம்!
இதை சனிக்கிழமை என்னிடம் எழுதியாவது காட்டியிருக்கலாமில்ல?
நீ வருத்தப்படுவேயென்றுதான்..
உன்னைத் தப்பா நினைச்சுட்டேன்; மன்னிச்சுடு! இனிமே என்கிட்டே எதையும் மறைக்காதே, வள்ளி!




நிலாவின் பனிக்கட்டி பூமிக்கு வருகிறதா?

சந்திரனில் நீர் இருப்பதைக் கண்டு பிடித்தாகி விட்டது. அதைப் பற்றிய விஷயங்கள் பரபரப்பாய் பேசப்பட்டும் முடிந்து விட்டன. அடுத்தது என்ன? நிலவிலுள்ள பனிக்கட்டியை எப்போது யார் கொண்டு வரலாம் என்பது பற்றிதான் இப்போது விஞ்ஞானிகளின் நினைப்பும், ஆராய்ச்சியும்! நிலவிலுள்ள பனிக்கட்டியின் முதல் 'மாதிரி துண்டு' அறிவியல் ஆய்வுக்காக கி.பி. 2001-ல் பூமிக்கு வரவிருக்கிறது. நிலவில் மேர் நெக்ட்டாரிஸ் என்ற இடத்திலிருந்து 22 பவுண்டு எடையுள்ள பாறையை கி.பி. 2000, செப்டம்பரில் கொண்டு வரவும், திட்டமிட்டுள்ளது நியூயார்க் விண்வெளி நிறுவனம்!

ஜீன் மாறிய உருளைக் கிழங்கு!


உலகில் வருடந்தோறும் சுமார் 30 கோடி டன்களுக்கு மேல் விளையும் உணவுப் பயிர்களில் பதினைந்து வகைகள் உள்ளன. இதில் உருளைக் கிழங்கு மூன்றாவது இடத்தை வகிக்கிறது. உருளைக் கிழங்கில் நாம் உணவாகக் கொள்ளும் மூன்று முக்கிய பொருட்கள் உள்ளன. இதில் நீர் 74.7 சதமும், மாவுப் பொருட்கள் 23 சதமும், புரதம் 1.6 சதமும் இருக்கின்றன. இதைத் தவிர கொழுப்பு 0.1 சதமும் மற்றும் தாதுப் பொருட்கள் 0.68 சதமும் உள்ளன. மேலும் நிறைய வைட்டமின்களும் உருளைக் கிழங்கில் இருக்கின்றன. இதில் மாவுப் பொருளே அதிக அளவில் காணப்படுவதால், உலகின் சில பகுதிகளில் தானியங்களுக்குப் பதில் உருளைக் கிழங்கையே உணவாகக் கொள்கின்றனர். இந்தியாவைத் தவிர, அயல்நாடுகளிலுள்ள ஒவ்வொருவரும், வருடத்திற்கு சுமாராக 100 கிலோவி



லிருந்து 170 கிலோ வரை உட்கொள்கின்றனர்; இந்தியாவில் மட்டும்தான் ஒவ்வொரு மனிதனும் வருடத்திற்கு சுமார் 13 கிலோ மட்டுமே உட்கொள்கிறான்.

உருளைக் கிழங்கு மற்ற உணவுப் பொருட்களைவிட அதிகமான நீர்ச்சத்து உள்ள உணவாகும். இதில் 74.7 சதம் நீர் உள்ளது; கலோரி சத்து குறைவு. ஆனால், இந்த கலோரி சத்தையும் கூட உயிரியல் தொழில் நுட்ப யுக்தி மூலம் இரட்டிப்பாக ஆக்க, ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழக விஞ்ஞானிகள் குழு திட்டமிட்டுள்ளது.

உருளைக் கிழங்கின் செல்களில், சில



ஜீன் மாற்றம் செய்து சர்க்கரைப் பொருள் அதிகமுள்ள உருளையை உயிரியல் தொழில் நுட்ப முறையில் உருவாக்கினால், அது மக்களுக்குப் பெரிதும் பயன்படும் என்பதை ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன. இப்படி உற்பத்தியாகும் உருளைக் கிழங்கு, 'வறுவல்' செய்யும் போது அதிக அளவு எண்ணெய்யை உறிஞ்சாது. எனவே இதய நோயாளிகளும், உடலில் கொழுப்பு சத்து அதிகம் உள்ளவர்களும் கூட பயமின்றி உண்ண முடியும். 'ஜெனிகா அக்ரோ கெமிகல்' என்ற உயிரியல் தொழில் நுட்ப நிறுவனம், இத்தகைய உருளையை இன்னும் மூன்று வருடத்தில் அதிக அளவில் உருவாக்கி, உலக நாடுகளுடன் போட்டியிட திட்டமிட்டுள்ளது.

அது மட்டுமல்ல, வயிற்றுப் போக்கைத் தடுக்கும் புரதப் பொருளை உருளைக் கிழங்கின் ஜீனுக்குள் நுழைத்து, 'ஜீன்மாறிய உருளைக் கிழங்கை' தடுப்பூசியாகப் பயன்படுத்தலாம் என்ற உண்மையையும், நியூயார்க்கைச் சேர்ந்த சார்லஸ் ஆண்டர்சன் குழுவினர் கண்டுபிடித்துள்ளனர். மேலும் மலேரியா மற்றும் தோல் புற்றுநோய்க்கு எதிரான புரத மூலக் கூறுகளையும், உருளைக்கிழங்குக்குள் நுழைத்து, இதனை நோய் தடுப்பு உருளைக் கிழங்காகவே பயன் படுத்த முடியும் என்ற தகவலையும் விஞ் ஞானிகள் தெரிவித்துள்ளனர். எனவே ஜீன்மாறிய உருளை, எதிர்கால சந்ததியினரை உடல் நலம் நிரம்பியவராக, நோயற்றவராக உருவாக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

— மோகனா



"1001 வெடின்னு சொன்னீங்க! 999 வெடிதானே இருக்கு?!"

"தீபாவளி பற்றி நீ எழுதின கட்டுரையைப் படி!"

"பட் படீர்... டமார்!... புஸ்ஸ்... ஜிவ்வ்.. உஸ்ஸ்ஸ்... டுமீல்... படபடபடபட் படார்!"



குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டி 1998 முடிவு

பள்ளி மாணவர்களிடையே சிறுவர் இலக்கியம் படைக்கும் ஆற்றலும் திறமையும் உள்ளவர்களைக் கண்டுபிடித்து, ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இந்தச் சிறுகதைப் போட்டி அறிவிக்கப்பட்டது. வந்து குவிந்த சிறுகதைகளைப் பரிசீலித்து பரிசுக்குரியவற்றை தேர்ந்தெடுப்பது என்பது பெரிய சவாலாகவே இருந்தது. கதைகளை பரிசீலித்து பரிசுக்குரியவற்றைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை கோகுலம் ஆசிரியருடன், கோகுலத்தின் முன்னாள் கௌரவ ஆசிரியர் திரு. ரேவதி அவர்களும், திரு. ரவி தமிழ்வாணன் அவர்களும் ஏற்று நடுவர்களாக இருந்தனர்.



முதல் பரிசாக ரூபாய் முன்னூறு பரிசு பெறும் கதை.

வீடியோ கேம்

எழுதியவர் : ஜி. ரமணி, பத்தாம் வகுப்பு, கணக்கன் பட்டி, பழனி, திண்டுக்கல் மாவட்டம்.

இரண்டாவது பரிசாக ஒவ்வொன்றும் ரூபாய் இருநூறு பரிசு பெறும் கதைகள்.

1. மாறியது உள்ளம்!

எழுதியவர் : ஆ. வித்யா, பவித்ர மாணிக்கம்.

2. பிரணவ மந்திரம்

எழுதியவர் : பி. சரண்யா, ஸ்ரீரங்கம், திருச்சி.

மூன்றாவது பரிசாக ஒவ்வொன்றும் ரூபாய் நூறு பரிசு பெறும் கதைகள்.

1. கல்வி என்னும் செல்வத்தை....

எழுதியவர் : பா. கவிதா, ஒன்பதாம் வகுப்பு, தி.நகர், சென்னை.

2. கலங்கரை விளக்கம்

எழுதியவர் : எம். ரம்யா, பத்தாம் வகுப்பு, புதுக்கோட்டை.

3. நிஜத்தைத் தேடி....

எழுதியவர் : ஜி. ரோஜர், பன்னிரெண்டாம் வகுப்பு, தூத்துக்குடி.

வெளியிட ஏற்கப்பட்டுள்ளவை:

1. சென்னையில் வெடிகுண்டு
– ர. ஜெயகாந்த், பத்தாம் வகுப்பு, தஞ்சாவூர்.

2. என்னால் முடியும்...
– எம்.எஸ். சதீஷ் குமார், பதினோராம் வகுப்பு, புதுப்பேட்டை, சித்தூர் மாவட்டம்.

3. திருடனைத் திருத்திய சிறுவன்
– ஜி. யுவராஜ், பன்னிரெண்டாம் வகுப்பு, புரசைவாக்கம், சென்னை.

4. அதிசயக் கிளி!
– இரா. அகிலா, பன்னிரெண்டாம் வகுப்பு, கதிராமங்கலம் அஞ்சல், திருவிடைமருதூர் தாலுகா.

5. வ(வி)ழி பிறந்தது!
– கோ. சோபன்பாபு, ஏழாம் வகுப்பு, புதுக்கோட்டை.

6. முனிவரின் கர்வம்
– ஜெ. ராமகிருஷ்ணன், திருவிடைமருதூர், திருச்சி மாவட்டம்.

7. திறமைக்குப் போடாதே பூட்டு!
– நா. கீதா, பத்தாம் வகுப்பு, அம்பத்தூர், சென்னை.

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டு. கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.

பேசும் சைக்கிள்!

எஸ்.ஆர்.ஜி. சுந்தரம்

காட்சி 1

இடம்: வனிதா வீடு

சரளா: வனிதா! வனிதா!

வனிதா: வா சரளா!

சரளா: ஏய், என்ன இதெல்லாம்? அட்டகாசமா புதுப்பாவாடை சட்டை, அஞ்சுகால் பின்னல்...ம்...

வனிதா: எங்க 'பாரதி அடுக்குமாடிக் குடியிருப்போர் நல சங்கம்' நாளைக்கு தேசிய ஒருமைப்பாட்டு வாரத்தைக் கொண்டாடப் போறாங்க...

சரளா: அதுக்காக?

வனிதா: இந்தக் கட்டடத்திலே பல மாகாணத்தைச் சேர்ந்தவங்க புதுசா வந்து குடியேறியிருக்காங்க. உதாரணமா நான் தமிழ்நாடு... எதிர் ப்ளாட் ஆஷா காஷ்மீர்; அடுத்த பிளாட் சுலேகா ஆந்திரா! மேல் ப்ளாட் நானக் பஞ்சாப்! நாளைக்கு இவங்களை எல்லாம் அவங்க அவங்க மாகாணத்து உடை போட்டுக்கிட்டு வரச் சொல்லியிருக்காங்க... ஒருமைப்பாட்டு உறுதிமொழிக்கப்புறம் போட்டோ எடுக்கப் போறாங்களாம்! அதுக்காக நான் இன்னிக்கே ஒரு 'டிரையல்' பார்த்துக்கிட்டேன்.

சரளா: ம்... ஆசைதான்!

வனிதா: இன்னொரு இனிப்பான செய்தி! இந்தக் கட்டடத்துலே இருக்கறவங்கள்ளே இந்த வருஷம் பத்தாம் வகுப்புத் தேர்விலே யார் அதிக மதிப்பெண் எடுத்திருக்காங்களோ, அவங்களுக்கு ஒரு புது சைக்கிளை பரிசா கொடுக்கப் போறாங்களாம்!

சரளா: அப்போ உனக்குக் கிடைக்குமா?

வனிதா: தெரியலே... எல்லாரும் ஒரே மாதிரி மதிப்பெண் வாங்கியிருக்கிறதா பேசிக்கிறாங்க. நாளைக்கு நீயும் நிகழ்ச்சிக்கு வா!

காட்சி 2

இடம்: பாரதி பிளாட்ஸின் முன் பக்கத் திறந்தவெளி

சங்கத் தலைவர்: அடேடே! வாங்க... வாங்க! ... வனிதா, ஆஷா, சுலேகா, கிருஷ்ணா, நானக்... எல்லோருமே வந்தாச்சா? சபாஷ்! காலையில் பிரமாதமா 'டிரஸ்' பண்ணிக்கிட்டு வந்திருந்தீங்க! சரி, அப்படி போய் உட்காருங்க. இன்னும் கொஞ்ச நேரத்துலே நிகழ்ச்சி தொடங்கிடும்.


வனிதா: அங்கிள்! இதுதான் நீங்க இன்னிக்குப் பரிசா தரப் போற புது சைக்கிளா?

தலைவர்: ஆமாம்!

நானக்: சைக்கிள் பிரமாதம்! குதிரை மாதிரி மிடுக்கா இருக்கு!

சுலேகா: இப்பவே ஏறி வேகமா ஓட்டணும் போல இருக்கு!

ஆஷா: மெதுவா ஓட்டினா நல்லா



இருக்கும்!

வனிதா: நல்ல கலர்; அழகான சீட், 'பஸ்'ஸுலே இடிபடாம ஜாலியா ஸ்கூலுக்குப் போக லாம்.

கிருஷ்ணா: விட்டா பெங்களூருக்கே ஓட்டிக்கிட்டுப் போயிடுவேன்.

தலைவர்: நீங்க சொல்றதெல்லாம் சரி! ஆனா உங்களுக்கு இந்தப் பரிசை கொடுக்கறதுலே ஒரு சிக்கல் வந்திருக்கு!

நானக்: என்ன சிக்கல்?

தலைவர்: பத்தாம் வகுப்புத் தேர்விலே யார் முதல் மதிப்பெண் வாங்கறாங்களோ, அவங்களுக்கு இதைப் பரிசா கொடுக்கத் தீர்மானிச்சிருந்தோம். ஆனா நீங்க எல்லோருமே ஒரே மாதிரி மதிப்பெண் வாங்கியிருக்கிங்கன்னு கொஞ்ச நேரம் முன்னாலதான் தெரிஞ்சுது. அதனால இந்த வருஷம் நாம எல்லோருக்கும் பல வகையிலே உதவியாயிருக்கிற காவல்கார கணேசனுக்குக் கொடுத்துடலாமான்னு நாங்க யோசிச்சுக்கிட்டிருக்கோம்.

சுலேகா: அது வேண்டாம் அங்கிள்! எங்க அஞ்சு பேர் பெயரையும் எழுதி குலுக்கிப் போட்டுக் கொடுங்க!

ஆஷா: அதைவிட இந்த ஐந்து மாகாணங்கள்ளே எது சிறந்த மாகாணம்னு நீங்க நினைக்கிறீங்களோ, அந்த மாகாணத்தைப் பாராட்டறமாதிரி எங்கள்ளே ஒருத்தருக்குக் கொடுங்க!

சுலேகா: அப்படிப் பார்த்தாலும் எங்க ஆந்திர மாநிலம்தான் சிறந்த மாநிலம்! பிரசித்தி பெற்ற நெல்லூர் அரிசியும், கல்கண்டா இனிக்கிற பங்கனபள்ளி மாம்பழமும் எங்க மாநிலத்திலேதான் கிடைக்கும்! அது மட்டுமல்ல, இரும்பு தயாரிக்க உதவற இரும்புக் கனி பாறைகளும் எங்க மாநிலத்




திலேதான் நிரம்பி இருக்கு! அதனால இந்த சைக்கிள் எனக்குத்தான்!

கிருஷ்ணா: ஆமாம், பெரிய இரும்புக் கனி!... எங்க கர்நாடக மாநிலத்திலே தங்கச் சுரங்கமே இருக்கு தெரியுமா? நாட்டுப் பொருளாதாரமே இந்தத் தங்கத்துலேதான் இருக்கு! அதனால் அங்கிள், நீங்களே சொல் லுங்க இந்த சைக்கிள் எனக்குத்தானே?

நானக்: நிறுத்துங்க தங்கமாம், இரும்பாம்! பாதுகாப்பு இல்லேன்னா ரெண்டுமே திருடு போயிடும்! எங்க மாநிலத்திலேதான் வீரம் நிறைந்த படை வீரர்கள் நிறைந்திருக் கின்றனர்! வீரம் இல்லாவிட்டால் நாடு அந்நியர்களுக்கு அடிமையாகி விடும்! அது மட்டுமல்ல, நாங்கள் விளைவிக்கும் கோதுமை மட்டு மில்லாவிட்டால், இந்தியாவின் பாதிப் பகுதியினர் நல்ல உணவில்லாமல் வாடி விடுவர்!

ஆஷா: எல்லோரும் காஷ்மீரை மறந்து பேசாதீர்கள்! இந்தியாவிற்கே கிரீடம் போல இருப்பது எங்கள் காஷ்மீர்தான்! அயல் நாட்டவர் எங்கள் காஷ்மீரை நினைத்துக் கொண்டுதான் இந்தியாவிற்கே வருகின்றனர். அப்புறம் எங்கள் ஆப்பிளுக்கு, உங்கள் மாம் பழம் ஒரு ஈடா?

வனிதா: 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதா வதெங்கும் காணோம்' என்று மகாகவி பாரதி பாடிய தமிழ்நாட்டுக்கு முன்னால் உங்கள் மாநிலங்கள் நிற்க முடியாது!... அற் புதமான கலைவண்









"எழுதி வைச்சிருந்த அவன் பெயரைச் சுற்றி எறும்பு மொய்க்க ஆரம்பிச்சுடிச்சு!"

"ஏன்?"

"அவன் பெயர்தான் 'சக்கரைச்சாமி' ஆச்சே!"

— காழி. ஆர். சீதாராமன்

ணங்கள் நிறைந்த கோயில்களும், உலகத்தின் கவனம் கவர்ந்த எங்களது அழகிய நீண்ட சென்னைக் கடற்கரையும், விரிந்து பரந்த நெல் வயல்களும், எங்கள் தமிழகத்தின் சிறப்புகள்! அங்கிள், நான் சொல்வதுதானே உண்மை!

நானக்: இல்லை! இந்த அருமையான சைக்கிளை...

பெல்: எல்லோரும் பேச்சை நிறுத்துங்கள்... அருமையான சைக்கிளா?... யார் சொன்னது?

ஆஷா: ஐய்யோ... இந்த சைக்கிளே பேசுவதுபோல் இருக்கிறது! குரல் மட்டும் கேட்கிறது!

பெல்: சைக்கிள் பேசவில்லை. இந்த 'பெல்' பேசுகிறேன்! மறுபடியும் அருமையான சைக்கிள் என்று சொல்லாதீர்கள்!

கிருஷ்ணா: அதில் என்ன தவறு?

பெல்: தவறுதான்! நான் மட்டும் 'டிரிங் டிரிங்' அடித்து ஒலி எழுப்பாவிட்டால், இந்த சைக்கிள் போக வழி கிடைக்காது. அதனால் 'அருமையான பெல் உள்ள சைக்கிள்' என்று சொல்லுங்கள்.

ஹேண்டில்பார்: (சிரிப்பொலி)

சுலேகா: இது யார் குரல்?

ஹேண்டில்பார்: நான்தான் ஹேண்டில்பார்! என் மீது உட்கார்ந்து கொண்டே இந்தப் பெல் என்ன திமிராகப் பேசுகிறது? சிறுவர்களே! நான் மட்டும் இல்லாவிட்டால் இந்தச் சைக்கிளே அசடு வழிந்து நிற்கும். நான் இல்லாவிட்டால் சைக்கிள் ஓட்டுபவர் கைகளை எங்கே வைப்பார்? எப்படிச் சைக்கிளைத் திருப்பி ஓட்டுவர்? எப்படி பிடித்துக் கொண்டு ஏறுவர்? அதனால் நான்தான் பெரும் பாராட்டுக்குரியவன்!

வனிதா: நீ சொல்வதும் சரிதான்!

சக்கரம்: கிர்ர்ர்... கிர்ர்ர்... சிறுவர்களே! என்ன பார்க்கிறீர்கள்? ஹேண்டில்பார் சொன்னதை நாங்களும் கேட்டுக் கொண்டு தான் இருக்கிறோம். சக்கரங்களாகிய நாங்கள் மட்டும் இல்லாவிட்டால், இந்த சைக்கிள் ஓர் அங்குலம்கூட முன்னாலோ, பின்னாலோ செல்ல முடியாது. 'அம்போ' என்று படுத்து விடும். அதனால் அருமையான சக்கரங்கள் கொண்ட சைக்கிள் என்று சொல்லுங்கள். என்னைச் சுற்றிப் பாருங்கள். எப்படி சுற்று கிறேன்!

நானக்: ம்... நீ சொல்வதும் சரிதான்!

பிரேக்: குழந்தைகளே, இந்தப் பிரேக்கைப் பிடியுங்கள்! ம்! அப்படித்தான்! பார்த்தீர்களா, சக்கரங்கள் நின்று விட்டன. பாவம்! அவற்றின் தலைவிதி என்னிடந்தான்! நாங்கள் இல்லையென்றால் விபத்து ஏற்பட்டு விடும்! எனவே எங்களையே சிறப்பித்துப் பேசுங்கள்!

சுலேகா: நீ சொல்வதும் சரிதான்!

பெடல்: சிறுவர்களே! ஏமாந்து விடாதீர்கள்! பிரேக்கின் தற்புகழ்ச்சிக்கு முதலில் பிரேக் போடச் சொல்லுங்கள். பெடல்களாகிய நாங்கள் இல்லாவிட்டால் சக்கரங்களும் சுற்றாது; மக்கு பிரேக்குகளுக்கும் வேலையில்லை.

ஆஷா: பலே சரியான போட்டி!

ட்யூப்: மிஸ்டர் பெடல் சார், நிறுத்துங்கள்! நகையும், சதையும்போல் ட்யூபும், டயருமாகிய நாங்கள் இல்லாவிட்டால், சக்கரம் சுழன்றாலும் பலனில்லை.

காற்று: ஸ்..ஸ்..ஸ்! சிறுவர்களே, நான்தான் காற்று! ட்யூபிற்குள்ளிருந்தே பேசுகிறேன்! நான்தான் மறைந்திருந்து இந்த சைக்கிளுக்கே உயிரூட்டிக் கொண்டிருக்கிறேன். நானில்லாத ட்யூபும், டயரும் பஞ்சரியாகிவிடும்! ஆதலால் அருமையான காற்றால் ஓடும் சைக்கிளே என்று சொல்லுங்கள்!

(எல்லா பாகங்களும் 'நான்தான் அருமை!' என விடாமல் கத்துகின்றன)

சைக்கிள் பிரேம்: நண்பர்களே, நில்லுங்கள்! நான்தான் சைக்கிள் பிரேம் பேசுகிறேன். இந்தச் சைக்கிளுக்கு எலும்புக் கூடு போன்றவன் நான்தான். உங்கள் ஒவ்வொருவரையும் அந்தந்த இடங்களில் பொருந்தி நிலைக்கச் செய்து, சைக்கிள் உருவம் கொடுத்து, இயக்கத்திற்குக் காரணமாயிருப்பவர்களில் நானும் ஒருவன்! ஆனால் இதற்காக என்னை பெருமை படுத்திக் கொள்ள விரும்பவில்லை!

தலைவர்: குழந்தைகளே! இந்த சைக்கிள் பிரேம்தான் நியாயமாக ஏதோ பேச வருகிறது. கவனமாகக் கேளுங்கள்!

சைக்கிள் பிரேம்: ஏ! உதிரி பாகங்களே! நம்மில் ஒவ்வொருவருக்கும் தனித்தன்மையும், சக்தியும், அதனால் உண்டாகும் பெருமையும் உண்டு. அதற்காக 'நான் இல்லாவிட்டால் இந்த சைக்கிளே ஓடாது!' என்ற அகங்கார உணர்வும் தற்பெருமையும் கூடாது! உங்களைத் தனியாகப் பிரித்துக் கொண்டு பெருமைப் படாதீர்கள். 'நானும் இந்த சைக்கிளின் ஓட்டத்திற்கு உதவும் ஒரு கருவியாக இருக்கிறேன்' என்று எண்ணுவதுதான் நியாயம்! அதில்தான் பெருமை! இதுவேதான் ஒருமைப்பாட்டுணர்ச்சிக்கு அவசியமான குணம்!

கிருஷ்ணா: சைக்கிள் பார்! நீ என்ன சொல்கிறாய்?

சைக்கிள் பார்: நீங்கள் இந்த சைக்கிளைப் பெறுவதற்காக பேசிக் கொண்டதைக் கேட்டேன்! உங்கள் மாநிலம்தான் நாட்டு நடப்பிற்கே அவசியம் என்பது போல பேசினீர்கள்! இந்தச் சைக்கிளின் உதிரி பாக நண்பர்களும் உங்களைப் போல்தான் பேசினார்கள்! இரண்டுமே தவறு! பலவித மொழி, எல்லைகளால் மாநிலங்கள் வேறு பட்டாலும், அவைகள் எல்லாம் இந்தியப் பண்பாடு என்ற நூலில் கோர்க்கப்பட்ட முத்துகள்! எங்கள் இந்தியா! எவரும் இந்தியர்! என்று சொல்லக் கற்றுக் கொள்ளுங்கள்!

நானக்: அங்கிள்! இந்த சைக்கிள் பார் சொல்வதுதான் சரி! நாங்கள் இனிமேல் எங்கள் மாநிலப் பெருமை காட்டி போட்டி போட மாட்டோம்! இந்த சைக்கிளை காவல்காரர் கணேசனுக்கே கொடுத்து விடுங்கள்! என்ன நண்பர்களே?

மற்றவர்கள்: ஆமாம் எங்களுக்கும் சம்மதம்!



தங்க மாட்டேங்கிறது!

அப்பாவின் நண்பர் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார். என் அப்பாவிடம் "எனக்கு அவசரமா கொஞ்சம் பணம் தேவைப்படுது, கிடைக்குமா?" என்று கேட்டார். "உன் சேமிப்புல எதுவும் இல்லையா?" என்றார் அப்பா. "எங்கே சேமிக்கிறது? சம்பாதிக்கிற பணம் பாக்கெட்டில் தங்கவே மாட்டேங்குதே!" என்றார் வருத்தத்துடன். அருகில் இருந்த என் தங்கை "பாக்கெட் ஓட்டையா இருக்கும், தைத்து விடுங்கள் மாமா" என்றாளே பார்க்கலாம்! வருத்தத்துடன் இருந்த மாமாவே சிரித்து விட்டார்.

எம். மகேஷ், தாரமங்கலம்.

ஆகாயத்தில் ஒரு ஹோட்டல்..?

ஆனந்தபவன் எங்கே?

நானும் தம்பியும் கடைத் தெருவிற்குச் சென்றிருந்தோம். அப்போது "அக்கா, இந்தத் தெருவிலிருந்த ஹோட்டல் ஆனந்தபவன் இப்போ ஆகா யத்துக்கு இடம் மாறிவிட்டது" என்றான் தம்பி. எனக்கு ஒன்றும் புரியவில்லை. "அங்கே




பார்" என்று கை காட்டினான். ஆனந்தபவன் பெயர் பலகையின் கயிறு அறுந்து தொங்கிக் கொண்டிருந்தது. அம்புக்குறி வானத்தை நோக்கி இருந்தது. எனக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை! வீட்டில் வந்து சொன்னேன்.


– ப. சாந்தி,
கண்டாட்சிபுரம்.

எங்களுக்கு முதலில்...

என் சைக்கிளுக்கு காற்றடிக்க தோழியுடன் கடைக்குச் சென்றேன். அப்போது இன்னொருவரும் காற்றடித்துக் கொள்ள வந்து சேர்ந்தார். கடைக்காரர் "யாருக்கு முதலில் காற்று அடிப்பது?" என்று கேட்டார். நானும் தோழியும் "பள்ளிக்குச் செல்ல வேண்டும். எங்களுக்கு முதலில் அடிங்க" என்றோம். இன்னொருவரும் "எனக்கு அடிங்க முதலில்" என்றார். இதைப் பார்த்த சைக்கிள் கடைக்காரர் உங்களுக்கு அடிக்க முடியாது, டயருக்குத் தான் அடிக்கணும்" என்றாரே பார்க்கலாம்!

– எஸ். ரோகிணி,
பெரியார் நகர், சென்னை.





பூனை சாப்பிடுமா?

பண்டிகைக்காக ஊரிலிருந்து வந்திருந்தான் இசையரசு. அவன் மிகவும் சுட்டி. எங்கள் வீட்டில் பூனை ஒன்று இருந்தது. அது நாம் சாப்பிடும் அனைத்தையும் சாப்பிடும். பூனைக்கு புளி என்றால் ரொம்ப இஷ்டம். அதனால் அலமாரியை பூட்டி வைத்திருந்தோம். இசையரசு லட்டை எடுப்பதற்கு கதவைத் திறந்தான். "அலமாரியை நல்லா மூடிடு, புளியை பூனை சாப்பிட்டு விடும்" என்றேன். என்னிடம் வந்து "புலியை எப்படி பூனை சாப்பிடும்?" என்றான் ஆச்சரியமாக. "இது குழம்பில் ஊற்றும் புளி" என்று விளக்கினேன்.

எஸ். யசோதா லட்சுமி,
சாத்தனூர் அணை,
திருவண்ணாமலை
மாவட்டம்.



பை வேண்டும்!

மளிகை கடைக்காரரிடம் சாமான்களைப் போட்டு வைக்கச் சொல்லி விட்டு நண்பன் வீட்டிற்குச் சென்றேன். சிறிது நேரத்தில் மீண்டும் கடைக்கு வந்து பணத்தைக் கொடுத்து விட்டு ''சார் பைய எடுத்துத் தாங்க'' என்றேன். அவர் மெதுவாக பையைத் தூக்கித் தந்தார். ''என்ன சார்! பை அவ்வளவு கனமா?'' என்றேன். ''நீ தானே தம்பி பைய எடுத்துத் தரச் சொன்னே! எங்க ஊர்ல பைய என்றால் மெதுவா என்று அர்த்தம்'' என்றார்.



– ப. காளிதாசன்,
நீர்விளங்குளம்,
புதுக்கோட்டை மாவட்டம்.

பல் ஆடுகிறது!

தினமும் மாலையில் நண்பர்கள் எங்கள் வீட்டிற்கு வருவார்கள். சிறிது நேரம் அரட்டை அடித்து விட்டுப் படிக்க ஆரம்பிப்போம். அன்று படித்துக் கொண்டிருக்கும்போது நண்பன் ஒருவன் தன் பல்லைக் காட்டி "ஆடுது டா! என்ன செய்யலாம்?" என்றான். குறும்புக்கார இன்னொரு நண்பன் "பெவிகால் வச்சு ஒட்டிடு, கல்லைக் கடித்தால் கூட ஆடாது" என்றான். நாங்கள் சிரிக்க பல் வலியை மறந்து அவனும் சிரித்தான்.



– ஜி. முருகன்,
ஒன்பதாம் வகுப்பு,
அரசினர் உ.நி. பள்ளி,
துத்திப்பட்டு

ஏமாளன் ரொம்ப அப்பாவி. யார் எதைச் சொன்னாலும் அதை அப்படியே நம்பி விடுவான். படிப்பும் வரவில்லை. அதனால் அவனது இயற்பெயரான ஏகாம்பரம் என்பது மறைந்து ஏமாளன் என்ற காரணப் பெயரிலேயே ஊரார் அழைத்தனர். அவனும் அதைப் பொருட்படுத்தவில்லை. அசடாக இருந்தாலும் தாயார் அவன்மீது மிகுந்த அன்பு செலுத்தி வந்தார்.

வயலில் உழுது கொண்டிருந்த காளை மாடு நோய் கண்டு இறந்து விட்டது. அதனால் புதிய மாடு வாங்க பணத்துடன் மகனை பக்கத்து ஊரிலுள்ள சகோதரன் வீட்டிற்கு அனுப்ப முடிவெடுத்தார் அம்மா!

"ஏகாம்பரம் 'கட்டின பசு போல் இரு', முத்துப் போல் மூன்று வாக்கியம்தான் பேச வேண்டும். வளவளவென்று நினைத்ததை எல்லாம் பேசுவதால்தான் அசடன் என்கிறார்கள். மாமாவே சந்தைக்குப் போய் மாடு வாங்கி வரட்டும். உன்னை ஏமாற்றி விடுவார்கள்" என்று பலவிதமாகப் புத்தி சொல்லி அனுப்பி வைத்தார்.


ஏகாம்பரமும் தலை அசைத்து விட்டுச் சென்றான். மாமன் வீடு சென்ற ஏகாம்பரம் நேராக மாட்டுக் கொட்டிலில் போய் உட்கார்ந்து கொண்டான். மாமி சமையலறையில் இருந்தார். மாமன் வயலுக்குப் போயிருந்ததால் எவரும் ஏகாம்பரம் வந்ததைப் பார்க்கவில்லை.

வயலிலிருந்து திரும்பிய மாமன் மாடுகளுக்கு வைக்கோல் போட வந்தார். ஏகாம்பரத்தைக் கண்டு திடுக்கிட்டார்.

"என்னடா இங்கே உட்கார்ந்திருக்கிறாய்? எப்போ வந்தாய்? அம்மா சௌக்கியமா? என்ன விஷயம்? சரி, சரி, உள்ளே வா" என்று அழைத்துச் சென்றார்.

"அம்மாதான் கட்டிய பசு போல் இருக்கணும் என்று சொன்னாங்க! அம்மா சௌக்கியம். காளை மாடு வாங்கப் பணம் கொடுத்தனுப்பி இருக்காங்க" என்றான் ஏமாளன். மாமியும் அன்புடன் வரவேற்று சாப்பாடு போட்டார்.

அன்று சந்தையானதால் உடனே சென்று ஒரு அருமையான காளை மாட்டைப் பிடித்து வந்தார் மாமா. அம்மா சொன்னபடி மூன்று வாக்கியம் பேசி விட்டதாகக் கணக்கிட்டுக் கொண்ட



ஏமாளன் அதன் பிறகு ஒரு வார்த்தை கூட பேசக் கூடாதென்று தீர்மானித்துக் கொண் டான். கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் சைகையிலேயே பதில் சொன்னான்.

"நானும் உன்னோடு வரட்டுமா?" என்று கேட்ட மாமனுக்குப் பதிலாக தலை அசைத்தான்.

மாமிக்குக் கோபம் வந்தது. ஏமாளன் கர்வமாக இருப்பதாகத் தீர்மானித்துக் கொண்டு "எல்லாம் அவன் போய்க் கொள்வான்" என்று தடுத்து விட்டார்.

காளை மாட்டோடு புறப்பட்டான் ஏமாளன். வழியில் மாடு சிறுநீர் கழித்தது. மாட்டு வேலையெல்லாம் பணியாளும், தாயாருமே பார்ப்பதால் ஏமாளனுக்கு மாட்டைப் பற்றி எதுவுமே தெரியாது. கூடவே வெள்ளாட்டோடு நடந்து வந்த வழிப் போக்கனிடம், "அருமையான மாட் டுக்கு அடியிலே ஓட்டை இருப்பதை மாமா பார்க்காமல் வாங்கி விட்டார். மாமா ஏமாந்ததை நினைத்து அம்மா வருத்தப் படுவார்கள். ஊருக்குப் போய்த் தான் ஓட்டை அடைக்கணும்" என்றான்.

கூட நடந்தவன் 'இவன் சரியான முட் டாள்' என்பதைப் புரிந்து கொண்டான்.

"ஐயோ பாவம்! நீ வருத்தப் படாதே! மாட்டுக்கு நான் ஓட்டை அடைத்துக் கொள்கிறேன். இந்த வெள்ளாடு ஓட்டை இல்லாதது. உனக்கு விருப்பமானால் இந்த ஆட்டுக்கு அந்த மாட்டை மாற்றிக் கொள்ளலாம்" என்றான்.

ஏமாளனுக்கு ஏகப்பட்ட சந்தோஷம்! அம்மாவின் இருமலுக்கு வெள்ளாட்டுப் பால் சாப்பிட வேண்டுமென்று வைத்தியர் சொல்லி இருந்தார். நம்முடைய புத்தி சாலித்தனத்தை அம்மா மெச்சிக் கொள்

மாடு கொடுத்தால் ஆடு தருவேன்!



வார் என்று முடிவு கட்டி மாட்டைக் கொடுத்து விட்டு ஆட்டை வாங்கிக் கொண்டான்.

மாட்டை வாங்கிச் சென்றவன் வேறு பாதையில் சென்று விட்டான்.

சற்று தூரத்திலிருந்து இதைப் பார்த்துக் கொண் டிருந்த இன்னொருவன் ஏமாளன் அருகில் வந்து மாட்டை ஏன் மாற்றிக் கொண்டாய் என்று விசாரித் தான். ஏமாளனின் மடத்தனம் புரிந்தது.

"ஆட்டுக்குப் பின்னாலும் ஓட்டை! நீ ஏமாந்து விட்டாய்! இந்தக் கோழி தினமும் முட்டையிடும். முட்டையி

மாலதி

விருந்து வரும் கோழிக்குஞ்சுகளும் முட்டை இடும். நாளடைவில் உனக்கு ஒரு கோழிப் பண்ணையே சொந்தமாகும். உனக்கு இஷ்டமானால் ஆட்டைக் கொடுத்து கோழியைப் பெற்றுக் கொள்" என்றான்.

ஏமாளனும் மகிழ்ச்சியோடு 'அம்மா வைத் தினமும் முட்டை சாப்பிடச் சொல்லி இருக்கிறார் வைத்தியர். கோழி தான் லாபம்' என்று ஆட்டைக் கொடுத்து கோழியைப் பெற்றுக் கொண்டான்.

வழியில் தாகம் மேலிட கோழியைக் கரையில் வைத்து விட்டு தண்ணீர் குடிக்க குளத்தில் இறங்கினான் ஏமாளன். கோழி பறந்து சென்றது. பின்னால் துரத்திச் சென்ற ஏமாளனால் கோழியைப் பிடிக்க முடியவில்லை.

நடந்ததையெல்லாம் பார்த்துக் கொண்டு வந்த ஒரு நெல்லிக்காய் வியாபாரி ஏமாளனைத் தடுத்து, "கோழியை நான் பிடித்துக் கொள்கிறேன். குளத்தில் யார் குளித்தாலும், தண்ணீர் முகர்ந்தாலும் காசு வாங்கிக் கொள். தண்ணீர் தேனாய் இனிக்கும். கொசுறாக இந்த நெல்லிக் காய்களையும் பெற்றுக் கொள்" என்றான்.

"ஆ! கோழிக்குப் பதில் குளமா? சரியான மடையனாக இருக்கிறானே! கொசுறாக நெல்லிக்காய் வேறு தருகிறான்" என்று ஆனந்தத்தோடு நெல்லிக்காய் களைப் பெற்றுக் கொண்டான்.

கோழியைப் பிடித்தவன் விரைந்து தன்னூர் சென்று விட்டான். நெல்லிக் காய்களைத் தின்ற ஏமாளன் தண்ணீரைக் குடித்தான். தண்ணீர் இனித்தது. வியாபாரி உண்மையே பேசினான் என்ற மகிழ்ச்சி யோடு ஊர் போய்ச் சேர்ந்து தாயாரிடம் நடந்ததைத் தெரிவித்தான்.

'தாயார் ஏன் நம்மைப் பாராட்ட வில்லை என்று ஏமாளனுக்குப் புரிய வில்லை! குளத்தில் தண்ணீர் எடுக்க வருகிறவர்களும், நீராடுகிறவர்களும் காசு கேட்டால் ஏன் சிரிக்கிறார்கள்' என்றும் புரியாமல் விழித்தான் ஏமாளன்.

தீபாவளி



தீபாவளி இன்பத் தீவாவளி
தித்திக்கும் தேன் தீபாவளி
சிறுவர்கள் விரும்பும் தீபாவளி
சிறந்த விழாத் தீபாவளி!


எண்ணெய்க் குளியல் முடித்து
ஏற்ற கோடி உடுத்தி
பண்டம் பலவும் உண்டு
பலரும் மகிழும் தீபாவளி!

வீதி யெங்கும் விழாக்கோலம்
வீடு எங்கும் ஒளிக்கோலம்
புதிய புதிய வெடிகள்
போட்டுச் சிரிக்கும் தீபாவளி!

அகமும் முகமும் மலரும்
அன்பு எங்கும் நிலவும்
ஈகை மிகுந்து உலவும்
ஈடில்லா இன்பத் தீபாவளி!

– எம். சேக் உசேன், வடகரை.
நெல்லை மாவட்டம்.





வீட்டிற்குள் திருடன்!

அரணியூர் கிராமம். இரவு எட்டு மணி. வேலை விட்டுத் திரும்பிக் கொண்டிருந்த கருப்பசாமி சட்டென அவ்வீட்டின் முன் நின்றான்.

'என்னது! பூட்டிய வீட்டிற்குள் சத்தம் கேட்கிறதே!'என மனதுக்குள் நினைத்தான்.

மீண்டும் சத்தம் கேட்கவே "ஏய், பால்பாண்டி, வேலாண்டி, மாயாண்டி, முனியாண்டி எல்லோரும் ஓடி வாங்கடா. சந்தையில் வடை சுட்டு விற்கும் நம்ம பாலம்மா பாட்டி வீட்டில் திருடன் புகுந்து விட்டான்" என்று தொண்டை கிழியும்படி கத்தினான் கருப்பசாமி.

"என்ன! பாலம்மா பாட்டி வீட்டில் திருடனா?" என்றபடி கையில் தடியுடன் தெரு மக்கள் ஓடி வந்தனர்.

வீட்டிற்குள் 'கடகட' 'குடுகுடு'வென பாத்திரத்தை உருட்டும் சத்தம் கேட்டது.

நாட்டாமை நல்லமுத்து "ஏய் திருடா! உனக்கு எவ்வளவு தைரியம்? இரவு எட்டு மணிக்கே திருட ஆரம்பிச்சிட்டியே! மரியாதையா வெளியில் வா. இல்லை கதவை உடைத்துக் கொண்டு உள்ளே வந்து விடுவோம்" என்று எச்சரித்தார்.

அதற்குள் ஆத்திரக்காரன் கருப்பசாமி வீட்டின் மேல் ஏறினான்.

"கருப்பசாமி கீழே இறங்குடா" என்றார் நாட்டாமை நல்லமுத்து.

"நல்லமுத்தண்ணே திருடன் கறுப்பா, சிவப்பா, குட்டையா, நெட்டையா என்று இந்த விளக்கு வெளிச்சத்தில் பார்த்துட்டு இறங்கறேன்" என்றான் கருப்பசாமி.

மெதுவாக ஓட்டைப் பிரித்தான். விளக்கொளி செலுத்தி உள்ளே பார்த்தவன் 'கொல்'லென சிரித்தான்.

ஏண்டா சிரிக்கறே? திருடன் என்ன செய்கிறான்?" என்றார் நாட்டாமை.

அண்ணே! திருடன் இல்லை. ஒரு பூனை பால் செம்புக்குள் தலையை விட்டுட்டு வெளியே எடுக்க முடியாமல் திண்டாடுது'' என்றான் கருப்பசாமி.

எல்லோரும் பெருமூச்சு விட்டனர்!

சந்தையில் வடையை விற்று விட்டுத் திரும்பிய பாலம்மா பாட்டி தன் வீட்டிற்கு முன் நிற்கும் கூட்டத்தைப் பார்த்து பயந்து போனார்.

"பயப்படும்படியா ஒண்ணும் இல்லை" என்று விஷயத்தை தெளிவு படுத்தினார் நாட்டாமை.

பாட்டி கதவைத் திறந்தார்.

"இந்தத் திருட்டுப் பூனை தினமும் பாலைக் குடித்து விட்டுப் போகுதே! இதுக்கு யாரும் முடிவு கட்டக் கூடாதா?" என்று வருத்தப்பட்டார் பாட்டி.

அவசரக்காரன் கருப்பசாமி தன் கையிலிருந்த தடியை எடுத்து பூனை மேல் வீசினான்.

தடி குறி தவறி பாட்டி வைத்திருந்த ஒரே ஒரு மண்பானையின் மீது விழுந்தது. பானை உடைந்தது.


அவ்வளவுதான் பாட்டி கருப்பசாமியைத் துரத்த ஆரம்பித்தார்.

- தி. ஸ்டீபன்,
சென்னியாண்டவர் கோவில்,
வீராலிக்காடு, கோவை மாவட்டம்.

பிருந்தாவனம்

நத்தையின் எடை என்ன?

ஒரு நத்தையின் எடை சுமார் எவ்வளவு இருக்கும்? என்ன ஒரு முப்பது கிராம் அல்லது நாற்பது கிராம் எடை இருக்கும்.



ஆனால் உலகிலேயே மிக அதிகமான எடை உள்ள நத்தை ஆப்பிரிக்காவில் உள்ளது. இது ஒரு கிலோ எடை உடையது. இதன் சிறப்புக்காக இதை கள்ளத்தனமாக மற்ற நாடுகளுக்குக் கடத்துவோர் உண்டு.



இந்த மாபெரும் நத்தை ஆண்டிற்கு 500 வகையான செடிகளை உண்ணுமாம்!

உலகம் முழுவதும் இன்று வியாபார ரீதியாக விநியோகிக்கப்படும் அன்னாசிப் பழங்களில் மூன்றில் ஒரு பங்கு ஹாவாய் தீவில் விளைகின்றன.

கண்ணாடியில் விமான தளம்!

லண்டனில் இருந்து 55 கி.மீ தொலைவில் புதிய விமான தளம் கட்டியிருக்கிறார்கள். இரும்பினாலும் கண்ணாடியினாலும் கட்டப் பட்ட பளபளக்கும் இந்த விமான



நிலையத்தின் உள்ளே செயற்கையான விளக்குகளுக்குப் பதில் இயற்கையான வெளிச்சம் படும்படி செய்திருக்கிறார்கள்.

விமான நிலையத்துக்குப் புதிய இரயில் பாதையையும் போட்டிருக்கிறார்கள். பூமிக்கடியில் ஓடும் இரயில் விமானப் பயணிகளைத் தாமதமின்றி நகரின் மையத்துக்கு ஏற்றிச் செல்லும்.

வைரத்தின் மதிப்பு



தங்கத்தின் மதிப்பு உலக மார்க்கெட்டில் லண்டன் மாநகரத்தில் நிர்ணயிக்கப்படுவதுபோல வைரத்தின் மதிப்பு ஹாலந்து நாட்டின் ஆம்ஸ்டர்டாம் நகரில் நிர்ணயிக்கப் படுகிறது.

– ஆர்.ஆர். பூபதி, திண்டுக்கல்.

மனித மூளை

மனித மூளையின் 80 சதவீதம் நீர்மப் பொருட்களால் ஆனது.

மூளையில் குறைந்த பட்சம் ஆயிரம் கோடி நரம்புத் திசுக்கள் உள்ளன.



மூளையின் இடது பாதி, மொழி மற்றும் பேச்சுத் திறனையும் வலது பாதி உணர்ச்சியையும் கவனிக்கின்றன.


நமது மூளையில் ஒரு நரம்புத் தி

வின்' உருவ அமைப்பைப் போல் மற்ற திசுவின் அமைப்பு இருக்காது.

கருவிலிருக்கும் குழந்தையின் மூளையில் நிமிடத்துக்கு 25,000 திசுக்கள் வீதம் உற்பத்தியாகின்றன.

ஒரு குழந்தை ஏழு வயதை எட்டும் போது அதன் மூளை, எடை, உருவம் ஆகியனவற்றில் முழு வளர்ச்சி பெற்று


– ... பானு, லெட்சுமாங்குடி.



பாராசூட் மூலம் குதிப்பது ஒரு வீர விளையாட்டாகக் கருதப் படுகிறது. இதற்கான சட்ட திட்டங்கள் 1951ம் ஆண்டு உருவாக்கப்பட்டு ஒரு விளையாட்டு மையம் நிறுவப் பட்டது. 1954ம் ஆண்டு அணி அணியாக இவ்விளையாட்டு சர்வதேச அளவில் விளையாடப்பட்டது.

– எம். சகிலா பானு

மதிப்பு அதிகம்!



பல லட்சம் ரோஜா மலர்களைக் காய்ச்சினால்தான் ஒரு பவுண்டு ரோஜா அத்தர் கிடைக்கிறது. அத்தர், தங்கத்தைவிட அதிக மதிப்புள்ளதாய் இருப்பதற்கு இது தான் காரணம்!

ஆதாரம்: பொது அறிவுக்குவியல்.

– பி. தியாகராஜன், பேளுக்குறிச்சி.


ஆக்ஸிஜன்

ஆக்ஸல் என்னும் கிரேக்கச் சொல்லுக்கு அமிலம் என்று பொருள். ஜென்னன் எனும் சொல்லுக்கு உருவாக்குதல் என்று பொருள். ஆக்ஸலும் ஜென்னனும் சேர்ந்து 'அமிலம் தயாரிக்கப் படும் வாயு' என்ற பொருளைத் தருகிறது. இதையே நாம் பிராணவாயு அல்லது உயிர்க்காற்று என்கிறோம்.

– ஆ. தமிழ்துரைசாமி, பாலசமுத்திரம்.



வரை!! ம்...?!




மாவீரன் நெப்போலியன் கையெழுத்து ரொம்பவும் மோசமாகவும் கிறுக்கலாகவும் தான் காட்சி அளிக்கும். அவற்றை சண்டைப் பிரதேசத்தைக் குறிக்கும் வரைபடம் என எண்ணி திருடிச் சென்று விடுவார்களாம் ஒற்றர்கள்!

– க. நந்தகுமார், திருச்சிராப்பள்ளி

மஞ்சள் கொடி

கப்பலின் மேல் மஞ்சள் வண்ணக் கொடி பறந்தால் அதில் இருக்கும் பயணிகளுக்குத் தொற்று நோய் இருக்கிறது என்று பொருள்.

– பி. தியாகராஜன், நாமக்கல்



பழி!

க. இராமச்சந்திரன்

ரகு கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை. அவன் மட்டுமல்ல, யாருமே அதை எதிர்பார்க்கவில்லை.

ஈயக்குழம்பைக் கொட்டிக் கவிழ்த்தது போல் பகல் முழுதும் தகித்த வெயில் திடீரென்று மாறியது. வானத்தில் மேகக் கூட்டங்கள் கரிய யானைகளாய்த் திரண்டன. மழை கொட்டோ கொட்டென்று கொட்ட, வீதியெல்லாம் வெள்ளப் பெருக்கு. கோடையின் கொடுமை தணிந்து கொண்டிருந்தது.

ரகுவுக்கு ஒரே கொண்டாட்டம். இந்த மாலைப் பொழுதில் நண்பர்களுடன் பந்தல்குடி வரை நடந்து போனால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று எண்ணினான்.

ரமேஷ் அவன் திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தான். ஆனந்த் மறுத்தான்.

அவன் மறுப்பதற்குக் காரணம் இருந்தது.

"ரோடெல்லாம் சகதிக்காடு. பஸ், லாரி வேகமாக ஓடும்போது சேறு தெறிக்கும். டிரஸ் எல்லாம் பாழாகும்" என்றான் ஆனந்த்.

"ரோட்டுல போறவன் பார்த்துப் போக மாட்டானா? அப்படி சேற்றை அடித்தால்... பதிலுக்குப் பதில்" என்று உறுமினான் ரமேஷ்.

சுற்றுச் சூழலையே மறந்து ரகுவும், ரமேஷும் முதல் நாள் டீவியில் பார்த்த கிரிக்கெட் மேட்ச் பற்றி விமர்சித்துக் கொண்டுவர, ஆனந்த் மட்டும் ஓரமாக ஒதுங்கியபடி நிதானமாக, கவனத்தோடு நடந்தான்.

"ஏய் சோம்பேறி. சீக்கிரம் வாடா... காரோ, லாரியோ நம்மேலே சேறு அடிக்காது.. அப்படி அடிச்சா, அது பத்திரமாய்ப் போய்ச் சேராது" என்று ரமேஷ் அவனுக்கே உரிய தைரியத்தோடு பேசினான்.

ஆனந்த் வேகமாக அவர்களுடன் நடந்தான்.

பந்தல்குடி எல்லை வந்தபோது கொஞ்சம் கூட எதிர்பார்க்காமல் அது நடந்தது!

அந்த இடத்தில் ரோடு கொஞ்சம் வளைவு. கற்கள் பெயர்ந்து, பெயர்ந்து பள்ளங்கள் அதிகம். சற்று முன்னால் பெய்த மழையில் பள்ளங்களில் தண்ணீர் நிரம்பியிருந்தது. வந்த பஸ் பள்ளத்தில் இறங்கி ஏறியதும் பளீரென்று சேற்றைத் தெளித்தது. ரகு, ரமேஷ், ஆனந்த் மூவர் உடைகளும் பாழாயின.

ரகுவுக்கு கட்டுக்கடங்காத கோபம். ஒரு கல்லைத் தூக்கி, சேற்றை இறைத்த பஸ்ஸை நோக்கி வீசப்போக, பக்கத்திலிருந்த ஆனந்த் தடுத்தான்.

"வேண்டாம் ரகு. தெரியாமல் நடந்த நிகழ்ச்சி இது. பஸ் மீது கல்லெறிந்தால் அப்பாவி ஜனங்கள்தான் பாதிக்கப்படுவார்கள்" என்று ஆனந்த் சொன்னான்.

ரகுவின் கோபம் தணியவில்லை, "யார் பாதிக்கப்பட்டா நமக்கு என்ன? பழிக்குப் பழி வாங்கியே தீரணும்" என்றான்.

"ரகு, பிரச்னையை எங்கிட்ட விட்டுடு. இதே பஸ்காரன் கோவில்பட்டி போயிட்டு ராத்திரி ஒன்பதரை மணிக்கு இந்தப் பாதையில் மீண்டும் வருவான். சேறு தெளிச்ச அதே இடத்தில் முன் சக்கரம் ரெண்டும் பஞ்சர் ஆகி இங்கேயே கிடக்க நான் ஏற்பாடு பண்ணிடறேன்" என்றான் கோபத்துடன் ரமேஷ்.

"என்ன செய்யப்போறே?" என்று ஆனந்த் பயந்து கொண்டே கேட்டான்.

"நீ ஒரு கோழை... உன்கிட்ட நான் சொல்ல மாட்டேன்" என்றவன் ரகுவின் காதுக்குள் மட்டும் ரகசியமாகத் தன் திட்டத்தை விவரித்தான்.

"சபாஷ், சரியான திட்டம்" என்று அவன் முதுகில் தட்டிக் கொடுத்தான் ரகு.

இரவு அவசர அவசரமாகச் சாப்பிட்டு முடித்து, டீவி முன் உட்கார்ந்தான். இலங்கைக்கும் இந்தியாவிற்கும் நடந்த கிரிக்கெட் மேட்ச் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது.

இடையிடையே ரமேஷின் திட்டம் நினைவுக்கு வந்தது ரகுவிற்கு. இந்நேரம்


ரமேஷ் திட்டத்தை நிறைவேற்றியிருப்பான். சக்கரம் இரண்டும் பஞ்சர் ஆகி புஷ்... புஷ்... என்று காற்றுப் போவதை கற்பனையில் கண்டு ரசித்தான்.

சரியான நேரத்தில் மின் தடை..... வீடெல்லாம் ஒரே இருட்டு. எரிச்சலுடன் படுத்தான் ரகு.

ரகு புரண்டு படுத்த போது, அவன் முழங்காலுக்குக் கீழே ஏதோ கடித்த உணர்ச்சி.

லேசான வலி... ஒருவகை அரிப்பு.

துள்ளி எழுந்து டார்ச் லைட்டை



அடித்துப் பார்த்தான்.

ஆயிரங்கால் பூச்சி.. அதுதான் பூரான். அங்கே ஓடிக் கொண்டிருந்தது.

சத்தத்தைக் கேட்டு அவன் அம்மாவும் அலறி அடித்து எழுந்திருக்க "அம்மா... அம்மா என்னைப் பூரான் கடிச்சிருச்சி" என்றான்.

"ஐயோ இது கடிச்சா உடம்பெல்லாம் தடிப்புத் தடிப்பா வருமே... உடனே மருந்து சாப்பிட்டு ஆகணுமே" என்று பதற இவர்கள் அலறலைக் கேட்டு பக்கத்து வீட்டுத் தாத்தா வந்தார்."

"உடனே, அருப்புக்கோட்டை போய் தடுப்பூசி போட்டுக்கோ" என்று யோசனை சொன்னார் தாத்தா.

துளி வெளிச்சமும் இல்லாத இந்தக் கரிய இருட்டில் அருப்புக்கோட்டைக்கு எப்படிப் போவது? என்று யோசித்துக் கொண்டிருந்த போதே...

அவன் அம்மா ரமேஷை அவன் சைக்கிளோடு அழைத்து வந்து விட்டார். ரகு உடனே ஏறி உட்கார்ந்து கொண்டான். சைக்கிளை ரமேஷ் விரட்ட அவனுக்குப் பின்னால் உட்கார்ந்திருந்த ரகுவுக்கு அரிப்புத் தாங்க முடியவில்லை.

"வேகமாகப் போடா... இன்னும் வேகமாகப் போடா" என்று அவனை விரட்ட சைக்கிள் அந்தப் பந்தல்குடி வளைவு வந்த போது திடீரென்று எதன்மேலேயோ ஏறி... படீரென்று கவிழ்ந்தது.

"ஐயோ" என்று அலறிக் கொண்டு ரமேஷ் விழ, அவன் மேலேயே ரகு விழ, சைக்கிளும் விழுந்தது.

கீழே கிடந்த கற்களும், பீங்கானும் அவர்கள் இருவரையும் பதம் பார்த்தன.

உடம்பெல்லாம் ரத்தத் துளிகள்.


வேதனையோடு அந்தக் கற்களைப் பார்த்தான் ரமேஷ்.

கற்கள் அவனிடம் ஏதோ சொல்வது போலிருந்தது.

குற்ற உணர்வு அவர்கள் இருவரின் கண்களையும் குளமாக்கியது.

குறுக்கெழுத்துப் புதிர்





இடமிருந்து வலம்

1. திடப் பொருளான இது உருகாமல் நேராக வாயு நிலையை அடைந்து விடும் (5)
5. நூற்றி ஐம்பது ஆண்டுகள் வரை உயிர் வாழும் விலங்கினம். மெதுவாக நகரும் (2)
8. உலக அதிசயங்களில் ஒன்று. எகிப்து நாட்டில் உள்ளது (4)
12. சிங்கத்தை விட வலிமையான விலங்கு. இது பூனை இனத்தைச் சேர்ந்தது (2)
14. ஒரு செல் உயிரி (3)

வலமிருந்து இடம்

3. அரண்மனையின் பாதுகாப்பிற்கு இது அவசியம் (3)
7. இரண்டாம் உலகப் போரில் இரு நகரங்கள் அழிக்கப்பட்ட நாடு (4)
16. இந்தப் பழத்தை ஊறுகாய் போடலாம் (5)

மேலிருந்து கீழ்

1. குருவிகளில் ஒரு வகை. அதிகாலையில் சத்தம் கொடுக்கும் (5)
2. கெட்டுப் போன உணவுப் பொருட்களில் இவை காணப்படும் (3)
3. நம் நாட்டில் அரிசிக்கு இணையான இன்னொரு உணவு (3)
11. பழங்களில் ஒன்று. கொடியில் காய்க்கும் (4)
13. பாடலுடன் கைகளைத் தட்டி ஆடுவதற்கு இப்பெயர் (3)

கீழிருந்து மேல்

4. தீபாவளி பட்சணங்களில் ஒன்று (2)
6. கல்லில் வடிக்கும் ஓவியங்களை இப்படியும் அழைக்கலாம் (4)
9. அழகின் பெண்பால் (2)
10. வாடிகன் நகரத்தில் வசிக்கும் கிறிஸ்தவர்களின் மத குருவை இப்படியும் அழைக்கலாம் (2)
14. உயிர்களிடத்தில் இதைக் காட்ட வேண்டும் என பாரதியார் சொல்கிறார் (3)
15. குளங்களில், தொட்டிகளில் இது காணப்படும். இவற்றால் வழுக்கும் ஆபத்து உண்டு (2)
16. இமயத்தின் மிக உயர்ந்த சிகரம் (5)

கோ. முத்துக்குமார்,
ஒன்பதாம் வகுப்பு,
அ.மே.நி.பள்ளி,
பெரியதச்சூர் அஞ்சல்,
திண்டிவனம்

விடை - 61 ஆம் பக்கம்

சாயும் கோபுரம்

ஒரு கட்டடம் தன்னுடைய குறையாலேயே மிகவும் புகழ்பெற்றது என்பதை அறியும்போது வியப்பாய் இருக்கும் அல்லவா. எது என்று கண்டுபிடித்து விட்டீர்களா? கோபுரம் என்று சொன்னால் கண்டுபிடித்து விடலாம். ஆம். பைசாவின் சாயும் கோபுரம்தான் அது. இத்தாலிய நகரமான பைசா நகர கேத்தட்ரல் சர்ச்சின் மணி கோபுரமாகத்தான் இது கட்டப்பட்டது. இது சாயாமல் நேராக இருந்திருந்தால் இந்த அளவு புகழ் பெற்று இருக்குமா என்பது சந்தேகமே.

பைசா கோபுரம் வெள்ளை சலவைக் கற்களால் ஆன ஓர் அற்புதமான கட்டடம். எட்டடுக்குகளால் ஆன இந்தக் கோபுரம் வட்ட வடிவிலானது. அடித்தளத்தில் இச்சுவரின் கனம் 13 அடி. 179 அடி உயரமுள்ள இக்கோபுரத்தில் பெரிய மணி ஒன்று உள்ளது. உச்சியினை அடைய 300 படிகள் உள்ளன. உச்சியில் இருந்து பைசா நகரத்தின் அழகையும் 6 மைல் தூரத்தில் உள்ள கடலின் காட்சியையும் ரசிக்கலாம்.

12 ஆம் நூற்றாண்டில் இதற்கான வேலை தொடங்கியது. 14 ஆம் நூற்றாண்டின் மத்தியில்





கிட்டுக்குக் கிடைத்த லட்டு!

பையன் பேரோ கிட்டு
படிக்கும் வகுப்போ எட்டு!
கையில் வெள்ளித் தட்டு
தட்டு நிறைய லட்டு!
வீட்டுக்கு வந்த பட்டு
வேண்டும் என்றான் லட்டு!
முகத்தைச் சுளித்தான் கிட்டு
மாமா வைத்தார் குட்டு!
கிட்டு தந்தான் லட்டு
கடித்துத் தின்றான் பட்டு!
வருவதைப் பகிர்ந்து இட்டு
வாழ்வை மகிழ்வாய் ஓட்டு!

- எஸ். மீனா, கோவில்பட்டி.

தான் கட்டி முடிக்கப்பட்டது. இதில் ரோமானிய மற்றும் இஸ்லாமிய கட்டடக் கலை சாயல் தெரிகிறது. இஸ்லாமிய கட்டடக் கலை சாயல் தெரிவது வியப்புக்குரிய செய்தி. இதை வடிவமைந்தவர்கள் போனானா பிசானோ மற்றும் வில்லியம் இன்ஸ்ப்ரக். இக்கோபுரப் பணி முடிவடைந்த போது அதைக் காண அவர்கள் இல்லை.


இக்கோபுரம் சாய்வாக இருக்கும்படியே தான் கட்டப்பட்டது எனச் சிலர் கூறுகின்றனர். ஆனால் இக்கருத்து ஏற்புடையது இல்லை. கட்டடவியல் வல்லுநர்கள் மண்ணைப் பற்றி அறிந்து அதற்கேற்றபடி சில வழிமுறைகளை கையாண்டனர். அப்படியும் மூன்றாம் அடுக்கு முடிவடைந்த போது கோபுரம் சாயத் தொடங்குவதை உணர ஆரம்பித்தனர். இதைச் சரிக்கட்ட முயன்றனர். ஆனால் கோபுரம் கட்டடப் பணி நடைபெற்றுக் கொண்டிருந்த நூற்றாண்டிலேயே நேர்க்கோட்டில் இருந்து ஓரடி சாய ஆரம்பித்திருந்தது.

இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் இது 14 அடி சாய்மானத்தை எட்டியது. இப்போது 17 அடியை நெருங்குகிறது. இப்பிரச்னை யைத் தீர்க்க பெரும் பணம் ஒதுக்கப்பட்டு உள்ளது. சீன கட்டடவியல் வல்லுநர் ஒருவர் பைசா கோபுரத்தை நேர் செய்யும் பணியைச் செய்ய முன்வந்துள்ளார். சீனாவில் இம்மாதிரி பல கட்டடங்களை நேராக்கிய அனுபவம் தமக்கு உண்டு எனக் கூறுகிறார்.

மிகவும் புகழ்பெற்ற விஞ்ஞானியான கலிலியோ புவியீர்ப்பு பற்றிய தன் கருத்தை நிரூபிக்க 1564ஆம் ஆண்டு பைசா கோபுரத்தைப் பயன்படுத்தினார் எனக் கூறுகின்றனர். வெவ்வேறு எடையுள்ள இரு பொருட்கள் ஒரே நேரத்தில் கீழே விழும் போது ஒரே சமயத்தில் பூமியை வந்தடையும் என்பதே அச்சோதனை. கலிலியோ பைசா கோபுரத்தைப் பயன்படுத்தினாரோ இல்லையோ இக்கோபுரம் அத்தகையச் சோதனைகளுக்கு ஏற்புடையதே.


அதெல்லாம் சரி. சாய்ந்து வரும் பைசா கோபுரம் இன்னும் கீழே விழாமல் இருப்பது வியப்புக்குரிய விஷயமே! அறிவியல் ரீதியாக, ஒரு பொருளின் புவியீர்ப்பு மையத்தில் இருந்து வரும் பூமியை நோக்கிய நேர்கோடு, பொருளின் வெளியே விழுந்தால் அப்பொருள் விழுந்து விடும். பைசா கோபுரத்தின் புவியீர்ப்புக் கோடு இன்னும் பைசா கோபுரத்திலேயே விழுகிறது. விரைவில் வெளியே விழுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதற்குள் பைசா கோபுரம் நேர் செய்யப்பட வேண்டும்; செய்யப்படும் என நம்புவோம்!

— கோ. சதீஷ்குமார்



தீரசேனன் வென்ற திகில் மலை!
5
கதை : விஜி
படம் : தாமரை
அண்ணா, இதைச் சிறிது நேரம் வைத்திருங்கள். குதிரையைக் கொண்டு வந்து விடுகிறேன்.
உதயசேனா! சிறியவன் அற்புத நீரைக் கொண்டு சென்றால் நமக்குதான் அவமானம்!
ஆமாம் அற்புத நீருக்கு பதில் உப்பு நீரை நிரப்பி விடுவோம்.
தீரசேனா! அற்புத நீரை எடுத்துக் கொண்டு விரைந்து செல். நாங்கள் பின்னால் வருகிறோம்.
தீரசேனன் அற்புத நீரைக் கொடுக்க மன்னருக்கு நோய் அதிகமாகிறது.
வைத்தியரே என்ன ஆயிற்று?
தீரசேனா நீ ஓய்வெடு. நான் கவனிக்கிறேன்.
ஐயோ இது உப்பு நீராக இருக்கிறதே! உடனே அற்புத நீர் கொடுக்க வேண்டும்!
ராஜசேனன், உதயசேனன் இருவரும் அரண்மனையை அடைந்தார்கள்.
வைத்தியரே இதுதான் உண்மையான அற்புத நீர். உடனே தந்தைக்கு கொடுங்கள்.
கவலை வேண்டாம். மன்னர் குணம் பெற்று வருகிறார்.


அரச குமாரர்களே இன்னும் சில நிமிடங்களில் அரசர் பூரண குணம் பெற்று விடுவார். நான் பிறகு வந்து பார்க்கிறேன்.
அரசர் படுக்கையில் உட்கார்ந்தார்.
தந்தை எழுந்து விட்டார்.
ஆமாம். உடனே குணமாகி விட்டதே!
மூவரில் அற்புத நீரைக் கொண்டு வந்தது யார்?
நாங்கள் இருவரும் தான்.
தீரசேனன் எங்கே?
அவன் தங்களை உப்பு நீர் கொடுத்து ஏமாற்றி விட்டான்!
உண்மை தானா?
ஆம் தந்தையே!
தீரசேனனை அழைத்து வாருங்கள்.


தீரசேனன் அழைத்து வரப்பட்டான்.
தந்தையே தாங்கள் பூரண குணம் பெற்று விட்டீர்களா?
துரோகி, என்னை ஏமாற்றிய நீ நாட்டை விட்டு வெளியேறு.
நான் குற்றமற்றவன்.
உன் விளக்கம் தேவையில்லை.
தீரசேனன் வருத்தத்துடன் நாட்டை விட்டுச் சென்றான்.
போகும் வழியில் வறுமையால் வாடியவர்களுக்கெல்லாம் வற்றாத கூழ் கொடுத்து பசி தீர்த்தான்.
பசி தீர்த்த மகராசன் வாழ்க!
நீ நல்லா இருக்கணும்.
அன்றிரவு –
நான் குற்ற மற்றவன் என்பதை நிரூபிக்க வேண்டும். என்ன செய்வது?



ராகினி தேவியால் மட்டுமே முடியும். காலையில் கிளம்ப வேண்டியது தான்.
காலையில் கிளம்பினான் தீரசேனன்.
என்ன? அரண்மனை விநோதமாக உள்ளதே! அருகில் காவலர்கள் எவரையும் காணோம். எப்படிச் செல்வது?
தீரசேனன் மோதிரத்தை எடுத்தவுடன் –
ஆ! கதவு தானாக திறக்கிறதே!
ராகினி தேவியும் மன்னரும் தீர சேனனை நன்கு உபசரித்தார்கள்.
தீரசேனன் நடந்தவற்றைக் கூறினான்.
என் உயிரைக் காப்பாற்றிய வருக்கு நான் உதவ விரும்பு கிறேன்.
புறப்படு ராகினி.
இருவரும் நாட்டிற்குத் திரும்பினர். அரண்மனையில் –
ராகினி தேவியுடன் வந்து விட்டானே!
நம் திருட்டுத்தனம் வெளிப்பட்டு விடுமே!
நாடு கடத்தப் பட்டவன், இங்கு ஏன் வந்தாய்?
அரசே! என்னை பேச அனுமதிக்க வேண்டும்.


சொல்!
நான் பக்கத்து நாட்டு இளவரசி.
ராகினி தேவி நடந்ததைக் கூறி முடித்தாள்.
தவறு இழைத்து விட்டேனே! ராஜசேனன், உதயசேனனை நாடு கடத்துங்கள்.
சற்று பொறுமையாக இருங்கள்.
உன் மேல் வீண் பழி சுமத்தினவர்களை விட்டு விடுவதா?
அவர்களுக்குத் தண்டனை வாங்கித் தருவது என் நோக்கமல்ல. நான் நிரபராதி என்பதை அறிந்து கொண்டீர்களே, அது போதும்.
தீரசேனா எங்களை மன்னித்து விடு.
பரவாயில்லை அண்ணா.
சகோதரர்கள் மூவருக்கும் திருமண ஏற்பாடு நடந்தது.
தீரசேனன் ராகினி தேவியை மணந்து நாட்டை சிறப்பாக ஆட்சி செய்தான்.
முற்றும்

எஸ். சுஜாதா





மியாவ்... மியாவ்...

காட்டு விலங்குகளாக இருந்த பூனைகள் இன்று வீட்டு விலங்குகள். ஆம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பூனையின் பயனை அறிந்த மக்கள் அவற்றைத் தங்கள் வீட்டு விலங்குகளாக வளர்க்க ஆரம்பித்தனர்.

எலி மற்றும் சுண்டெலிகளை வேட்டையாடுவதால் இன்று கோடிக்கணக்கான பூனைகள் நம் வீடுகளில் செல்லப் பிராணிகள்.

சாதுவான இப் பூனை இனத்தைச் சேர்ந்தவைதான், நம்மை நடுங்க வைக்கும் விலங்கான புலி.

எல்லா அம்மாக்களைப் போலவே பெண் பூனைகள் சிறந்த தாய்மார்கள்.

தாய்ப் பூனை ஒன்பது வாரங்கள் வரை தன் குட்டிகளை வயிற்றில் சுமக்கிறது. குட்டி பிறக்கும் நேரம் அறிந்து தாய் அமைதியான, இருட்டான இடத்தை தேர்ந்தெடுத்து தங்குகிறது. அங்கு குட்டிகளை ஈன்றெடுக்கிறது.

எத்தனை குட்டிகள் பிறக்கும்?

தாய்ப் பூனை ஒரு முறைக்கு ஐந்து குட்டிகள் வரை ஈன்றெடுக்கும். ஒவ்வொரு குட்டியும் சிறிது இடைவெளி விட்டுப் பிறக்கும். பிறந்த குட்டியின் மூக்கையும், வாயையும் தாய் தன் நாக்கால் துடைத்து குட்டி சுவாசிக்க உதவி செய்யும்.

குட்டியை தாய் தன் வாயால் கவ்வி





பூனை கத்துவது ஏன்?

- பூனைகள் 'மியாவ்' என குரல் கொடுப்பதற்குக் காரணம் மற்ற பூனைகளுக்கு தகவலைத் தெரிவிப்பதற்குத்தான்.
- சில நேரங்களில் மனிதர்களின் கவனத்தை ஈர்க்கவும் குரல் கொடுப்பதுண்டு.
- பிறந்த ஒரு வாரத்திலிருந்தே குரல் எழுப்பத் துவங்கி விடுகின்றன.
- பூனைக்கு பக்கத்திற்கு 12 வீதம் 24 மீசை முடிகள் இருக்கும்.

நேசத்தை விரும்புமா?

பூனைகள் பழகினால் அன்பாக நடந்து கொள்கின்றன. அவை தங்கள் எஜமானர் தொடுவதையும், தடவிக் கொடுப்பதையும், தூக்குவதையும் மிகவும் விரும்புகின்றன.

அருகே வைத்துக் கொள்ளும். இதனால் குட்டிக்கு எந்த விதக் காயமும் ஏற்படாது. மீண்டும் ஒரு முறை குட்டியைச் சுத்தம் செய்யும் தாய். இதற்குள் அரை மணி நேரம் கடந்து விடும். பின் அடுத்தக் குட்டியை ஈன்றெடுக்கும்.

கண் திறப்பது எப்போது?

குட்டிகள் பிறந்து ஒரு வாரம் வரை கண்களைத் திறப்பதும் இல்லை, காதால் கேட்பதும் இல்லை. ஆனால் நல்ல மோப்ப சக்தியைப் பெற்றிருக்கும். தாய்ப்பாலே உணவு.

ஒரு வாரத்திற்குப் பின் கண்களைத் திறந்து உலகத்தைப் பார்க்கின்றன இக்குட்டிகள். எல்லாக் குட்டிகளின் கண்களும் நீலநிறத்திலேயே காணப்படும். குட்டிகள் வளர்ந்த பின்



● பூனைகள் சிறந்த வேட்டைக் காரர்கள். சூப்பர் சாம்பியனான பூனை ஒன்று ஒரு நாளைக்கு 5 அல்லது ஆறு எலிகள் வீதம் ஆறு வருடங் களுக்கு 12,480 எலிகளை சாப்பிட் டுள்ளது!

● பொதுவாக பூனைகள் இரவு நேரங்களில் வெளியே செல்கின்றன. காட்டுப் பூனைகள் இரவில் மட்டுமே வேட்டையாடுகின்றன.

● குட்டிகள் பிறக்கும் போது மிகவும் சிறியதாகவே இருக்கும். அவற்றின் நீளம் 12 செ.மீ. தான் இருக்கும் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

மஞ்சள், பச்சை, காப்பி நிறங்களில் கண்கள் மாறி விடும். சில பூனைகளின் கண்கள் நீல நிறத்திலேயே இருப்பதும் உண்டு.

பூனைகளுக்கு விருப்ப மான உணவு இறைச்சியும் மீனும்தான். வாய்ப்புக் கிடைத்தால் பால், தயிர் போன்றவற்றையும் ஒரு பிடி பிடிப் பதுண்டு!

குட்டிகள் பிறந்த ஒரு மாதத்தில் இறைச்சி சாப்பிடப் பழகுகின்றன. இரண் டாவது மாதத்தில் தாயிடமிருந்து பால் குடிப்பதை நிறுத்தி விடுகின்றன.

விளையாடுவது எப்படி?

இரண்டு மாத மான குட்டிகள் விளையாடுவதை மிகவும் விரும்பு கின்றன. உருளக் கூடிய சின்னச் சின்ன பொருட் களை உருட்டி விளையாடுகின்றன. ஓடி, துரத்தி பல வித சாகசங்களைச் செய்கின்றன. இதன் மூலம் வேட்டை யாடுவதை கற்றுக் கொள்கின்றன.

எலியைப் பிடிப்பது எப்படி?

அம்மா பூனை இருட்டு நேரத்தில் வேட்டையாடக் கிளம்பும். தனது ஒளி வீசும் கண்களை உருட்டியபடி மெதுவாக இரையைத் தேடும். உணவு தேடி வெளி வரும் எலி, சிறு பறவைகளை கண்காணித்து லபக்கென்று



என்ன ஒற்றுமை? — போட்டி முடிவு

போட்டி எளிமையாக இருந்திருக்கிறது என்பதை கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கையிலிருந்தே அறிய முடிகிறது. பெரும்பாலானோர் சரியான விடைகளையே எழுதியிருப்பதால் பரிசுக்குரியவர்கள் குலுக்கல் முறையிலேயே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர்

1. ரா. சிவராமன், இராஜபாளையம்
2. மு. நாகேஸ்வரி, பெருங்கட்டூர், திருவண்ணாமலை மாவட்டம்
3. க. சுகிர்தமூர்த்தி, ஐந்தாம் வகுப்பு, மாமல்லன் மேல் நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்
4. டி. ஆல்வின், ஐரேனிபுரம், கன்னியாகுமரி மாவட்டம்
5. ஞா. செல்வகணபதி, கீழ்க்கொடுங்காலூர், வந்தவாசி வட்டம்
6. டி. நேமலதா, மன்னார்குடி
7. வி. கிருஷ்ணவேணி, பத்தமடை, நெல்லை மாவட்டம்
8. இரா. சண்முகம், சிவகங்கை
9. எம். ஸ்ரீவித்யா, கும்பகோணம்
10. மா. சிவசங்கர் பாரதி, ஒன்பதாம் வகுப்பு, கொங்கணாபுரம் அஞ்சல், சேலம் மாவட்டம்
11. எஸ். வெண்ணிலா, உவரி, நெல்லை மாவட்டம்
12. ஜி.எஸ். சங்கீதா, கரையோரத்துக்காடு, நாமக்கல் மாவட்டம்
13. நா. சேதுராமன், சாயிபாபா மிஷன் போஸ்ட், கோவை
14. யு. துர்கா, வீரேஸ்வரம், திருச்சி மாவட்டம்
15. ரா. சுப்பிரமணியன், அம்பத்தூர், சென்னை

சரியான விடை

முதல் படத்தின் கடைசி எழுத்து அடுத்த படத்தின் முதல் எழுத்தாக அமைந்திருக்கிறது.



பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.

பாய்ந்து பிடித்து விடும்.

இரையை இழுத்துக் கொண்டு தன் இருப்பிடத்தை அடையும். குட்டிகளை அழைத்து எலியைக் காட்டி எப்படி வேட்டையாடுவது என்று பயிற்சி அளிக்கும்.

பூனையின் காதுகள்

பூனைகள் ஓய்வாக அமர்ந்திருக்கும் போது அவற்றின் காதுகள் முன்னோக்கி இருக்கும். வேட்டையாடும் போது காதுகள் நிமிர்ந்து நேராக நிற்கும்.

பூனை வால் ஆட்டுவது ஏன்?

பூனையின் வால் இந்தப் பக்கம் அந்தப் பக்கம் என்று மாறி மாறி ஆடிக் கொண்டிருந்தால் அவை கோபமாக இருப்பதாக சிலர் நினைக்கிறார்கள். அது தவறு. 'அடுத்து என்ன வேலை செய்யலாம்?' என்று பூனை யோசிப்பதே வாலாட்டலுக்குக் காரணம்.

இவை மகிழ்ச்சியாக இருக்கும் போது வால் காற்றில் நிமிர்ந்து நேராக நிற்கும்.

எப்பொழுது பூனையின் வால் மிகவும் சுறுசுறுப்பாக இருக்கும் தெரியுமா? நாயைப் பார்த்தவுடன்தான்!

கோகுலம் க்விஸ்

1. பூனைகளின் உணவு என்ன?
2. குட்டிகளின் கண்கள் என்ன நிறம்?
3. குட்டிகள் விளையாடுவது ஏன்?
4. எவற்றை வேட்டையாடுகின்றன?
5. பூனை வேட்டையாடும் போது காது எப்படி இருக்கும்?

விடை : 1. இறைச்சி, மீன், பால், தயிர், 2. நீலம், 3. வேட்டையாடுவதைக் கற்றுக் கொள்கின்றன, 4. எலி, சிறிய பறவைகள், சிறிய விலங்குகள், 5. நிமிர்ந்து நேராக நிற்கும்.

கல்லை ஜீரணித்த சிலாதர்!

முனிவர் பிச்சை கேட்டு வந்து கொண்டிருந்தார்.

"பவதி பிட்சாம் தேஹி!"

"ஏம்மா! வாசலிலே தினமும் பிட்சைக்கு வருகிறாரே, அந்த ரிஷிக்குக் கண் தெரியாதா?" என்று கேட்டான் ஐந்து வயதுக் குழந்தை சிலாதன்.

"ஆமாமடா கண்ணா! பாவம்" என்றபடி அவனது அன்னை சாதத்தை பிட்சா பாத்திரத்தில் போட்டார்.

அவர் உள்ளே சென்ற பிறகு பொடிக் கற்கள் நாலைந்தைப் பொறுக்கி அவரது உண்கலத்தில் போட்டான் சிலாதன். அவர் கண் தெரியவில்லை என்று பொய் சொல்கிறாரோ என்பது அவனது சந்தேகம். முனிவரோ நிஜக் குருடர் ஆனதால் கல்லையும் சேர்த்துச் சாப்பிட்டு விட்டார். சிலாதனின் மனம் வேதனைப்பட்டது.

சிலாதன் சிறந்த சிவபக்தனானான். வேத வேதாந்தங்களைக் கற்றுத் தேர்ந்தான். எவருக்கும் எண்ணத்தாலும் தீங்கு நினைக்காத நல்லவனாய் வளர்ந்தான்.

யோக பலத்தால் ஒருமுறை யமலோகம் சென்றார். யமதர்மன் அவரை வரவேற்று யமபட்டணம் முழுவதையும் சுற்றிக் காட்டினார். அங்கே ஒரு பெரிய பாறையைக் கண்ட சிலாதர், "இது என்ன?" என்று கேட்டார்.

"பூலோகத்தில் நன்மையோ தீமையோ எது செய்தாலும் அது இங்கே பன்மடங்காய் பெருகிவிடும். சிலாதன் என்ற சிறுவன் ஒரு குருட்டு யோகியின் பிட்சா பாத்திரத்தில் கற்களைப் போட்டு விட்டான். அவரும் அதைச் சாப்பிட்டு விட்டார். அந்தக் கற்கள்தான் பாறையாய் வளர்ந்திருக்கின்றன. சிலாதரின் ஆயுள் முடிந்தவுடன் இங்கு வருவார். அப்பொழுது இந்தப் பாறையைப் பொடித்து உண்ண வேண்டும் என்பது அவர் செயலுக்கான தண்டனை" என்றார் யமன்.

சிலாதர் திடுக்கிட்டார். விளையாட்டாய் செய்த செயல் எவ்வளவு பெரிய தண்டனையாய் விளைந்திருக்கிறது என்று வருந்தினார்.


"இனியும் இந்தப் பாறை வளராமல் பூலோகத்திலேயே இந்தப் பாவத்தைக் கழிக்கப் பரிகாரம் இருக்கிறதா?" என்று கேட்டார்.

"இந்த அளவுப் பாறையை தினமும் கரைத்துக் குடிக்க ஆரம்பித்தால் இந்தப் பாறை கரைந்து விடும்" என்றார் யமன்.

பூலோகம் திரும்பிய சிலாதர் யமலோகத்தில் பார்த்த அதே அளவுப் பாறையைத் தேர்ந்தெடுத்தார். தினமும் செதுக்கிப் பொடித்து உணவில் கலந்து உண்டார். பாலில், நீரில் கரைத்துக் குடித்தார்.

பிள்ளைப் பேறு வேண்டி திருவையாறு சென்று அயனரி தீர்த்தத்தில் நீராடி கடும் தவம் செய்தார்.

கைலாயத்தில் பார்வதி தேவி யோகத்



ஆர். பொன்னம்மாள்

தில் இருந்தார். சிவனுக்குக் காவலாக நந்தியையும், தனது தோழி உத்தாம குசுமையையும் வைத்திருந்தார்.

ஆடி என்ற அசுரன் தவம் செய்து பிரம்மாவிடம் ஏராளமான வரங்கள் பெற்றிருந்தான். பார்வதி யோகத்திலிருந்ததால் சிவனைக் கொல்ல இதுவே தருணம் என்று ஒரு பாம்பாக மாறி சிவனிருக்கும் குகைக்குள் புகுந்து விட்டான்.

அழகிய பெண் வடிவெடுத்து அருகே வந்த ஆடியை சிவ பெருமான் சூலத்தால் குத்திக் கொன்றார். ஆடியின் அலறல் சத்தம் கேட்டு உள்ளே வந்த உத்தாம குசுமையும், நந்தியும் தங்கள் காவலில் தவறு நேர்ந்ததை எண்ணித் தலை குனிந்தனர்.

அதே சமயம் அங்கே வந்த பார்வதி, "நந்தி! நீ பூலோகத்தில் பிறக்கக் கூடாது" என சபித்து விட்டார்.


பின்னர் கருணை மேலிட ''பன்னிரெண்டு வருஷங்களே உனக்கு இந்தத் தண்டனை'' என்று சாப விமோசனமும் அளித்தார்.

நந்தி அப்போது, "எம்பெருமானே! நான் ஒரு தாயின் வயிற்றில் கருவாய்க் கிடந்து அவதிப்பட விரும்பவில்லை'' என்று சிவ பெருமானை வேண்ட, சிவபெருமான் அவரைக் குழந்தையாக்கி, மாணிக்கப் பெட்டகத்தில் வைத்து பூமிக்கு அனுப்பினார்.

நிலத்தை உழுத சிலாதர் கையில் மாணிக்கப் பெட்டி கிடைத்தது. குழந்தை செப்பு நிறத்தில், 'கிண்'ணென்று திடமாக இருந்ததால் 'செப்பேசுவரன்' என்ற பெயர் சூட்டி அருமையாய் வளர்த்து வந்தார்.

குழந்தை பன்னிரெண்டு வயதில் மடிந்து விடும் என்ற நாரதர் வாக்கால் கலக்கமுற்றார் சிலாதர். ஆனால் தவம் செய்து சிலாதர் இருக்கும் வரை பூமியில் வாழும் வரத்தைப் பெற்றான் செப்பேசுவரன்.





✉ நூற்றாண்டு விழா காணும் அமரர் கல்கி அவர்களைப் பற்றியும், அவருக்கு குழந்தைகள் மீதுள்ள ஈடுபாட்டையும் அறிந்து நெகிழ்ச்சியடைந்தேன்!

– பா. சுந்தர், பத்தாம் வகுப்பு,
அ.மே.நி.பள்ளி, வத்தலக்குண்டு.

✉ 'ஊறுகாய் ராணி' கதை சுவையாக இருந்தது. ஆனால் கண் நோயை குணப்படுத்துவது வைட்டமின் 'சி' அல்ல. 'ஏ'தானே!

– நி.சு. பாலசுப்ரமணியன்,
திருவண்ணாதபுரம்,
நெல்லை மாவட்டம்.

தவறை சுட்டிக் காட்டியதற்கு நன்றி. வைட்டமின் 'ஏ' தான் கண் நோயைக் குணப்படுத்தும்.

– ஆர்

✉ பிறர் பொருளை வைத்திருந்தால் மனம் அலை பாயும். மற்ற விஷயங்களில் கவனம் செலுத்த முடியாது என்பதை அழகாக எடுத்துக் காட்டியது 'மணிபர்ஸ்' படக்கதை.

– டி.கே. சீனிவாசன்,
திருவண்ணாமலை.

✉ ஹவுஸ் மார்ட்டின், முதலைகள், கிரிக்கெட் தாத்தா பிராட்மேன் பற்றிய செய்திகள் நன்று.

– ஆர். விவாகர், மிட்டூர்,
சேலம் மாவட்டம்.

✉ ரன் சராசரி 99.94 எடுத்து, யாரும் எட்ட முடியாத சாதனையைப் படைத்திருக்கிறார் டான் பிராட்மேன். என் அபிமான டென்னிஸ் வீரரின் சாதனையைக் குறிப்பிட்டு எழுதியதற்கும் விளையாட்டுச் செய்திகளை அதிகப்படுத்தியதற்கும் பாராட்டு!

– எம். சாதனா, எட்டாம் வகுப்பு,
திருவாரூர்.

✉ 'கூண்டிற்குள் என்ன?' செய்து பார்த்தேன். அட! கொரில்லாவும் வரிக்குதிரையும் மாறி மாறி வந்து என்னையும் தம்பியையும் சந்தோஷப்படுத்தியது!

– ரா. அப்துல்காதர்,ஒன்பதாம் வகுப்பு,
அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,
சென்னை.

✉ அரிசி வெந்து போவது, அப்பளம் பொரிவது, கடுகு வெடிப்பது ஏன்?. இது போன்ற விஷயங்களை நான் யோசித்துப் பார்த்ததுகூட இல்லை. இனி அம்மா சமைக்கும் போது நானும் ஆஜராகப் போகிறேன்.

– எஸ். சரண்,
ஆறாம் வகுப்பு,
மேட்டுப் பாளையம்,
கோவை.

நெகிழ்ச்சியடைந்தேன்!

✉ 'ஒன்பதாம் வீடு' தொடர் கதையில் சித்ரா போட்டியில் வென்று பாரீஸுக்குச் செல்வது நானே செல்வது போன்ற திருப்தியை அளித்தது.

– ஆர். கலாராணி,
திருக்காட்டுப்பள்ளி.

✉ பதினான்கு மாதங்களாக வெளி வந்த நீண்ட தொடர்கதை நிறைவாக முடிந்ததில் மகிழ்ச்சி.

– கே. ராமசாமி,
பத்தமடை, நெல்லை மாவட்டம்.

✉ வெ. நல்லதம்பியின் 'ஒன்பதாம் வீடு' தொடர்கதையின் கருத்து அருமை. ஸ்யாமின் படங்கள் அழகு.

– ஜோதி,
செந்தில், பழனி,
திண்டுக்கல் மாவட்டம்.



பட்டாசு வெடிக்கலாம் பாதுகாப்பாய் இருக்கலாம்!

● பட்டாசு வெடிக்கும்போது தளர்வான உடைகளையோ, எளிதில் தீ பற்றும் உடைகளையோ அணியாதீர்கள்.

● வீட்டிற்குள் கண்டிப்பாக வெடிகளை பயன்படுத்தாதீர்கள். மைதானம், ஆள் நடமாட்டம் இல்லாத இடமாகத் தேர்ந்தெடுத்து பட்டாசுகளை வெடிக்கலாம்.

● பெரியவர்களின் உதவியின்றி ஒருபோதும் வெடிக்க வேண்டாம்.

● பட்டாசுகளை கையில் வைத்தோ, மேலே தூக்கிப் போட்டோ வெடிக்காதீர்கள்.

● தகர டப்பாக்கள், பாட்டில்களுக்குள் பட்டாசுகளை வைத்து மூடி கொளுத்தாதீர்கள்.

● சமையலறை, எரியும் விளக்கு அருகில் பட்டாசுகளை வைக்காதீர்கள்.

● மோட்டார் சைக்கிள், கார், ஆட்டோ போன்றவற்றிற்கு அருகில் ஒருபோதும் வெடிக்காதீர்கள்.

● பட்டாசு வெடிப்பதற்கு தீக்குச்சி, மெழுகுவர்த்தி பயன்படுத்துவதைத் தவிர்த்து நீளமான ஊதுபத்தியைப் பயன்படுத்துங்கள்.

● பற்ற வைத்த பிறகு வெடிக்காத பட்டாசுகளைக் கையில் எடுத்துப் பார்க்காதீர்கள்.

● ஆடு, மாடு, நாய் போன்ற விலங்குகள், பறவைகள் அருகில் பட்டாசு வெடிக்க வேண்டாம்.

● மத்தாப்பு கொளுத்தி விட்டு கம்பிகளை ஓரமாகப் போட்டு விடுங்கள். இல்லையென்றால் காலைப் பதம் பார்த்து விடும்.


● குடிசைகள், ஓலைக் கூரைகள் உள்ள இடங்களில் பட்டாசு வெடிப்பதைத் தவிர்த்து விடுங்கள்.

● தீப்பெட்டி, மெழுகுவர்த்தி, லைட்டர், மண்ணெண்ணெய் போன்றவற்றை எடுத்துக் கொண்டு, பட்டாசு கடைகளுக்குச் செல்லாதீர்கள்.

● ஒவ்வொரு முறை பட்டாசைப் பயன்படுத்திய பிறகு மறக்காமல் கைகளை சோப்புப் போட்டுக் கழுவி விடுங்கள்.

கோலப் போட்டி முடிவுகள்


எஸ். வேங்கடலட்சுமி,
குமரன் நகர்,
திருச்சி.



எஸ். சவிதா,
மேட்டூர் அணை.



ந. பூஷாவளி,
சேலையூர், சென்னை.




வி. சுபஸ்ரீ,
ஐந்தாம் வகுப்பு, பெஸ்ட் மெட்ரிகுலேஷன் பள்ளி,
சீர்காழி.






டி. அசோக், அம்மன்கோவிலூர்,
சேலம்.



எம். உமா,
ஐந்தாம் வகுப்பு,
பீளமேடு, கோவை.



இரா. கௌதம், மேட்டூர் அணை,
சேலம் மாவட்டம்



பலகாரங்கள் அனைத்தும் அவனுக்கே!

ஒருநாள் வகுப்பறையில் மாணவர்களின் திறமையைச் சோதித்துப் பார்க்க ஆசிரியர் விரும்பினார். அதற்காக வடை, முறுக்கு முதலிய தின்பண்டங்களைக் கொண்டு வந்தார்.

பிறகு மாணவர்களைப் பார்த்து "இந்தத் தின்பண்டங்கள் எல்லாம் உங்களுக்குத் தான் தரப் போகிறேன். ஆனால் அதற்கு முன் ஒரு நிபந்தனை. என்னிடம் ஒரு புத்தகம் உள்ளது. அதிலுள்ள ஒவ்வொரு பாட்டையும் நான் ஒருமுறை படித்துக் காட்டிவிட்டு உங்களிடம் தருவேன். நீங்களும் அதே பாட்டை முதலில் பார்த்துப் படிக்க வேண்டும். பிறகு புத்தகத்தை நான் வாங்கிக் கொண்டு மறுபடியும் ஒரு முறை அந்தப் பாட்டையே படிப்பேன். அதை நீங்கள் பிழையின்றி ஒப்புவிக்க வேண்டும். தட்டுத் தடங்கல் இல்லாமல் சொல்லப்படும் ஒவ்வொரு பாட்டிற்கும் ஒரு பலகாரம் வீதம் கொடுப்பேன்" என்று சொன்னார்.

மாணவர்கள் எல்லோரும் சரி என ஒப்புக் கொண்டார்களே தவிர ஒருவரும் சரியாகச் சொல்லவில்லை. ஆனால் அவர்களில் ஒரு மாணவன் மட்டும் எல்லாப் பாடல்களையும், தவறில்லாமல் அழகாக, அருமையாக, தெளிவாகச் சொன்னான். அவனது ஞாபக சக்தியை எண்ணி ஆசிரியர் மகிழ்ந்தார். அவனைப் பாராட்டினார். எல்லாப் பலகாரங்களையும் அந்தச் சிறுவனுக்கே கொடுத்து விட்டார்.

ஆனால் அந்தச் சிறுவனோ தனக்குக் கிடைத்த அத்தனை பலகாரங்களையும் தானே சாப்பிட்டு விடாமல் தன் நண்பர்களுக்கும் வழங்கி அவர்கள் சாப்பிடுவதைப் பார்த்து, மகிழ்ந்தபடியே தானும் சாப்பிட்டான்.

சின்னஞ்சிறு வயதிலேயே இவ்வளவு நல்ல குணத்தோடு விளங்கிய பையன் யார் தெரியுமா? குழந்தைகளுக்கு 'மலரும் மாலையும்' என்ற ஒப்பற்றக் கவிதைத் தொகுப்பைத் தந்த, தமிழகத்தின் தலை சிறந்த கவிஞர்களுள் ஒருவரான 'கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை' அவர்கள்தான்.

'அவர்கள் வாழ்விலே' என்ற நூலிலிருந்து.

— சு. கண்ணகி,
மிட்டூர் (அஞ்சல்)
ஆண்டியப்பனூர் (வழி)

மின்கல மாதவன்!

1. ஓமப் பொடிக்காக

பத்தாவது முறையாக மாது குளியலறைக்குள்ளிருந்து கத்தினான்.

"அம்மா, துண்டு எடுத்துக் கொள்ள மறந்து போச்சு. சீக்கிரமா துண்டைக் கொண்டு வந்து கொடுங்க."

அம்மா அங்கே இருந்தால்தானே கொண்டு வந்து கொடுக்க, மூன்றாவது வீட்டில் இருக்கும் அம்மாவின் சிநேகிதி தங்கம்மாவுக்கு போன் வந்திருந்தது. தங்கத்தின் அக்கா உடுமலைப்பேட்டையில் இருந்து எஸ்.டி.டி பண்ணி ஒரு முக்கியமான, அவசரமான செய்தியைக் கூறும்படி கேட்டிருந்தார். அதைச் சொல்லி விட்டு வரத்தான் அம்மா போயிருந்தார்.

இது தெரியாத மாது பதினோறாவது முறையாகக் கத்தி விட்டுப் பொறுமை இழந்தான். காயப் போடுவதற்காகத் தோய்த்துப் பிழிந்து வைத்திருந்த ஜமுக்காளம் அவன் கண்ணில் பட்டது. அதை எடுத்துப் பிரித்து அப்படியே கட்டிக் கொண்டு கோபத்துடன் கூடத்திற்கு வந்தான்.

வீட்டில் அம்மா இல்லை என்பது அப்பொழுதுதான் தெரிந்தது. வாசற்கதவு வெளியே தாளிடப்பட்டிருந்தது. அம்மா சாதாரணமாக அப்படிப் போக மாட்டார். என்ன அவசரமோ என்று எண்ணியவனாகக் கோபம் தணிந்தான் மாது.

டெலிபோன் மணி கிணுகிணுத்தது. மாது ரிசீவரை எடுத்து "ஹலோ..." என்று குரல் கொடுத்தான்.

"தங்கம்மாவா?" என்று குரல் கேட்டது.

"இல்லே, தங்கம்மா இல்லே, மாது - மாதவன்" என்று பதில் கூறும்போதே புத்திசாலியான அவனுக்கு எல்லாம் புரிந்து விட்டது. "அம்மா, தங்கம்மாவைக் கூப்பிடத்தான் போயிருக்காங்க" என்று அவன் கூறிக் கொண்டிருக்கும்போதே, வாசற்கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டது.



"இதோ அம்மாவே தங்கம்மாவைக் கூட்டிக்கிட்டு வந்துட்டாங்க. அவங்களையே பேசச் சொல்றேன்" என்று கூறிவிட்டு, அவசரம் அவசரமாக ஓடி வந்த தங்கம்மாவிடம் ரிசீவரைக் கொடுத்தான் மாது.

தங்கம்மாவைப் பேச விட்டு விட்டு அம்மாவும் மகனும் சமையலறைக்கு வந்தனர்.

"இது என்னடா கூத்து! ஜமுக்காளத்தைக் கட்டிக்கிட்டு நிக்கறே? மாடிக் கொடியில் போட்டால்தானே சீக்கிரம் காயும்னு பிழிஞ்சு வைச்சிருந்தேன்?" எப்படிக் காஞ்சுது! வந்தவங்க போனவங்க முன்னாடி இப்படி இதைக் கட்டிக்கிட்டு நிக்கறியே!" என்று கடிந்தார் அம்மா.

அப்பொழுதுதான் மாதுவும் கவனித்தான். அவன் எடுத்துக் கட்டிக் கொண்டபோது ஈரம் சொட்டச் சொட்ட இருந்த ஜமுக்காளம் இப்பொழுது காய்ந்து

ரேவதி

போயிருந்தது!

"எப்படி இந்த மாதிரிக் காய்ஞ்சு போச்சுங்கறது எனக்கும் அதிசயமாத்தான் இருக்கும்மா!" என்று தனது வியப்பை வெளியிட்ட மாது, "ஒருவேளை, உடம்புச் சூட்டினாலேயே உலர்ந்து போயிருக்குமோ என்னவோ?" என்று சமாதானப் படுத்திக் கொள்ளும் பதிலைச் சொன்னான்.

"சரி சரி! இப்ப அதைப் பத்திப் பேசிட்டிருக்க நேரம் இல்லே. சீக்கிரம் சாப்பிட வா. உன்னைப் பள்ளிக்கு அனுப்பிட்டு நானும் தங்கமும் அவசரமா கடைக்குப் போகணும்" என்று தன் வேலையில் கவனமானார் அம்மா.

பள்ளியில் இரண்டாவது பீரியட் கட்டுரை வகுப்பு. கட்டுரை குறிப்பேடுகளைப் பிரித்துக் கொடுத்து விட்டு தலைப்பையும் தந்தார் ஆசிரியர். அந்த



நேரம் பார்த்து மின்சாரம் போய் விட்டது. விளக்குகள் அணைந்து மின் விசிறிகளும் நின்றன. மாணவர்கள் 'உஸ் புஸ்' என்று தங்கள் வெறுப்பையும் அமைதி இன்மையையும் வெளிப்படுத்தினர். ஆசிரியர் எதையும் கண்டு கொள்ளவில்லை. "எழுதுகிறவரை எழுதுங்க'' என்று கூறி விட்டார்.

முன் பெஞ்ச்சில் இருந்த மாதுவின் அருமை நண்பன் சேது திரும்பி ஒரு சீட்டைத் தந்தான்.

''ஓமப்பொடி கொண்டு வந்த பொட்டலத்தை மின் மீட்டர் மரப்பெட்டி மேல் வைத்திருக்கேன். உடனே போய் எடுத்துக் கொள். சந்தடி இல்லாமல் காலி பண்ணு. விளம்பரப் படுத்தி என்னைக் காட்டிக் கொடுத்து விடாதே'' என்று சேது சீட்டில் எழுதியிருந்தான்.


மாது என்ற மாதவன் ஒரு ஓமப்பொடிப் பிரியன். அவனுக்கு டிபன், காபி, சாப்பாடு எதுவுமே வேண்டாம். ஓமப்பொடி ஒன்று மட்டும் இருந்தால் போதும். எந்த ஊருக்குப் போனாலும் எல்லோரும் அங்கு உள்ள சுற்றுலா இடங்கள், பழமையான ஆலயங்கள், திரை அரங்கம் என்று கண்டு களிக்கப் போவார்கள். ஆனால் மாது மட்டும் என்ன செய்வான் தெரியுமா? அந்த ஊரில் உள்ள பிரபல ஓட்டல்களுக்குப் போவான். ஓமப் பொடியைக் கொண்டு வரச் சொல்லி சுவைப்பான். அந்த ஊர் ஓமப்பொடியோடு இன்னொரு ஊர் ஓமப்பொடியை ஒப்பிட்டுப் பேசுவான்! நிறை குறைகளை விமரிசிப்பான். திருத்திக் கொள்ளக்கூடிய வழிகளை எல்லாம் சொல்லித் தருவான்.

இப்படிப்பட்ட ஓமப்பொடி தாசனாகிய மாதுவின் உயிர் நண்பன் சேது, அதே வகுப்பில் படிப்பவன். சேதுவின் அம்மா அடிக்கடி ஓமப்பொடி பண்ணுவார். உண்மையாகவே மிக அருமையாக இருக்கும். சேதுவின் வீட்டில் ஓமப்பொடி என்றால் கூப்பிடாமலேயே வருகை தந்து, அம்மாவுக்கு உதவி செய்து, திருப்தியாக ஓமப்பொடி வாங்கிச் சாப்பிட்டுச் செல்வான் மாது. அவன், தான் பண்ணிய ஓமப்பொடியைத் தின்றுவிட்டு, பன்னீரால் குளிப்பாட்டாத குறையாகப் புகழ்ந்து பேசுவதைக் கேட்டு சேதுவின் அம்மா குளிர்ந்து போவார்! ''மாதவா, உன் புகழுரையைக் கேட்பதற்காகவே இனிமேல் அடிக்கடி ஓமப்பொடி செய்வேன். உனக்கும் தருவேன்'' என்பார். ''நீங்களும் இருக்கிறீர்களே. செய்து தந்தால் திங்கத்தான் தெரியுமே தவிர மாது மாதிரி அதைப் புகழ்ந்து பேசத் தெரியுமா?'' என்று சேதுவுக்கும் அவன் அப்பாவுக்கும் திட்டு விழும்!



அடிக்கடி சேதுவின் வீட்டிலிருந்து மாதுவுக்கு ஓமப்பொடி வரும். சேது அதைப் பள்ளிக்கே பொட்டலம் கட்டிக் கொண்டு வருவான். ஒருவருக்கும் தெரியாமல் மாதுவும் அதை ஒரு கைபார்த்து விட்டு மாதுவின் அம்மாவைப் புகழோ புகழென்று புகழுவான். அந்த மாதிரியான ஒரு ஓமப்பொடிப் பொட்டலத்தை சேது கொண்டு வந்து மின்மீட்டர் மரப்பெட்டி மேல் வைத்து விட்டு வந்து தகவல் தந்திருக்கிறான்.

திடீரென்று மாதுவுக்கு விக்கியது. அதுவும் மிகவும் பலமான ஓசையோடு! சேதுவுக்கு அதன் காரணம் புரிந்து விட்டது!



"என்னங்க! போர்டில் வெண் பொங்கல், சர்க்கரைப் பொங்கல் ரெடி என்பதற்கு "வெண் பொங் சர்க்கரைப் பொங் ரெடி'ன்னு எழுதியிருக்கீங்க?"

"பொங்கலில் 'கல்' நிறையக் கிடக்குதுன்னு புகார் வந்தது. அதுதான் பொங்கலில் இருந்த 'கல்'லை எடுத்துட்டோம்!"

- ஜி. குமரேசன்,
பாண்டமங்கலம்.

"போ, போய்த் தண்ணி குடிச்சிட்டு வா. வராந்தாவில் உலாத்தி என் பெயரையும் உன் பெயரையும் கெடுக்காதே!" என்ற எச்சரிக்கையுடன் அவனை அனுமதித்தார் ஆசிரியர்.

மீட்டர் மரப்பெட்டி, மாடிப்படி வளைவில் அமைந்திருந்தது. தண்ணீர் பம்ப்பின் ஸ்விட்ச், விளக்கு மின் விசிறிகளுக்கான ஸ்விட்ச், பரிசோதனைக் கூடத்திற்கான ஸ்விட்ச் எல்லாம் அந்த மரப்பெட்டிக்குள்தான் அமைந்திருந்தன. அந்த நேரத்தில் யாரும் அங்கே வர மாட்டார்கள் பொதுவாக.

மாதவன் மீட்டர் பெட்டியின் மர அலமாரிக் கதவைத் திறந்தான். ஓமப் பொடிப் பொட்டலம் சற்று உயரத்தில் இருந்தது. அவசரத்தில் சேது வீசிப் போட்டிருக்க வேண்டும். மாது எம்பிப் பொட்டலத்தை எடுத்தான். அது கீழே விழுந்து பொட்டலம் திறந்து ஓமப் பொடி பெட்டிக்குள் சிந்தியது. அதைக்கூட விட மனமில்லாத மாது, மின்சாரம்தான் இல்லையே என்ற துணிவில் இரு கைகளாலும் மெயின் இணைப்பு ஒயர்களைப் பிடித்து ஒதுக்கி, ஓமப் பொடி சிந்தலை எடுத்தான். இணைப்பில் கைபட்ட உடனேயே மின் இணைப்பு ஏற்பட்டு சர்க்யூட்டில் பாய்ந்தது. விளக்குகள் எரிந்தன! மின் விசிறிகள் ஓடின! தண்ணீர் பம்ப் பெருஞ்சத்தத்துடன் ஓட ஆரம்பித்தது. அதோடு தானியங்கி ஆட்டோ பஸ்ஸர் இயங்கி பெருஞ் சத்தத்துடன் அடுத்த பீரியடுக்கான மணி ஒலித்தது!


மாது அவசரம் அவசரமாகக் கைகளை விடுவித்துக் கொண்டான். பியூன் பொன்னுரங்கத்தின் குரல் கேட்கவே, மீட்டர் பெட்டியின் அலமாரிக் கதவை மூடி விட்டுக் கண்ணிமைக்கும் நேரத்தில் பறந்தான்! ஓமப்பொடி பொட்டலம் பிரிந்தபடி மீட்டர் பெட்டியிலேயே கிடந்தது.

"ஏண்டா சனி, பொட்டலத்தை எடுக்காமல் பேசாம வந்துட்டே? ஒண்ணு எடுக்காமல் அப்படியே விட்டிருக்கணும். இல்லே விழுந்ததை எடுத்துக்கிட்டு வந்திருக்கணும். அது என்னோட ரஃப் நோட்டுக் காகிதம்டா. என்னைக் காட்டிக் கொடுத்திடும். உனக்கு ஓமப் பொடி கொண்டுவந்த பாவத்துக்காக எனக்கு அசெம்பிளியில் தண்டனை கிடைக்கப் போகிறது" என்று பொருமினான் சேது. "அந்தப் பொட்டலத்தை மட்டும் நீ எடுக்கலே... இனிமே எங்க வீட்டு ஓமப் பொடி உனக்குக் கிடைக்காது!" என்று அவன் விடுத்த இறுதி எச்சரிக்கை மாதுவைக் கலங்க வைத்தது.

கணக்கு ஆசிரியரிடம் அனுமதி வாங்கிக் கொண்டு மீட்டர் பெட்டிக்கு விரைந்தான் மாது. கதவைத் திறந்து பார்த்தான். ஓமப் பொடிப் பொட்டலம் அங்கே இல்லை! பகீரென்றது அவனுக்கு. அதைவிட பலமான இன்னொரு 'பகீர்' அங்கே தான் மறைவில் இருந்து, தலைமை ஆசிரியர் வெளி வந்தார்! அவர் கையில் உடைந்து பிரிந்த அதே ஓமப் பொடி பொட்டலம்!

(தொடரும்)

வெடி ஜோக்ஸ்



"பாம்பு மாத்திரை வாங்கி பிரயோஜனமே இல்லை!"

"ஏன்?"

"கடைசி வரைக்கும் பாம்பு படம் எடுக்கவேயில்லையே!"



"எனக்கு யானை வெடி மட்டும் வேண்டாம் சார்."

"ஏன் தம்பி?"

"வெடிக்க யானைப் பாகன் இல்லையே!

"படபடன்னு பேசிதான் எனக்குப் பழக்கம்!"

"ஏன், பட்டாசுக் கடையில் வேலை பார்த்ததாலா?"



"ஜோக் சொன்னால் ஏன் 'டமால்' 'டுமீல்'ன்னு சொல்லிக்கிட்டே சிரிக்கறே?"

"நீ சொன்னது தீபாவளி ஜோக் காச்சே!"



"தீபாவளிக்குத் தெரிந்தவர் வீட்டிற்கெல் லாம் போய் பட்சணம் சாப்பிடறியே, ஏன்?"


"கிடைக்கிற இடத்தில் தீபாவளிக்கு சாப்பிட்டு விட்டால் நம்ம வீட்டு பட்சணத்தை ரெண்டு நாள் கழித்துச் சாப்பிடலாமே!


— காழி ஆர். சீதாராமன்





- போட்டி -

என்ன பழமொழி?





















(1)

இங்கு இரண்டு தொகுதிகளாகப் படங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. முதல் தொகுதியில் உள்ள ஐந்து படங்களின் முதல் எழுத்தையும் இரண்டாம் தொகுதியில் உள்ள பத்து படங்களின் இரண்டாம் எழுத்தையும் எடுத்து எழுதி வரிசைப்படுத்துங்கள். உங்களுக்கு நன்கு அறிமுகமான பழமொழி ஒன்று கிடைக்கும். பழமொழியை எழுதி முகவரிக் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். உங்கள் முகவரியை எழுத மறவாதீர்கள். முடிவு தேதி 30.11.98. அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரி யான விடை எழுதினால் பரிசு குலுக்கல் முறையிலேயே முடிவு செய்யப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.


②



ஆசிரியர்,

கோகுலம்,

47, ஜவாஹர்லால்
நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை – 600 097



ஒரு வித்தியாசமான கொலு!

நவராத்திரி விழாவின் போது நம் வீட்டில் கொலு வைப்பது வழக்கம். விருகம்பாக்கத்தில் வசிக்கும் திரு. பிரகாஷ் ஒரு வித்தியாசமான கொலுவை வைத்திருந்தார். கொலுவில் பொம்மைகளே கிடையாது. முழுக்க முழுக்க நாணயங்கள், கரன்சி நோட்டுகள், கண்ணைக் கவரும் அஞ்சல் உறைகள் பழங்காலத்துப் பொருட்கள், தபால் தலைகள் ஆகிய வற்றால் நிரப்பப்பட்டிருந்தது.

வீட்டின் பெரும் பகுதியை இந்த 'நாணய கொலு' ஆக்கிரமித்திருந்தது. சுவர் எங்கும் பழங்கால நாணயங்கள், கரன்சி நோட்டுகள் பற்றிய சுவரொட்டிகள்.



எவ்வளவு நாணயங்களை உங்களால் சேகரிக்க முடிந்தது?

அறையில் இடம் இல்லாததால் பாதிதான் கொலுவில் வைத்திருக்கிறேன். இன்னும் நிறைய சேமிப்பு கையிருப்பில் இருக்கு.

உங்களுக்கு நாணயம் சேகரிக்க ஆர்வம் வந்தது எப்படி?

என்னோட 15வது வயதில் சோழர் காலத்து நாணயம் ஒன்று கிடைத்தது. அதிலிருந்துதான் நாணயங்களைச் சேகரிக்கும் எண்ணம் வந்தது.

இந்த நாணயங்களை எங்கிருந்து, எப்படி சேகரிக்கிறீர்கள்?

நாணயங்கள் சேகரிப்போர் அமைப்பு ஒன்று உள்ளது. அதில் நான் உறுப்பினராக இருக்கிறேன். இந்த அமைப்பில் என்னைப் போன்ற மற்ற உறுப்பினர்களிடமிருந்து நாணயங்களை வாங்கவோ, விற்கவோ செய்யலாம். பரிமாறிக் கொள்ளலாம். ஆண்டு தோறும் மூன்று நாட்கள் நாணயங்கள் கண்காட்சி நடைபெறும். அதிலிருந்தும் நமக்குத் தேவையான நாணயங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

நிறைய பணம் செல



நாணயங்களை வாங்க சிரமப்பட்டேன்.


எத்தனை வருடங்களாக இதில் ஈடுபட்டு வருகிறீர்கள்?

பதினைந்து வருடங்களாக.

நாணயங்களைச் சேகரிக்க ஆர்வம் உள்ள மாண வர்களுக்கு, பணம் கொடுத்து வாங்குவது சிரமமாக இருக்குமே?

காசு செலவில்லாமலும் நாணயங்களைச் சேகரிக்க லாம். நம் நண்பர்கள், தெரிந்தவர்களிடமெல்லாம் நாம் நாணயங்களைச் சேகரிக்கும் விஷயத்தைச் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும். இதன் மூலம் பலரிட மிருந்து உதவி கிடைக்கும்.

பழங்காலத்து நாணயங்கள் வைத்திருக்கிறீர்களே!



வழிக்க வேண்டி வருமே?

ஆமாம். முக்கிய நிகழ்ச்சி, தலைவர்களின் நினைவாக வெளியிடப்படும் நாணங்கள் (Proof coins) ஒரு முறை மட்டுமே வெளியிடப்படும். நூற்றி இருபது ரூபாய் மதிப் புள்ள நாணங்களை அறுநூற்றி ஐம்பது ரூபாய் கொடுத்து வாங்கியிருக்கிறேன்.

மிகவும் சிரமப் பட்டு வாங்கிய நாணயம் எதுவுமிருக்கா?

கி.பி. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த மௌரியர் காலத்து

அதைப் பற்றிய குறிப்பு எப்படி கிடைக்கும்?

நாணயங்கள் சேகரிப்பிற்கு புத்தகங்கள் மிகவும் அவசியம். அவற்றிலிருந்து தான் நாணயங்களின் வரலாறை அறிந்து கொள்ள முடியும்.

எத்தனை நாட்டு நாணயங்கள் உங்களிடம் இருக்கிறது?

210 நாடுகளின் நாணயங்களும், 90 நாடுகளின் கரன்சி நோட்டுகளும் என்னிடம் இருக்கின்றன.

பழங்கால நாணயங்கள் என்னென்ன இருக்கின்றன?

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த ரோமானியர்கள் நாணயங்கள், திப்பு சுல்தான், சங்க கால நாணயங்கள், இந்தியாவை ஆண்ட ஒவ்வொரு மன்னர் களின் காலகட்டத்திலும் உள்ள நாணயங்கள் என வரிசைப்படுத்தி வைத்திருக்கிறேன்.

ஆந்தை




காகிதத்தில் கலைவண்ணம்

நன்னிலத்திலிருந்து ஏழாம் வகுப்பு படிக்கும் கே. புனிதா ஆந்தை செய்து காட்டும்படி கேட்டிருந்தார். புனிதாவிற்காக இந்த மாதம் 'ஆந்தை' செய்யலாம்!

1. சதுர வடிவத் தாளை எடுத்துக் கொண்டு படத்தில் காட்டியபடி பிடித்துக் கொள்ளுங்கள். கீழிருந்து மேல் நோக்கி மடித்துக் கொள்ளுங்கள்.

2. இப்போது முக்கோண வடிவம் கிடைத்திருக்கும். முக்கோணத்தின் இட, வல முனைகளை மேல் உள்ள முனையைத் தொடுமாறு பிடியுங்கள்



3. மேலே மடித்து விட்ட முனைகளை படத்தில் காட்டியபடி கீழ்நோக்கி மடிக்கவும்

4. படம் 4-ல் உள்ள வடிவம் கிடைக்கும்.

5. படம் 5-ல் காட்டியபடி மேல் உள்ள முக்கோணப் பகுதியை பின்புறம் திருப்பி மடிக்கவும்.


6. படத்தில் காட்டியபடி இட வல பக்கங்களை பின் புறமாக மடிக்கவும்.


7. படம் 7-ல் அம்புக்குறி இட்டுள்ளபடி சிறிது மடித்தால் ஆந்தை தயார்.

நன்றி மறந்தால்...

கதை : ஜானகி முத்துகுமார்; படம் : சசி




இரண்டு நாட்களாக மரக்கிளையின் அடியிலிருந்தேன். ஒரே பசி. இரை தேட நேரமில்லை.
அதனால்?
உன்னை விழுங்கப் போகிறேன்.
ஐயோ! இது அநியாயம். நீ சொன்னது என்ன? செய்வது என்ன?
நியாய, அநியாயம் பார்த்தால் நான் பட்டினியால் சாக வேண்டியதுதான்!
அப்போது குதிரையார் வர –
குதிரையண்ணா இந்த நியாயத்தைக் கேளுங்கள்.
என்ன பிரச்னை?
குரங்கார் நடந்ததைக் கூறினார்.
நியாய, அநியாயத்தை மனிதர்களே பார்ப்பது இல்லை. எனக்கு வயதாகி விட்டதால் என் எஜமான் துரத்தி விட்டார். இதுதான் உலகம்.
மானாரே நீங்களாவது உதவி செய்யுங்கள்.
என்ன சொல்?
நடந்ததைக் கேட்டறிந்தார் மானார்.



மலைப் பாம்பே இப்படி நன்றி மறக்கலாமா?
என் பசி உனக்குத் தெரியுமா?
அங்கு வந்த யானையார் –
எல்லாம் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன்.
உதவி செய்ததால் உயிரே போய்விடும் போலிருக்கு.
யாரிடம் கதை விடுகிறீர் குரங்காரே!
காப்பாற்றியது உண்மைதான்!
மரக்கிளையில் பாம்பு சிக்கி, நீர் எப்படி காப்பாற்றினீர்? எங்கே செய்து காட்டும்.
இருங்க. நான் முதலில் படுத்துக் கொள்கிறேன்.
மலைப்பாம்பு படுத்துக் கொண்டதும் யானையார், மரக்கிளையை பாம்பு மேல் போட்டார்.
குரங்காரே ஓடிப் போய் விடும். இந்த நன்றி இல்லாத பாம்பு இப்படியே கிடக்கட்டும்.
நன்றி அண்ணா.
காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்!



WILDLIFE SPECIAL


- THE MAGIC FLOWER
- 'MORNING' BLUES
- A VISIT TO NATIONAL PARK

NOVEMBER '98
Rs. 6/-

GOKULAM

The monthly magazine for children

47, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097



வெள்ளம் வரும் முன்...

ராமன் எதையும் முன்கூட்டியே திட்டமிட்டுச் செய்ய மாட்டான். கடைசி நிமிஷத்தில்தான் எந்தக் காரியத்தையும் செய்வான். அவன் ஒன்பதாம் வகுப்பு படித்து வந்தான்.

அவனுக்குத் தேர்வு நெருங்கியது. அதனால் அவன் பெற்றோர் "படி படி" என்று முன்கூட்டியே கூறினர். ஆனால் எதையும் கடைசி நேரத்திலேயே அவசரமாகச் செய்யப் பழக்கப்பட்ட ராமன், தேர்வு வரட்டும் படித்துக் கொள்ளலாம், இப்போது என்ன அவசரம் என அலட்சியமாகவே இருந்தான்.

இப்படியே நாட்கள் எல்லாம் ஓடின. தேர்விற்கு முதல் நாள் மாலை ராமன் படிக்கலாம் என புத்தகத்தை எடுத்தபோது அவனுக்கு மிகவும் பிடித்தமான உறவினர்கள் ஊரிலிருந்து வந்து விட்டனர். ராமன் அவர்களுடன் விளையாடுவதா? இல்லை தேர்விற்கு படிப்பதா? என்று குழம்பி விட்டான்.

படிக்க உட்கார்ந்தபோதும் அவன் மனம் படிப்பில் ஈடுபடவில்லை. எனவே அவர்களுடன் விளையாடலாம். நாளை காலை இருக்கிறதே, அப்போது படித்துக் கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்தான்.

உறவினர்களிடம் இரவு வெகு நேரம் பேசி கொண்டிருந்ததால் மறுநாள் காலையில் நீண்ட நேரம் உறங்கி விட்டான். மேலும் ஊருக்குப் புறப்பட்ட உறவினர்களை பேருந்து நிலையம் வரை சென்று வழி அனுப்பி வைக்க நேரமாயிற்று.

உடனே அவனுக்கு ஒரு எண்ணம் தோன்றியது. அவனுடைய நண்பன் குமாரிடம் பாடங்களை சிறிது கேட்டுக் கொண்டால் போதும், தேர்வில் மதிப்பெண் பெற்று விடலாம் என்று எண்ணி அவசர அவசரமாக பள்ளிக்குச் சென்றான்.

ஆனால் அங்கும் அவனுக்கு பெரும் ஏமாற்றம் காத்திருந்தது. எங்கு தேடியும் குமாரைக் காணவில்லை. விசாரித்ததில் தலைமை ஆசிரியரிடம் சென்று இருப்பதாகத் தெரிய வந்தது. குமார் தேர்வு துவங்குவதற்கு சிறிது முன்னதாகத்தான் வந்தான். தேர்வு துவங்கியது. ஆசிரியர் வினாத்தாள்களைக் கொடுத்தார். எல்லா மாணவர்களும் வாங்கி விரைவாக விடைகளை எழுதத் துவங்கினார்.

ராமனுக்கு பயத்தில் எதுவுமே புரியவில்லை. ஆசிரியரைப் பார்ப்பதற்கு அவனுக்கு அச்சமாகவும், அவமானமாகவும் இருந்தது. தோல்வி உறுதி என்று தெரிந்தது. ராமன் விடைத்தாளை மடித்துக் கொடுத்து விட்டு வேதனையுடன் எழுந்து வந்தான்.

பரீட்சையை முடித்து விட்டு ராமனிடம் வந்த குமார் "டேய் ராமா, வெள்ளம் வரும் முன் அணையைக் கட்ட வேண்டும் என்ற தலைப்பில் கட்டுரையை நான் நல்லா எழுதியிருக்கேன் நீ?" என்று கேள்வியோடு நிறுத்தினான்.

"இப்பதான் அதற்கு அர்த்தமே புரிஞ்சிருக்கு. அடுத்த பரீட்சையில் எழுதுவேன்" என்று சொல்லிவிட்டு வீட்டை நோக்கி நடந்தான்.

குமார், ராமனை புரியாமல் பார்த்தபடி நின்றான்.

– பா. ஆனந்தகுமார், எட்டாம் வகுப்பு,
எஸ்.எம்.பி.எம். மெட்ரிகுலேஷன்
பள்ளி, திண்டுக்கல்.



கிணற்றில் குதித்த பேய்!

அப்பாவைப் பார்க்க நண்பர் ஒருவர் வந்திருந்தார். "ஃபெலிக்ஸ்! இவர் மதுரைக்குப் போகணும், 'சைக்கிளில் போய் பஸ் ஸ்டாப்பில் இறக்கி விடு'" என்றார் அப்பா.

சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளம்பினேன்.

இரவு மணி 9.30. கிட்டத்தட்ட ஒன்றரைக் கிலோமீட்டர் தூரத்தில் இருந்தது அந்த பஸ் ஸ்டாப். மாட்டு வண்டிப்பாதை. இருபுறமும் அடர்த்தியான முட்செடிகள்.

பஸ் ஸ்டாப்பில் அவரை இறக்கி விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தேன். மிகவும் பழகிய பாதைதான். தெருவிளக்குகள் இல்லாத 'கும்' இருட்டு. கொஞ்சம் பயமாயிருந்தது.

'இருளைக் கண்டெல்லாம் பயப்படலாமா?' எனக்குள் சொல்லிக் கொண்டேன். 'அந்த வட்டக் கிணறைத் தாண்டி விட்டால் பயமில்லை' – அது ஒரு பழங் காலத்து கிணறு. ரொம்பப் பெரியது. சுற்றுச் சுவர் முழுவதும் கருங்கல்லால் கட்டப்பட்டிருக்கும்.

அந்தக் கிணற்றில்தான் போன மாதம் ஒரு பெண் விழுந்து இறந்து போனாள். அதற்கு முன்னால் ரொம்பப் பேர் அந்தக் கிணற்றில் குதித்து செத்துப் போயிருக்கிறார்கள். அந்த ஆவிகள் எல்லாம் தினமும் ராத்திரியானதும் கிணற்றில் குதித்துக் குதித்து விளையாடுமாம்! நண்பன் சங்கர் பலதடவை சொல்லியிருக்கிறான்.

அந்த நினைப்பு வந்ததும் உடம்பு சிலிர்த்தது. பயம் அதிகமானது. வேர்க்க ஆரம்பித்தது.

அதோ! அந்த வட்டக் கிணறு! அதைக் கடந்து விட்டால் பயமில்லை! இன்னும் கொஞ்ச தூரம்தான்!

மனசு 'படக்! படக்!' என்று அடித்துக் கொண்டது. கிணற்றுக்கு அருகில் வந்து விட்டேன். திடீரென 'கலகல'வென சலங்கை ஒலி.

'தொபீர்' என்று கிணற்றுக்குள் யாரோ குதித்தார்கள்.

'ஐயய்யோ!' – மனசு அலறியது.

சங்கர் சொன்னது சரிதான். கிணற்றுப் பக்கம் திரும்பினேன். அவ்வளவுதான்!

கிணற்றுக்கு அருகில் இருந்த புளிய மரத்து உச்சியில் இன்னொரு பேய் கிணற்றில் குதிப்பதற்காக நின்று கொண்டிருந்தது.



என்னைக் கண்டதும் 'வா' என்று அழைத்தது.

"ஆ! ஐயோ! பேய்" என்று அலறினேன்.

அதற்குப் பின், சைக்கிளை ஓட்டினேனா, பறந்தேனா என்பதெல்லாம் ஞாபகம் இல்லை. குணா அங்கிளுடன் டீ.வி பார்த்தவாறு பேசிக் கொண்டிருந்த என் அப்பாவின் மடியில் 'தொப்'பென்று விழுந்தேன்.

'பேய்! அப்பா பேய்!" – என்னை அறியாமல் வாய் உளறியது.

ஏதோ விபரீதம் என்பதை என் அப்பா புரிந்து கொண்டார் போலும்! மெல்ல முதுகில் தட்டிக் கொடுத்தார்.

"பயப்படாதே! ஒன்றுமில்லை!" என்றார்.

வேர்வையைத் துடைத்தார்.

"இந்தா! தண்ணி குடி!" அதற்குள் என் அம்மா சமையலறையிலிருந்து ஓடி வந்தார்.

"என்னாச்சு? என்னாச்சு?" என்று பதறினார்.

"ஒண்ணுமில்லை! இருட்டைக் கண்டு பயந்திட்டான் போலிருக்கு!' என்றார்



ஐந்து நாள் தீபாவளி!

நமக்கு தீபாவளி ஒரே நாள் கொண்டாட்டம்! உத்திரப் பிரதேசத்திலும், ராஜஸ்தான் மாநிலத்திலும் ஐந்து நாட்களுக்கு தீபாவளி கொண்டாடப்படுகிறது.

– சின்னஞ்சிறு கோபு

அப்பா.

"இதுக்குத்தான் சின்னப் பையனை ராத்திரியிலே வெளியே அனுப்பாதீங் கன்னு சொல்றது" என்று அம்மா பதறி னார்.

"பதினோராம் வகுப்பு படிக்கிறான். இன்னும் சின்னப் பையன்னு சொல்லிக் கிட்டிருக்கே?" என்றார் அப்பா.

"என்ன நடந்தது ஃபெலிக்ஸ்?" என்று நடந்ததைத் தெரிந்து கொள்ளும் ஆவ லோடு கேட்டார் என் அங்கிள்.

"இப்பக்கூட உடம்பு நடுங்குது அங்கிள்! நான் மட்டும் வண்டிய விரட்டிட்டு வர லைன்னா நிச்சயமா அந்தப் பேய் என்னை அங்கேயே அடிச்சிருக்கும். நான் என்னமோ இருட்டைக் கண்டு பயந்திட் டேன்னு அப்பா சொல்றார்."

வட்டக் கிணற்றில் ஒரு பேய் வளை யல் சத்தத்தோடு குதித்ததையும் மரத்தி லிருந்து பேய் என்னைக் கையசைத்து கூப் பிட்டதையும் விவரமாகச் சொன்னேன். மீண்டும் அந்த நினைப்பில் உடம்பு சிலிர்த் துக் கொண்டது.

நான் சொன்னதை கவனமாகக் கேட் டுக் கொண்டிருந்த என் அப்பா எதையோ தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தார்.

அப்பா இந்திய இராணுவத்தில் பணி யாற்றியவர். அவரோடு பேசிக் கொண் டிருந்த குணா அங்கிளும் ஒரு எக்ஸ் சர்வீஸ் மேன்தான்.

ஏதோ முடிவுக்கு வந்தவர்போல என் அப்பா "சரி வா! அந்தப் பேய்களைப் பார்த்திட்டு வந்திடுவோம்" என்றார்.

"ஐயய்யோ! வேண்டாம் அப்பா" என்று அலறினேன்! நான்.

"இப்பப் போனா... அவ்வளவுதான். அந்தப் பேய் நம்ம இரண்டு பேரையுமே அடிச்சிடும்" என்றேன் நடுங்கியபடி.

"அப்படியா! சரி, குணா நீயும் என்கூட வா. ஃபெலிக்ஸ்! நீ போய் பக்கத்து வீட்டு முருகேசன் சாரையும், கணேசன் சாரையும் நான் வரச் சொன்னதா சொல்!" என்றார் அப்பா.

அதற்குமேல் நான் நிற்கவில்லை. பக்கத்து வீட்டுக்குப் போய் அவர்களிடம் அப்பா சொன்னதுபோல் சொல்லிவிட்டுத் திரும்பினேன்.

ஒரு சில நிமிடங்களில் சட்டையை மாட்டியபடியே கையில் 'டார்ச்' லைட் டோடு வந்தார்கள். கூடவே அவர்கள் வீட்டிற்கு வந்திருந்த இரண்டு உறவினர் களும் வந்தார்கள்.

நானும் பயந்து கொண்டே கிளம்பி னேன். இருந்தாலும் கூட்டமாக சேர்ந்து புறப்பட்டதால் கொஞ்சம் தெம்பா யிருந்தது.

போகும் வழியில் நான் பார்த்த பேய் களைப் பற்றி என் அப்பா சொல்லிக் கொண்டே வந்தார்.

கிட்டத்தட்ட அந்த இடத்தை நெருங்கி விட்டோம். அந்த வளைவு திரும்பினால் வட்டக் கிணறுதான். என் அப்பா கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு நடந்தேன். அதோ! அந்தப் புளிய மரம்.

"அப்பா! மேலே பாருங்க" நடுங்கிய படியே காட்டினேன்.

'சட்'டென்று அனைவரும் மரத்தின் மேலே பார்க்க எல்லோருடைய மனத்தி லும் ஒரு 'திடுக்'. மர உச்சியில் அந்தப் 'பேய்' மீண்டும் கிணற்றில் குதிப்பதற்காக நின்று கொண்டிருந்தது.

அடுத்த நொடி ஒளி வெள்ளம்போல் அனைத்து டார்ச் லைட்டுகளும் அந்தப் பேயின் முகத்தில் வெளிச்சத்தை வீச, மரத் தின் உச்சியிலிருந்து ஒரு கிழிந்த சேலை தொங்கிக் கொண்டிருந்தது. காற்றில் கிளை

கள் ஆடும்போது பேய் தன் கைகளை அசைத்து அழைப்பது போல் இருந்தது. ஓரிரு தினங்களுக்கு முன் வீசிய பெருங் காற்றில் அது அடித்துச் செல்லப்பட்டு அங்கு சிக்கியிருக்க வேண்டும். எல்லோருக் கும் சிரிப்பாய் இருந்தது. எனக்குக் கொஞ் சம் வெட்கமாகக் கூட இருந்தது.

"நான் கூட முதல்ல பார்த்ததும் பயந்திட் டேன்" என்று முருகேசன் சார் சொன்னார்.

"ஃபெலிக்ஸ்! நல்லா பாரு! நீ பார்த்த பேயை" என்று அப்பா கிண்டலாகச் சொன்னார்.

"சரி வா, கிணற்றுக்குள் குதித்த பேயைப் பார்க்கலாம்" சிரித்தபடி அப்பா சொல்ல, வட்டக் கிணறை நோக்கி ஆவ லோடு நடந்தோம். முன்னால் போனவர் கள் கிணற்றுக்குள் வேகமாக எட்டிப் பார்த்தனர். 'டார்ச்' லைட்டை அடித் தனர். உள்ளே 'அது' மிதந்து கொண்டிருந் தது. எவ்வித அசைவும் இல்லை. கூர்ந்து பார்த்தேன்.

அட! அது ஒரு காய்ந்து போன தென்னை மட்டை. கிணற்றின் ஓரமாக இருந்த தென்னை மரத்திலிருந்து விழுந்திருக்கிறது.

"ஃபெலிக்ஸ்! நீ பார்த்த, கொலுசு அணிந்து, குதித்து விளையாடிய பேய் இது தான். புரியுதா! மரத்திலிருந்து விழும்போது காய்ந்த ஓலைகள் பக்கத்து மட்டைகளோடு மோதி சத்தத்தை உண்டாக்கியிருக்கு" என் றார் அப்பா.

இப்போது எனக்கு எல்லாம் புரிந்து விட்டது. திரும்பும் வழியில் என் அப்பா சொல்லிக் கொண்டே வந்தார்.


"ஃபெலிக்ஸ் இறந்து போனவர் எல் லாம் ஆவியாகத் திரிந்தால் இந்த ஊர் முழுவதும் ஆவியாகத்தான் இருக்கும். பொதுவா இருட்டுல, தனியா இருக்கும் போது, அதுவும் மனசுல தைரியம் இல்லா தவங்களுக்குத்தான் இந்தக் கற்பனை உருவங்கள் நிஜம் போலவே தோணும். இன்னைக்கு இந்த உண்மையை நீ புரிஞ் சிக்காம இருந்தால் வாழ்நாள் முழுவதும், நான் பேயைப் பார்த்தேன். என் இரண்டு கண்களாலும் பார்த்தேன்னு அழுத்தம் திருத்தமாகச் சொல்லிகிட்டு பல பேரை நம்ப வச்சிக்கிட்டிருப்பே. அதுக்காகத்தான் உன்னை இப்பவே கூட்டிட்டு வந்தேன்" என்றார் அப்பா.

என் அப்பா சொன்னது நூற்றுக்கு நூறு உண்மைதானே!

— அ. ஃபெலிக்ஸ் ரோஜர்,
பதினோராம் வகுப்பு,
விக்டரி மெட்ரிக்குலேசன் பள்ளி,
சின்னாளபட்டி, திண்டுக்கல் மாவட்டம்.

குறுக்கெழுத்துப் புதிர் விடை

1 க	ற்	2 பூ	ர	ம்	■	டை	ட்	3 கோ
ரி	■	ஞ்	■	ப	■	4 சீ	■	து
ச்	■	சை	■	ற்	■	■	5 ஆ	மை
சா	■	■	■	6 சி	■	தி	■	■
ன்	பா	ப்	7 ஜ	■	8 பி	9 ர	மி	ட்
■	■	10 போ	■	11 தி	■	■	■	ஸ்
12 பு	லி	■	■	ரா	■	13 கு	■	ரெ
ன்	■	சி	■	ட்	■	ம்	■	வ
14 அ	மீ	15 பா	■	சை	ச்	மி	லு	16 எ



மாத்திரையின் அளவு என்ன?



அளவு என்ன?


தமிழ் ஆசிரியர் இலக்கணம் நடத்திக் கொண்டிருந்தார். பாடத்தை கவனிக்காமல் உட்கார்ந்திருந்த என் நண்பனை எழுப்பி "ஒரு மாத்திரையின் அளவு என்ன?" என்று கேட்டார் ஆசிரியர். திருதிருவென விழித்த நண்பன் திடீரென சொல்ல ஆரம்பித்தான். "நம்ம வாங்கக் கூடிய மாத்திரைகளைப் பொருத்து மாத்திரைகளின் அளவு மாறுபடும்" என்று முடித்தான். ஆசிரியரின் கோபத்தை அறிந்து நாங்கள் சிரிப்பை அடக்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தோம்.


— அ. கோபாலகிருஷ்ணன்,
பதினோராம் வகுப்பு, மோகனூர்,
நாமக்கல்.

பார்த்து எழுது!

நானும் தங்கையும் ஒரே பள்ளியில் படிக்கிறோம். அன்று எங்களுக்கு முழு ஆண்டுத் தேர்வு என்பதால் முன்னதாகவே பள்ளிக்குக் கிளம்பினோம். பள்ளியை அடைந்ததும் என் தங்கையிடம், "பேனா வச்சிருக்கியா, பென்சில் சீவியாச்சா?" என்று கேட்டேன். "எல்லாம் இருக்கு" என்றாள் தங்கை. "சரி! நல்லா பார்த்து எழுது" என்று கூறிவிட்டு என் வகுப்பறையை நோக்கி நடந்தேன். "அக்கா பார்த்து எழுதினால் தப்பில்லையா?" என்று கேட்டாள் தங்கை. "வினாத்தாளை நன்கு கவனித்து எழுதுன்னு அர்த்தம்" என்றேன் சிரித்தபடி.

— கு. காத்யாயனி,
ஏழாம் வகுப்பு,
புனித அலாய்சியஸ் மகளிர் மேல்
நிலைப் பள்ளி, தூத்துக்குடி.









பிரியாணி?

எங்கள் வகுப்பாசிரியை மாற்றப்பட்டு புதிதாக ஆசிரியர் வந்திருந்தார். பதிவேட்டை எடுக்க ஆரம்பித்தார். பெயருக்கு முன் உள்ள இனிஷியலை அவர் பெயருக்குப் பின் வாசித்தார். என் தோழி பிரியாவின் அப்பா பெயர் நித்தியானந்தம். அவளை ஆசிரியர் ''பிரியா - நி'' என்று வாசிக்க எங்களுக்கு 'பிரியாணி' என்று காதில் விழுந்தது. பிரியா சங்கடப்பட்டுக் கொண்டு எழுந்து ''உள்ளேன் ஐயா'' என்று கூறி உட்கார வகுப்பே சிரித்தது.



— பி. சாந்தி,
கண்டாச்சிபுரம்.



வெள்ளம் வந்தால்....


புவியியல் பாடம் நடத்திக் கொண்டிருந்தார் ஆசிரியர். என் பக்கத்து மாணவனை எழுப்பி ''வெள்ளம் வந்தால் என்ன செய்வே?'' என்று கேட்டார். அவன் ''சார், கொஞ்சம் வெல்லத்தை சாப்பிடுவேன், மீதியை வீட்டுக்கு எடுத்துட்டுப் போவேன்'' என்றான் மகிழ்ச்சியுடன். நாங்கள் சிரித்தோம். ''எப்பப் பார்த்தாலும் சாப்பிடறதிலேயே இரு'' என்றார் ஆசிரியர். தன் தவறை உணர்ந்தவன் சரியான பதிலைச் சொன்னான்.

— ஆர்.வி. மயில்வாகனன்,
மதுரை.

எண்ணிய முடிதல் வேண்டும்!

தமிழாசிரியர் ''எண்ணிய முடிதல் வேண்டும்'' என்று பாடல் நடத்தி முடிக்கவும் வகுப்பு முடிந்து மணி அடிக்கவும் சரியாக இருந்தது. உடனே ஆசிரியர், ''நீங்கள் எண்ணியது முடிந்தது'' என்றார். வகுப்பு முடிந்ததை நகைச்சுவையாகச் சொன்ன ஆசிரியரின் சிரிப்பில் நாங்களும் கலந்து கொண்டோம்.

— சி.டி. ரெங்கபாஷ்யம்,
சோமாதேவி.



முயலாமை...

எங்கள் பள்ளியில் நல் ஒழுக்க வகுப்பு தினமும் அரைமணி நேரம் நடக்கும். அதில் முயல் ஆமையிடம் தோற்ற கதையைச் சொன்னார் ஆசிரியர். பிறகு ஒரு மாணவனை எழுப்பி ''முயல் ஆமையிடம் தோற்றது ஏன்?'' என்று கேட்டார். அவனும் ''முயலாமையினால் தோற்றது'' என்றான். ''முயல் ஆமையிடம் தோற்றது என்றுதான் நானே சொல்லிட்டேனே! காரணத்தைச் சொல்'' என்றார் ஆசிரியர். ''சார், முயலாமை, அதாவது முயற்சி செய்யாததால் தோற்றது என்றேன்'' என்று கூறினான். ஆசிரியர் பாராட்டினார்.

— சி. ராஜசேகரன், ராஜபாளையம்.



உங்கள் நூலகம்

மாயத் தீவு, கௌதம குமார், பக்.156, ரூ.40/- கங்கை புத்தக நிலையம், தியாகராய நகர், சென்னை – 600 017.

மந்திர தந்திரக் கதைகளில் ஆர்வம் உள்ளவர்களுக்கு இது ஓர் அருமையான விருந்து. மந்திரவாதி வலையில் சிக்கிப் பைத்தியமாவது, ரத்தக் காட்டேரிக்கு பலி கொடுப்பது, தீவில் கருங்கல் சிலையைக் குட்டிச்சாத் தான்

மாயத்தீவில் குட்டிச்சாத்தான்!

இயக்குவது, சதி ஆலோசனை, ஆள் மாறாட்டம், ஆட்சியைப் பிடித்தல் போன்ற எல்லா வேலைகளும் நடக்கின்றன. நல்லவர்களுக்கு எல்லாவித மான சோதனைகளும் ஏற்பட்டு முடிவில் எல்லாம் விலகி, தீயவர்கள் தண்டிக்கப் பட நாட்டுக்கு நல்லதே நடக்கிறது. இந்த மந்திர தந்திர நாவல் இப்பொழுது அழகிய புத்தக உருவில் வெளி வருகிறது. படங்கள் மயக்குகின்றன. குழந்தைகள் கண்டிப் பாக வரவேற்பார்கள்.

*

பொங்கல் பரிசு, எஸ். ஆர்.ஜி. சுந்தரம், பக். 64, ரூ.15/- –, பாற்கடல் பதிப் பகம், 12, ஆறுமுகம் லேன், சென்னை – 5.

குழந்தைகளோடு நேரிடையாகத் தொடர்புடையவர்களாக இருப்பவர்களின் படைப்புகள் தனியான அனுபவ முத்திரையோடு இருக்கும் என்பதற்கு இந்த நூல் எடுத்துக்காட்டு. எட்டுக்கதைகள். எல்லாமே விலங்குகள் பறவைகளை வைத்து எழுதப் பட்டிருப்பவை. படிக்கும் போது படிக்கிறோம் என்ற நினைப்பே வருவதில்லை. கதை கூறுவதைக் கேட்கிறோம் என்ற நினைப்பே வருகிறது! ஏற்கெனவே கோகுலம் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமாகியுள்ள இந் நூலாசிரியருக்கு இது இன்னொரு வெற்றி. தரமான தயாரிப்பும் கூட. படங்கள் மேலும் அழகூட்டுகின்றன.

*

படிப்போம் உயர்வோம், அ.க. கிருஷ்ணன், பக். 71, ரூ.20/- கண்ணன் வெளியீடு, 4. ஏ.ஏ. ரோடு, வியாசர் நகர், சென்னை – 39

இதை மினி கதைகளின் தொகுப்பு எனலாம். எல்லாமே கோகுலத்தில் வெளி வந்து; பாராட்டுப் பெற்றவை தான். பிரும்மாண்டமான மரத்திற்குரிய வளர்ச்சியை ஒரு சிறுவிதை தன்னுள் மறைத்துக் கொண்டிருப் பதைப் போல் இதில் உள்ள குட்டிக்கதைகள் ஒவ்வொன்றும் மிகப் பெரிய கருத்தைக் கூறுவனவாக உள்ளன. அருமையான தொகுப்பு.

*

பாரதத் தாயின் புதல் வர்கள் – பூதலூர் முத்து, பக்.122, ரூ.24/- கங்கை புத்தக நிலையம், 13. தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை – 17.

வித்தியாசமான பன்னிரெண்டு சிறுகதைகளின் தொகுப்பு இது. அகதிகளாக வருபவர்களிடமிருந்து திருடுவதைத் தடுத்து அவர்களை நம்பிக்கை இழக்க வைக்காமல் மாணவர் கூட்டம் காக்கிறது. சினிமா பார்க்கும் ஆவலில் எல்லாவற்றையும் பணயம் வைத்து கல்வியைப் புறக்கணிக்கும் மாணவர்களைத் திருத்தும் ஆசிரியை. சாலையில் வசப்படும் கழிவுகளை அகற்றி தூய்மைக்கு வழி காட்டும் அண்ணன், தங்கை. பேய் வதந்தி வெறும் புரளியே என்று மோசக்காரர்களை இனம் காட்டித் தரும் சிறுவர் கூட்டம், மோசடி செய்து பெற்ற வெற்றிக்குப் பரிசு கிடைக்கும்போது மனம் மாறும் வேந்தன், ஒரு நாளாவது நேர்மையாக இருக்க முயன்று அளவில்லாத மன அமைதியும் பரிசும் பெறும் ஆட்டோ டிரைவர் போன்ற பல வித்தியாசமான பாத்திரங்களைக் கதைகளில் ஆசிரியர் சந்திக்க வைத்து மனதிலும் பதிய வைக்கிறார். நூல் குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் செல்லப்பன் நினைவுத் தங்கப் பதக்கத்தைப் பெற்றதில் அதிசயம் இல்லை. படங்களும் தயாரிப்பும் நூலுக்கு மெருகூட்டுகின்றன.

– ரே

கடமை தவறாதவர்கள்!

கிருஷ்ணாபுரம் என்பது ஒரு சிற்றூர். அந்த ஊரில் ராமையா, சின்னையா, பொன்னையா என்ற மூன்று நண்பர்கள் இருந்தனர். அவர்களை நம்பி எவரும் வேலை கொடுக்கத் தயங்கினர். ஆதலால் அவர்களுக்கு சாப்பாட்டுக்கே வழி இல்லாமல் போனது. எனவே மூன்று பேரும் அருகில் உள்ள சுந்தரபுரம் என்ற ஊருக்குச் செல்ல முடிவு செய்தனர். அதன்படி மறுநாள் காலை மூவரும் பக்கத்து ஊரான சுந்தரபுரத்திற்குச் சென்றனர்.

அவர்கள் அதிகமாக படிக்காததால் பண்ணையில் தான் வேலை கிடைத்தது. ராமையாவின் வேலை பள்ளம் தோண்டுவது. சின்னையாவின் வேலை விதை போடுவது. பொன்னையாவின் வேலை பள்ளத்தை மூடுவது.

அவர்கள் வேலைக்குச் சேர்ந்து ஒரு வாரம் ஆயிற்று. எனவே முதலாளியான ராஜசீலன் இவர்களின் வேலையைப் பார்வையிட வந்தார். அப்பொழுது ராமையா பள்ளம் தோண்டிக் கொண்டிருந்தான். பொன்னையா பள்ளத்தை மூடிக் கொண்டிருந்தான். உடனே அதைப் பார்த்த ராஜசீலனுக்கு குழப்பம் ஏற்பட்டது.

ஆகவே, ராஜசீலன் ராமையாவிடம் குழப்பத்தோடு வினவினார். "ஏன், நீ பள்ளம் தோண்டி முடித்த பின் பொன்னையா மறுபடியும் பள்ளத்தை மூடுகிறான்?" என்று கேட்டார்.

அதற்கு ராமையா "ஐயா, என்னுடைய வேலை பள்ளத்தைத் தோண்டுவது. பொன்னையாவின் வேலை பள்ளத்தை மூடுவது.

இதற்கிடையே சின்னையாவின் வேலை பள்ளத்தில் விதை போடுவது. அவன் இன்று வேலைக்கு வரவில்லை. அதற்காக நாங்கள் எங்கள் கடமையைச் செய்யாமல் இருக்க முடியாது. எங்களுக்கு இதை விட்டால் வேறு பிழைப்பும் கிடையாது. எனவே எங்கள் வேலையை நாங்கள் தவறாமல் செய்து கொண்டு வருகிறோம்" என்றான்.

ராமையா இதைச் சொல்லி முடித்த உடனேயே பொன்னையாவும் "ஆமாம்" என்று பின் குரல் கொடுத்தான். இதைக் கேட்ட முதலாளி ராஜசீலன் "ஐயோ! இந்த முட்டாள்களையா வேலைக்கு வைத்தேன்" என்று தலையில் அடித்துக் கொண்டு வேலையை விட்டு நீக்க முடிவு செய்தார்.

– எஸ். அனுராதா, கூடுவாஞ்சேரி.



பற்களை ஆரோக்கியமாக வைத்திருப்பது எப்படி?



● சி. கணேஷ்குமார், வைத்தீஸ் வரன்கோவில்

? விக்கல் ஏன் ஏற்படுகிறது? இதனால் உயிருக்கு ஆபத்து ஏற்படுமா?

! மூச்சுக் காற்றை உள்ளிழுக்கும்போது நம் மார்புக்கூடு விரிய வேண்டும். இதற்குத் துணை புரிய வெளி மார்புத் தசைகள் சுருங்க, உதரவிதானம் (diaphragm) சுருங்கி கீழிறங்க நுரையீரல்கள் இரண்டும் விரியும். இப்போது நுரையீரல்களில் காற்றின் அழுத்தம் குறைவதால் வெளிக்காற்று குரல் நாண்களை நன்றாகத் திறந்து கொண்டு மூச்சுக் குழாய் வழியாக நுரையீரல்களுக்குள் நுழையும். இது இயல்பான நிகழ்வு. சமயங்களில் மார்புத் தசைகள் போதுமான அளவுக்கு சுருங்காது; உதரவிதானம் சரியாகக் கீழிறங்காது; குரல் நாண்கள் நன்றாகத் திறக்காது. இம் மாதிரி சமயங்களில் மூச்சுப் பாதையின் மிகக் குறுகிய இடைவெளியில் மூச்சுக்காற்று நுரையீரலுக்குள் நுழைய வேண்டும். அப்போது, ஒரு வித விநோத ஒலி உண்டாகும். அதுதான் 'விக்கல்'.

சாதாரணமாக நாம் அளவுக்கு மீறி அல்லது அவசர அவசரமாக உணவு உட்கொண்டால் விக்கல் வரும்; தேவையான அளவுக்குத் தண்ணீர் குடிக்காத போதும் விக்கல் வருவதுண்டு. அதேசமயம் சிறுநீரகக் கோளாறுகள், கல்லீரல் நோய்கள், மூளைக்காய்ச்சல், நீரிழிவு நோய், குடல் அடைப்பு போன்றவற்றின் அறிகுறியாகவும் விக்கல் வரலாம். இதற்கு முறையான மருத்துவ ஆலோசனை பெற வேண்டும். தவறினால் உயிருக்கு ஆபத்து தலை காட்டும்.

● சி. ரெங்கநாதன், பெருமாள்பாளையம்.

? எய்ட்ஸ் நோயுள்ளவர்களின் கண்களையோ, சிறுநீரகங்களையோ மற்றவர்களுக்குப் பொருத்த முடியுமா?

! பொருத்த முடியாது, ரெங்கநாதன். அப்படிப் பொருத்தினால் பொருத்திக் கொண்டவருக்கும் எய்ட்ஸ் நோய் வந்து விடும்.

● பா. ஜெயக்குமார், வந்தவாசி.

? பஸ்ஸில் சிலருக்கு வாந்தி வருகிறதே... ஏன் டாக்டர்? இதை நிரந்தரமாகக் குணப்படுத்த முடியுமா?

! பஸ்ஸில் பயணம் செய்யும்போது அதன் வேகத்திற்கும், அசைவுக்கும் ஏற்றபடி நம் உடலும் நீளவாட்டத்திலோ, குறுக்கு வாட்டத்திலோ அல்லது செங்குத்தாகவோ அசைய நேரிடுகிறது. அப்போது சிலருடைய காதுகளில் 'வெஸ்டிபுலர் அமைப்பு' உடலை சமநிலைப்படுத்த சிரமப்படுகிறது. இதனால் மூளையின் வாந்தி நரம்புகள் தூண்டப்பட்டு வாந்தி வருகிறது. அரைமணி நேரத்திற்கு முன்பு அவோமின், டிசிரான் போன்ற மாத்திரைகளில் ஒன்றை சாப்பிட்டு விட்டால் போதும், பயண வாந்தி வராது.

● காழி ஆர். சீதாராமன், தென்பாதி

? 'டிராக்சன்' என்றால், என்ன டாக்டர்?

! நம் உடம்பில் உள்ள எலும்புகளில் சில பிரச்னைகள் ஏற்படும் போது அந்த எலும்புகளை எடை போட்டு இழுத்துக் கட்டி சரி செய்





கேட்கட்டுமா டாக்டர்?

யும் சிகிச்சைக்கு 'டிராக்சன்' (Traction) என்று பெயர். ஆரம்ப காலங்களில் முறிந்த எலும்புகளை சரி செய்வதற்காக டிராக்சன் பயன்பட்டது. இப்போது கழுத்து எலும்புகள் மற்றும் இடுப்பு எலும்புகள் தேய்ந்து விட்டால் அவற்றை சரி செய்ய டிராக்சன் பயன்படுகிறது.

● **எம். கே. வேங்கவேல், சேலம்.**

? எலும்பு எத்தனை வயது வரை வளரும், டாக்டர்?

! பெண்களுக்கு 16 வயது வரை; ஆண்களுக்கு 18 வயது வரை!



● **வி. கௌரி, சீர்காழி**

? தொடர்ந்து ஒரு பொருளை பத்து நிமிடம் பார்த்தால் ஒரு மணி நேரத்திற்குக் கண்களில் நீர் வருகிறது. இதற்குக் காரணம் என்ன, டாக்டர்?

! பார்வைக் கோளாறு (Refractive Error) தான் காரணம்! இந்தக் கோளாறு இருக்கும்போது கண் தசைகள் சீக்கிரத்தில் தளர்ச்சி பெற்று விடுவதால் கண்களிலிருந்து கண்ணீர் கொட்டும். உடனடியாக உன் கண்களைப் பரிசோதித்துக் கொள்வது நல்லது, கௌரி!

● **இரா. நவீன், புதுச்செந்நெல்குளம்.**

? மாரடைப்பு வருவது ஏன், டாக்டர்?

! இதயத்திற்கு ரத்த விநியோகம் செய்யும் 'கரோனரித் தமனிகள்' அடைபடும்போது, இதயத்தின் ஒரு பகுதிக்கு ரத்தம் தடைபட்டு, அப்பகுதி செயலிழந்து போவதால் வரக் கூடிய நோய்க்கு 'மாரடைப்பு' (Heart attack) என்று பெயர். இந்த ரத்தக் குழாய் அடைப்பானது பெரும்பாலும் ரத்தத்தில் உள்ள அதிக கொழுப்புச் சத்தால்தான் ஏற்படுகிறது. தவிர, உயர் ரத்த அழுத்தம், சர்க்கரை நோய், புகை பிடித்தல், மன உளைச்சல், உடல் பருமன், உடற் பயிற்சியின்மை போன்ற காரணங்களாலும் ரத்தக் குழாய் அடைபட்டு மாரடைப்பு வரலாம்.



● **கே. மருதேஸ்வரன், கும்பகோணம்**

? பற்களை ஆரோக்கியமாக வைத்திருக்க என்ன வழி?

! குழந்தைப் பருவத்திலிருந்தே பற்களை சுத்தமாக வைத்திருக்கப் பெற்றோர்கள் அக்கறை காட்ட வேண்டும். காலை, இரவு இரண்டு நேரமும் பல் துலக்க வேண்டும். இனிப்பு மற்றும் மாவுப் பதார்த்தங்களை சாப்பிட்டவுடன் வாய் கொப்பளிக்க வேண்டும். பால், பழம், காய்கறி, கீரை வகைகளை அவசியம் உணவில் சேர்க்க வேண்டும். பல்லில் ஏற்படும் சொத்தையை ஆரம்ப நிலையிலேயே கவனித்து விட வேண்டும். புகை பிடிக்கக் கூடாது. புகையிலை போடக் கூடாது. வெற்றிலை, பாக்கு, பான் மசாலா போன்றவற்றை உபயோகிக்கக் கூடாது. சாம்பல், செங்கல், உமி, உப்பு இவற்றால் பல் துலக்கக் கூடாது.



● **மு. ஜான் பிரபாகர், நித்திரவிளை**

? 'மஞ்சள் காமாலை' நோய்க்கு மஞ்சளை உணவில் சேர்க்கக் கூடாது என்கிறார்களே, ஏன்?

! மஞ்சள் காமாலைக்கும் மஞ்சளை உணவில் சேர்ப்பதற்கும் தொடர்பில்லை, பிரபாகர். இது ஒரு மூட நம்பிக்கை!

டாக்டர் கு. கணேசன்

தண்டனை!

சவர்க்கபுரி நாட்டின் அரசர் மிகவும் நல்லவர். இரக்க குணம் உள்ளவர்; மக்களை மிகவும் நேசித்தார்! மக்களும் அவரிடம் மிகுந்த அன்பு கொண்டிருந்தனர்.

ஆனால், அரசன் மனத்தில் ஒரே ஒரு பெரும் குறை. எல்லா மக்களும் தன்னைப் போல் தூயமனம் உடையவர்களாக இல்லையே என்று அவர் வருந்தினார். மக்களில் சிலர் திருடுதல், பொய் பேசுதல், பிறரை வஞ்சித்தல், பொறாமைப் படுதல், கோள் சொல்லுதல் போன்ற துர்குணங்களைக் கொண்டவர்களாக இருப்பதை அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

குறிப்பாகத் தன்னிடம் நெருங்கிப் பழகி வரும் இரண்டு பணியாட்களிடம் காணப்பட்ட துர்குணங்களைக் கண்டு, அரசர் மிகவும் வேதனைப்பட்டார்.

அந்தப் பணியாளர்களில் ஒருவன் பெயர் நந்து. மற்றொருவன் சுந்து. இருவரிடமும் பொறாமைக் குணம் மிக அதிகம். நந்து சுந்துவைப் பார்த்துப் பொறாமைப் படுவான். சுந்துவுக்கு நந்துவிடம் வயிற்றெரிச்சல்!

சமயம் கிடைக்கும் போதெல்லாம், நந்து சுந்துவைப் பற்றி, அரசனிடம் இல்லாததையும், பொல்லாததையும் கூறி, ஏதாவது கோள் மூட்டிக் கொண்டே இருப்பான். சுந்துவும் பதிலுக்கு நந்துவைப் பற்றி கோள் மூட்டுவான். இருவரும் இப்படி மாறி மாறித் தன்னிடம் கோள் சொல்வதை, அரசனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எனினும், வேறு ஒன்றும் செய்ய அரசனால் இயலவில்லை. ஏனெனில், அவர்தான் மிகுந்த இரக்க குணம் உள்ளவராயிற்றே! எனவே, அவர்கள் கூறுவதைப் பொறுமையாகக் கேட்டுக் கொண்டார்.

ஆனால், நாளடைவில் அரசன் மனதில் ஒரு எண்ணம் உதித்தது. 'இப்படி நாம் பொறுமையாகக் கேட்டுக் கொள்வதால்தானே, இவர்கள் நம்மிடம் வந்து கோள் சொல்கிறார்கள்? இது அவர்களைக் கோள் மூட்டுவதற்கு ஊக்கப்படுத்துவது போல் ஆகுமே! என்னிடம் எதுவும் சொல்லாதிர்கள் என்று கூறிவிடலாமா? சரி... நம்மிடம் சொல்ல மாட்டார்கள். வேறு யாரிடமாவது போய்க் கோள் மூட்டிக் கொண்டுதானே இருப்பார்கள். அதையும் அல்லவா தடுக்க வேண்டும்... அதற்கு என்ன செய்யலாம்?'

அரசர், சமயம் வரும் போதெல்லாம்,



தனித்தனியாக இருவரிடமும், கோள் சொல்வதால் ஏற்படும் தீமைகளை எடுத்துக் கூறி, அவர்களை நல்வழிப்படுத்த முயன்றார். அவர்களும் அமைதியாகச் 'சரி... சரி' என்று கேட்டுக் கொண்டனர். இரண்டு மூன்று நாட்கள், ஒழுங்காக இருந்தனர். பிறகு, 'பழைய குருடி, கதவைத் திறடி.' என்பார்களே, அதைப் போல், மறுபடியும், 'மகாராஜா, மகாராஜா... தெரியுமா செய்தி...? நந்து இருக்கிறானே.. அவன்...' என்று மீண்டும் கோள் வேலையைத் தொடங்கி விட்டார்கள்.

எனவே, மன்னர் மாற்று வழி பற்றி யோசித்தார். சதாசர்வ காலமும் அதே சிந்தனைதான். கடைசியில் அவருக்கே ஒரு நல்ல யோசனை தோன்றியது.

உடனே அரசர், பணியாளை அழைத்து, "யாரங்கே? உடனே போ... நந்துவை நான் அழைப்பதாக, கையோடு அழைத்து வா..." என்றார்.



நந்து வந்ததும், சற்று நேரம், வேறு ஏதோ பேசிக் கொண்டிருந்து விட்டுப் பேச்சோடு பேச்சாக, "ம்... சரி... அந்தச் சுந்து இருக்கிறானே...' அவன் எப்படிப்பட்ட ஆள்?" என்றார் அரசர்.

அதற்கு நந்து, 'இதுதான் நல்ல சந்தர்ப்பம்' என்று கருதி, "அவனா மகாராஜா? நானே உங்களிடம் சொல்ல வேண்டும் என்றிருந்தேன்... மிகவும் மோசமான கழுதை அவன்!" என்றான். பிறகு, "எதற்காகக் கேட்கிறீர்கள் அரசே?" என்று வினவினான்.

அரசர் அதற்கு, "ஒன்றுமில்லை... சும்மாதான் கேட்டேன்... நீ போய் வா..." எனக் கூறி அனுப்பிவிட்டார்.

பிறகு, வேறொரு சமயம், சுந்துவையும் அதே போல் கூப்பிட்டனுப்பி, அவனிடமும் அதே கேள்வியை அதாவது, "அந்த நந்து எப்படிப்பட்ட ஆள்?" என்று கேட்டார்.

அதற்கு சுந்து, மிகுந்த ஆக்ரோஷத்துடன், "அந்த நாயைப் பற்றியா கேட்கிறீர்கள்? மிகமிக மட்டரகமான வெறிநாய் அல்லவா அவன்?" என்றான்.

பின்னர், அரசன் அவனுக்கும் விடை கொடுத்து அனுப்பினார். நாட்கள் நகர்ந்தன.

ஒருநாள், அரண்மனையில் பெரிய விருந்து. ஏராளமானவர்கள் அழைக்கப்பட்டனர். நந்துவையும் சுந்துவையும் மன்னரே நேரில் "அவசியம் கலந்து கொள்ள வேண்டும்" என்று அழைப்பு விடுத்தார்.

விருந்து மண்டபம் நிறைந்து வழிந்தது. நந்து, சுந்து இருவரும் கூட வந்து



"ஓவியப் பள்ளிக்கு எப்படி போகணும்?"

"ஆர்ட்பேப்பர், வாட்டர் கலர், பிரஷ், பென்சிலுடன்தான்!"

– ஜி. குமரேசன்

"அதிர்ஷ்டமில்லாத ஒரு ஊர் பேர் சொல்லு?"

"லக்னோ!"

– தாரை மா. மகேஷ்



விட்டனர். வரிசை வரிசையாகப் பந்திப் பாய்கள் விரிக்கப்பட்டன. எல்லோரும் அவற்றில் அமர்ந்து கொண்டனர்.

மண்டபத்தில், எவரும் சீண்டாத ஒரு ஓரத்தில் ஆனால், அத்தனை பேர் கண்ணிலும் படும்படியான இடத்தில் இரண்டே இரண்டு பேர் அமரும் இடம் காலியாக விடப்பட்டிருந்தது. அரசர் நந்து - சுந்து இரண்டு பேரையும் அழைத்துப் போய், அந்த இடத்தில் அமர்த்தினார்.

பிறகு அரசர், பரிசாரகர்களை அழைத்துக் காதோடு என்னவோ சொன்னார். அவர்கள் ஓடிப் போய் இரண்டு குழிவான மண் தட்டுகளைக் கொண்டு வந்து, நந்து சுந்து இருவர் எதிரிலும் வைத்தனர்.

'மற்ற எல்லாருக்கும் நுனி கிழியாத தலைவாழை இலை... நமக்கு மட்டும் மண் தட்டா...?' என்று நந்துவும் சுந்துவும் திடுக்கிட்டனர்.

பாவம், அதைவிடப் பெரிய அதிர்ச்சி ஒன்று தமக்குக் காத்திருப்பதை, அப்போது அவ்விருவரும் உணரவில்லை.

'உணவு பரிமாறலாம்' என்று அரசர் உத்தரவிட்டார். உடனே, பரிசாரகர்கள் வரிசையாக வந்து, வகை வகையான உணவுப் பதார்த்தங்களை எல்லோர் இலைகளிலும் பரிமாறினார்கள். ஆனால், நந்து - சுந்து இருவரின் தட்டுகளில் மட்டும், அவற்றில் எதையுமே பரிமாறவில்லை. திடுக்கிட்ட அவ்விருவரும் நாக்கில் ஜலம் சொட்டச் சொட்ட, மற்றவர்கள் உண்பதைய் ஏமாற்றத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

சற்று நேரம் ஆயிற்று.


அரசர் பரிசாரகர்களைப் பார்த்து ஏதோ ஜாடை காட்டினார். விரைந்து வந்த அவர்கள் நந்து - சுந்து இருவரின் மண் தட்டிலும் எதையோ பரிமாறி விட்டுச் சென்றனர். அவற்றைப் பார்த்ததும் நந்து - சுந்து இருவருக்கும் மயக்கமே வந்து விட்டது. காரணமும் புரிந்தது.

நந்துவின் தட்டில் சில எலும்புத் துண்டுகள். அதே போல் சுந்துவின் தட்டில் கிழிந்த குப்பைக் காகிதத் துண்டுகள்!

அரசர் ஒரு சமயம் நந்துவிடம் சுந்துவைப் பற்றியும், சுந்துவிடம் நந்துவைப் பற்றியும் 'எப்படிப்பட்ட ஆள்' என்று விசாரித்தார் இல்லையா? அப்போது நந்து சுந்துவை மோசமான கழுதை என்றான். எனவே சுந்துவுக்குக் கழுதைகளின் உணவாகிய கிழிந்த குப்பைக் காகிதம் பரிமாறப்பட்டது. அதே போல் சுந்து நந்துவை 'வெறி நாய்' என்றான். எனவே நந்துவுக்கு நாய்களின் உணவாகிய எலும்புத் துண்டுகள் பரிமாறப்பட்டன.

மற்ற எல்லோரும், வகை வகையான உணவுப் பதார்த்தங்களை ருசித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது, நந்து - சுந்து இருவர் மட்டும் எதையும் சாப்பிட முடியாமல் அவமானப்பட்டுப் போய், உட்கார்ந்திருந்தனர்.

நான் குற்றமற்றவன்...



ராமன் என்ற இளைஞன் எதிர்பாராத விதமாக ஒரு வழக்கில் மாட்டிக் கொண்டான். கோர்ட்டில் நீண்ட நாட்களாக வழக்கு நடந்து கொண்டிருந்தது.

ராமன் சார்பாக சாட்சி சொல்ல யாரும் முன்வரவில்லை.

நீதிபதிக்கு அவன் குற்றம் செய்யவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தாலும் சாட்சிகளின்படி ராமனுக்கு எதிராக தீர்ப்பு வழங்கும் நிலையில் இருந்தார்!

கடைசியாக நீதிபதி, ராமனிடம், "உன்னை நல்லவன் என்று சொல்ல யாராவது இருக்கிறார்களா?" என்று கேட்டார்.

ராமன் ஒரு நிமிடம் பதில் சொல்லாமல் கோர்ட்டில் இருந்தவர்களைச் சுற்றி நோட்டம் விட்டான். அங்கு ஒரு பிரபல கிரிமினல் வக்கீலும் உட்கார்ந்திருந்தார். உடனே அவன் மூளையில் ஒரு மின்னல். இவரை வைத்து நாம் தப்ப வேண்டும்.

உடனே நீதிபதியைப் பார்த்து, "ஐயா... அதோ அங்கே உட்கார்ந்திருக்கிறாரே... பிரபல கிரிமினல் வக்கீல். அவர் இருபத்தி ஐந்து வருடங்களாக வக்கீலாக இருப்பவர். அவரிடம் என்னைப் பற்றிக் கேளுங்கள். தெரியும்..." என்றான்.

"அப்படியா?..." என்ற நீதிபதி உடனே அந்த வக்கீலைப் பார்த்தார்.

உடனே அவர் எழுந்து, "மன்னிக்கணும்... இவரை எனக்குத் தெரியாது. நான் பார்த்ததேயில்லை..." என்றார்.

நீதிபதி, ராமனைப் பார்த்து, "இவர் உன்னைத் தெரியாது என்கிறாரே...?" எனக் கேட்டார்.

அதற்கு ராமன், "உண்மைதான். இந்த வக்கீல் இருபத்தி ஐந்து வருடங்களாக இந்த ஊரில் இருந்தும் என்னைப் பார்த்ததில்லை என்றால் நான் ஒரு கிரிமினல் இல்லை என்றுதானே அர்த்தம். நான் நல்லவனாக இருந்ததால்தான் இவருக்குத் தெரியவில்லை..." இதுவே நான் நல்லவன் என்பதை நிரூபிக்கிறது ஐயா" என்று முடித்தான்.

நீதிபதி, அவனுடைய சாதுர்யத்தைக் கண்டு வியந்து, "குற்றமற்றவன்" எனக் கூறி விடுதலை செய்தார்.

- வி. ஆர். கிருத்திகா

பெல் டவுன் ஷிப், திருச்சி



என்ன செய்தாலும் தவறா?

முருகன் துணி வியாபாரம் செய்து வந்தார். அவரிடம் வயதான குதிரை ஒன்று இருந்தது. அதை நன்றாக கவனித்துக் கொண்டார்! சரக்கை மட்டும் குதிரையில் ஏற்றி விட்டு அவர் நடந்தே செல்வார்.

ஒருநாள் பட்டணத்திற்குச் சென்று சரக்கு வாங்கி வர கிளம்பினார். அவரது மகன் பாலு, தானும் பட்டணம் வருவேன் என்று அடம் பிடித்தான்.

"குதிரையால் அதிக சுமையைத் தாங்க முடியாது. திரும்பி வரும் போது நீ நடந்து தான் வர வேண்டும்'' என்றார் முருகன்.

அவனும் அதற்கு சம்மதித்துக் கிளம்பினான்.

மகனை குதிரையில் ஏற்றி விட்டு முருகன் நடந்து சென்றார்.

வழியில் ஒருவர் "வயதானவரை நடக்க விட்டு, நீ உட்கார்ந்து வருகிறாயே, இது நியாயமா தம்பி?'' என்று பாலுவைப் பார்த்து கேட்டார்.

பாலு இறங்கி விட்டு, தந்தையை உட்காரச் சொன்னான்.

சிறிது தூரம் சென்றதும் இன்னொரு வழிப்போக்கன் "இது என்ன அநியாயம்? சிறுவன் நடக்க பெரியவர் குதிரையில் வருவதா?'' எனக் கேட்டான்.

உடனே மகனையும் குதிரையில் ஏற்றி பயணத்தைத் தொடர்ந்தார் முருகன்.

மேலும் சிறிது நேரத்தில் அப்பாதை வழியே வந்த ஒருவன் "வயதான குதிரை மீது இரக்கம் இல்லாமல் இருவர் பயணம் செய்யலாமா?'' என்று கேட்டு விட்டுச் சென்றான்.

இருவரும் இறங்கி குதிரையோடு நடக்க ஆரம்பித்தார்கள். பட்டணத்தை நெருங்கும் முன் ஒருவன் அவர்களைப் பார்த்து சிரித்தபடியே "சரியான முட்டாள்கள்! குதிரையை வைத்துக் கொண்டு நடந்து செல்கிறார்கள்'' என்றான்.

இதைக் கேட்ட முருகனுக்கும், பாலுவுக்கும் தலை சுற்றியது.

– எஸ். சத்யா,
ஆறாம் வகுப்பு,
காமராசர் மேல் நிலைப்பள்ளி,
கோவில்பட்டி தூத்துக்குடி மாவட்டம்.

அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெறும் கதை

வீடியோ கேம்!


ஜி. ரமணி

நகரத்தில் உள்ள முக்கிய பள்ளிகளில் அதுவும் ஒன்று. கம்பீரமாக உயர்ந்து நிற்கிறது. வண்ண உடை அணிந்த பட்டாம் பூச்சிகளாய் யூனிபார்ம் தரித்த சிறுவர், சிறுமியர்கள் அலைந்து கொண்டிருந்தனர். அன்று, கோடை விடுமுறை முடிந்து மறுபடியும் பள்ளி தொடங்கிய நாள். தங்களை விட்டுப் பிரிந்திருந்த நண்பர்களைக் காணும் பொருட்டு அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தனர் மாணவர்கள்.

சந்திரன் அப்போதுதான் ரிக்ஷாவை விட்டுக் கீழிறங்கினான். அவனுக்குப் பத்து வயதாகிறது. தோளில் தாங்கியிருந்த பையில் ஆறாம் வகுப்புக்குத் தேவையான அனைத்துப் புத்தகங்களும் நிரம்பியிருந்தன. கையில் பிடித்திருந்த கூடையில் மதிய உணவு டப்பாவும், தண்ணீர் பாட்டிலும் இருந்தன.

காலை 9.30 மணிக்கு தமிழ்த்தாய் வாழ்த்துடன் பிரேயர் துவங்கியது. வாழ்த்து முடிந்ததும் வழக்கப்படி 'தினம் ஒரு திருக்குறள்' வாசிக்கப்பட்டது. பின், தலைமையாசிரியர், "குழந்தைகளே! இன்று நீங்கள் பழைய வகுப்பிலிருந்து புது வகுப்புக்கு காலடி எடுத்து வைக்கப் போகிறீர்கள். உங்களின் திறமைகளையெல்லாம் திறம்பட வெளிக்காட்டி இந்த ஆண்டு சிறப்புறச் செயல்படல் வேண்டும். அதுதானே உங்கள் பெற்றோர்களது ஆசை. இதையெல்லாம் கருத்தில் கொண்டு கற்க வேண்டும்!" என்று கூறினார்.

பின், வகுப்புகள் பிரிக்கப்பட்டன. சந்திரன், தனது நண்பர்களான ராகுல், ரமேஷ், சங்கர், ராஜன் ஆகியோருடன் ஒருங்கே ஒரு வகுப்பாகப் பிரிக்கப்பட்டான். நாற்பது பேருக்குப் பக்கத்தில் நிரம்பிய அவ்வகுப்பில் நண்பர்கள் ஐந்து பேரும் தனித்திருந்தனர்.



ஐவருமே தங்களது விடுமுறை அனுபவங்களை விவரித்துக் கொண்டிருந்தனர். சந்திரன் மட்டும் அமைதியாக அமர்ந்திருந்தான்.

நால்வரும் சந்திரனிடம் "எங்களது விடுமுறை அனுபவங்களைக் கூறினோம். நீ உன்னுடைய விடுமுறையை எப்படி கழித்தாய்? சொல்லேன்" என்று கேட்டனர்.

சந்திரன் மிகுந்த சோகத்துடன், "என் விடுமுறையை வீட்டிலேயே கழித்துவிட்டேன்" என்று கூறினான். இவ்வார்த்தையைச் சொல்வதற்குள் அவன் மிக்க மன வேதனை அடைந்திருந்தான். நண்பர்களது மத்தியில் தனது மதிப்பு சரிந்து விட்டதாகவே அவன் எண்ணினான். அதை அவன் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

அப்போது ராகுல், "உங்களுக்கு ஒரு சர்ப்ரைஸைத் தரப் போகிறேன்" எனக் கூவினான். "என்ன?" என்று நண்பர்கள் பரபரத்தனர்.

"இன்று பள்ளி முடிந்ததும் எங்க வீட்டுக்கு வாங்க. சிங்கப்பூர் மாமா வீடியோ கேம் வாங்கி எனக்குப் பரிசா கொடுத்திருக்கார்!" என்று தனது பிரதாபங்களையும் வீடியோ கேமின் விசேஷத்தையும் எடுத்துரைத்தான் ராகுல்.

மாலையில் ராகுல் வீட்டில் வீடியோ கேமை பார்த்துவிட்டுத் திரும்பிய சந்திரன் மனதில் ப்ளாஷ் அடித்தது. நாமும் வீடியோ கேமை வாங்கி வந்து இவர்களிடம் காட்டி நமது பெருமையை உயர்த்திக் கொள்ள வேண்டும் எனத் திட்டமிட்டான். பள்ளி விட்டு வேகமாக வீட்டை நோக்கி நடந்தான்.

வீட்டில் அம்மா இல்லை. கடைக்குச் சென்றிருந்தார். அம்மா வந்தவுடன், தான் அன்று மாலை ராகுல் வீட்டில் பார்த்த இரண்டாயிரம் ரூபாய் மதிப்புள்ள தரமான 'வீடியோ கேம்' ஒன்றினை வாங்கித் தரும்படி நச்சரித்தான். இல்லையெனில் தான் நாளையிலிருந்து பள்ளி செல்வதில்லை என்ற உறுதி மொழியையும் தந்தான்.

பள்ளி சென்ற முதல் நாளே இப்படி ஒரு இடி விழும் என சந்திரனின் தாயார் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு, "இரவு உன் அப்பாவிடம் கேட்டு பதிலைச் சொல்கிறேன்" என சந்திரனின் மனம் கோணாதவாறு கூறி தூங்க வைத்தார் அம்மா.

இரவு பதினொரு மணியளவில் தொழிற்சாலையில் வேலை பார்த்துவிட்டு களைப்புடன் வீட்டிற்குத் திரும்பினார் சந்திரனின் அப்பா.

சாப்பிட உட்கார்ந்த சந்திரனின் அப்பா, "புது வகுப்பு அனுபவம் ஏதாவது சொன்னானா?" என்று ஆவலுடன் சந்திரனின் அம்மாவிடம் கேட்டார்.

'வீடியோ கேம்' இல்லாது பள்ளி செல்லக் கூடாது என்ற உறுதியோடு இருந்த சந்திரன் தூங்காமல் அம்மா, அப்பா இடையே நடக்கும் பேச்சுகளை கவனிக்கலானான்.

"அனுபவமா? கேட்டால் அசந்துடுவீங்க. பள்ளி திறந்த முதல் நாளே மாபெரும் கோரிக்கை ஒன்றை வைத்து விட்டான். அது நிறைவேறாவிட்டால் பள்ளி செல்லமாட்டேன் என அடம் பிடிக்கிறான்" என்று கவலையுடன் கூறினார் அம்மா.

"முதல் நாளே ஒரு மாபெரும் கோரிக்கையா, என்ன அது?" என்று சாப்பிட்டபடியே கேட்டார் அப்பா.

"இரண்டாயிரம் ரூபாய் மதிப்புள்ள வீடியோ கேம்தான் அந்தச் சனியன்" என்று



சற்று கோபமாகவே சொன்னார்.

"ஐயய்யோ! இரண்டாயிரம் ரூபாயா? நாம் இருக்கும் நிலையில் இப்படி ஒரு ஆசையா? மாதம் மூவாயிரம் ரூபாய் வாங்கும் எனக்கு அனைத்துச் செலவுகளும் போக கையில் ஐநூறுதான் மிஞ்சி நிற்கிறது. இப்பணமும் சந்திரனது பள்ளிப் படிப்புக்காக ஒவ்வொரு மாதமும் செலவிடறோம். அவனை நாம் கொஞ்சம் செல்லமாக வளர்த்து விட்டோம்'' என்று கூறிய அவரின் குரலிலும் வருத்தம் தெரிந்தது.

"அவனுக்கு எப்படி புரிய வைப்பது? சொன்னாலும் ஒத்துப்பானா?'' என்றார் அம்மா.

சிறிது நேர யோசனைக்குப் பின், "சரி! இப்படிச் செய்தால் என்ன?" என்று கேட்டார் அப்பா.

"எப்படி?"

இந்த நேரத்தில் சந்திரனும் காது கொடுத்து கவனிக்கலானான்.

"அவனுடைய எதிர்காலம் நல்லா இருக்கணும் என்ற ஒரே காரணத்திற்காகத்தான் செலவானாலும் பரவாயில்லை என்று நம்முடைய அவசியமான செலவுகளைக் கூட செய்யாமல் பணம் கட்டி படிக்க வைக்கிறோம். வசதியான வீட்டுப் பிள்ளைகளுடன் பழகுவதால் அவனுக்கும் இந்த மாதிரி ஆசைகள் வந்து விடுகிறது. அதனால்....'' சற்று நிறுத்தினார் அப்பா.



அம்மா, 'அவர் என்ன கூறப் போகிறார்?' என்று நினைத்தபடி பார்த்துக் கொண்டிருந்தார்.

"அவனை இந்தப் பள்ளியிலிருந்து ஒரு சாதாரண பள்ளிக்கு மாற்றி விடலாம். நீ என்ன நினைக்கறே?" என்று அம்மாவிடம் கேட்டார்.

''அவன் இந்தப் பள்ளியை விட்டுப் போவதை நினைத்தால் வருத்தமாகத்தான் இருக்கு. என்ன செய்ய? இன்னிக்கு வீடியோ கேம் கேட்டவன் நாளைக்கு என்ன கேட்பானோ? அதையெல்லாம் சமாளிக்க நம்மால் முடியாது. உங்க முடிவு சரிதான்" என்றார் அம்மா.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த சந்திரன் அதிர்ச்சி அடைந்தான். வீடியோ கேம் கிடைக்காத ஏமாற்றம் ஒருபுறம், பள்ளி மாற்றம் ஒருபுறம் என பலவித குழப்பங்களோடு தன்னையறியாமல் தூங்கினான்.

மறுநாள் காலை.

''என்ன சந்திரா பள்ளிக்கு கிளம்பிட்டே?'' என்றார் அம்மா வியப்புடன்.

"நான் பள்ளிக்குப் போகப் போறேன். வீடியோ கேம் வேண்டாம்" என்றான் சந்திரன்.

''என்னடா திடீர்னு இப்படி ஒரு முடிவு?"

"அம்மா நேற்று இரவு நீங்களும் அப்பாவும் பேசிக் கொண்டிருந்ததைத் தூங்காமல் கேட்டேன். உங்க தேவையைக் கூட நிறைவேற்றாமல் எவ்வளவு கஷ்டத்துல என்னை படிக்க வைக்கிறீங்கன்னு புரிஞ்சுது. எனக்கு தேவை நல்ல கல்விதான். வீடியோ கேம் இல்லை. அப்பாவிடம் சொல்லிடுங்க. நான் இந்தப் பள்ளியிலேயே தொடர்ந்து படிக்கிறேம்மா" என்று கெஞ்சலாக அம்மாவின் கைகளைப் பிடித்துக் கொண்டான் சந்திரன்.


"தேங்ஸ் சந்திரா. நீ இதே பள்ளிக்கூடத்திலேயே தொடர்ந்து படிக்கலாம். கிளம்பு, நேரமாயிடுச்சு'' என்று அம்மா சொல்லவும் சந்திரன் பையை எடுத்துக் கொண்டு பள்ளிக்குக் கிளம்பினான்.


கும்ப்ளே வீழ்த்திய 200 விக்கெட்டுகள்!

செப்டெம்பர் மாதம் ஜிம்பாப்வே உடன் ஆடிய ஒரு நாள் போட்டி, கும்ப்ளேயின் வாழ்வில் மகத்தான நாள். அன்றுதான் இருநூறாவது விக்கெட்டை அவர் வீழ்த்தினார். தனது 147 ஆவது ஆட்டத்தின் போது 200 ஆவது விக்கெட்டை வீழ்த்திய கும்ப்ளே கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த 28 வயது இன்ஜினியர்; சுழற்பந்து வீச்சாளர். வேறு எந்த சுழற்பந்து வீச்சாளரும் ஒரு நாள் போட்டிகளில் இந்த எண்ணிக்கையை எட்டியதில்லை.

1990 இல் இங்கிலாந்தில் நடைபெற்ற 'டெக்ஸாகோ டிராபி' போட்டிகளின் போது கும்ப்ளே அறிமுகமானார். அதிலேயே 'தொடர் நாயகன்' விருது அவருக்குக் கிடைத்தது. 1993 இல் மேற்கிந்தியத் தீவுகளுடன் ஆன 'ஹீரோ கப்' இறுதிப் போட்டி கல்கத்தாவில் நடைபெற்றது. அப்போட்டியில் கும்ப்ளே ஆறு விக்கெட்டுகளை – பன்னிரெண்டு ரன்கள் மட்டுமே கொடுத்து வீழ்த்தினார்.

கும்ப்ளே கூறுகிறார்: "இருநூறு விக்கெட்டுகள் வீழ்த்தியதில் நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். இது எனக்கு மறக்க முடியாத மேட்ச். எனக்கு கன்னி ஓவர்கள் (Maiden Overs) வீசுவதைக் காட்டிலும், விக்கெட்டுகளை வீழ்த்துவதிலேயே விருப்பம் அதிகம். ரன்களைக் கட்டுப்படுத்துவதோடு விக்கெட்டுகளை வீழ்த்த வேண்டியதும் மிக அவசியம். தொடர்ச்சியாக நான் சிறப்பாக விளையாட முயற்சி செய்கிறேன்." ஜிம்பாப்வேயுடன் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் கும்ப்ளே 200 விக்கெட்டுகளை வீழ்த்தி டெஸ்ட் போட்டியிலும் தமது சாதனையைப் படைத்து விட்டார்.





சச்சின் சாதனைகள் தொடர்கின்றன!

சச்சின் டெண்டுல்கர் மீண்டும் உலக சாதனை நிகழ்த்தியிருக்கிறார். உலகிலேயே ஒரு

நாள் போட்டிகளில் அதிக சதங்களைப் பெற்ற பெருமை அவரைச் சேர்ந்திருக்கிறது. தம் 18 ஆவது ஒரு நாள் சதத்தை ஜிம்பாப்வே உடன் ஆடிய போட்டியில் சேர்த்தார் சச்சின். இதற்கு முன் மேற்கிந்தியத் தீவுகளைச் சேர்ந்த டெஸ்மண்ட் ஹெய்ன்ஸ் சேர்த்திருந்த 17 சதங்களே சாதனையாக இருந்தது.

ஜூலை மாதம் இலங்கையில் நடைபெற்ற 'நிதிகாஸ் டிராபி'யின் போது 17 ஆவது சதமடித்த சச்சின், டெஸ்மண்ட் ஹெய்ன்ஸ் உடன் சாதனைப் பட்டியலில் இணைந்தார்.

இப்போட்டியில் சௌரவ் கங்குலியுடன் இணைந்து சச்சின் பெற்ற முதல் விக்கெட்டுக்கு 225 ரன்கள் - இதுவும் ஓர் உலக சாதனை.

தன் 198 ஆவது ஒரு நாள் போட்டியின் போது சச்சின் இச்சாதனையை நிகழ்த்தியிருக்கிறார். 17 சதங்கள் சாதனையை எட்ட ஹெய்ன்ஸுக்கு சச்சினைக் காட்டிலும் 46 இன்னிங்ஸ் அதிகம் தேவைப்பட்டது. அவரைக் காட்டிலும் குறுகிய காலத்தில் குறைந்த வயதில் (வயது 25) இச்சாதனை சதத்தை அடித்திருக்கிறார் சச்சின்.

"இன்று இந்திய அணி வென்றதே என்னை மகிழ்ச்சியடைய வைத்திருக்கிறது. இன்று நான் சதமடித்து, அணி வெற்றி பெறாமல் இருந்தால் என்ன பயன்? அணி வெல்ல உதவும் பத்து ரன்களைச் சேர்த்தால் கூட எனக்கு மகிழ்ச்சிதான். என்னுடைய தனிநபர் சாதனைகளை நான் முக்கியமாகக் கருதுவதில்லை" என்று தன்னடக்கத்துடன் கூறுகிறார் இந்த இளம் சாதனையாளர்!

எதிர்கால 'அத்லெட்'களே... கவனியுங்கள்!

நீங்கள் உடற்பயிற்சி விளையாட்டு வீரர் (Athlete) ஆக விரும்புகிறீர்களா? உங்களுக்கு வலிமையும் உடல் நலமும் மிக அவசியம். உங்களின் உடல்நலத்திற்கு உகந்த பயிற்சி ஒன்று இருக்கிறது. அதுதான் 'நடத்தல்' - சுறுசுறுப்பாக நடங்கள், பேருந்தையும், இரு சக்கர வாகனத்தையும் மறந்து விடுங்கள். பள்ளி சென்று திரும்ப உங்கள் கால்களையே வாகனமாக்குங்கள்.

- உங்கள் பள்ளி உடற்கல்வி ஆசிரியர் உங்களுக்கு உதவக் கூடும். உடலை வலிமையாக்கவும், எளிதில் வளைக்கவும் உதவும் உடற்பயிற்சிகள் பற்றி அவரிடம் கேட்டறியுங்கள். எறிதல், குதித்தல், போன்ற விளையாட்டுகளின் போது உங்கள் அடிவயிற்றுத் தசைகளின் பணி மகத்தானது.

- நீங்கள் வலுவாக இருக்கிறீர்கள் எனில், உடற்பயிற்சி விளையாட்டுகளை இன்றே தொடங்குங்கள். ஒரே ஒரு விளையாட்டில் மட்டுமே கவனம் செலுத்தி, மற்றவற்றை கண்டு கொள்ளாமல் இருக்காதீர்கள். உங்களில் பலருக்கு ஓட்டப் பந்தயத்தில் ஆர்வம் இருக்கக் கூடும்.



உங்கள் திறன்களை வளர்க்கும் பட்சத்தில், வட்டு எறிதலிலோ, உயரந்தாண்டுதலிலோ புகழ் பெற வாய்ப்புண்டு.

● வேகம்... வேகம்... அனைத்து விளையாட்டுகளிலும் வேகத்திற்கு முக்கிய பங்குண்டு. தூரம் குறைந்த, வேகம் நிறைந்த ஓட்டப் பயிற்சிகளை மேற்கொள்ளுங்கள். நீண்ட தூர ஓட்டப் பயிற்சிகளையும் மேற்கொள்ளுங்கள். சில வேளைகளில் முடிந்த அளவு அதிவேகத்தில் ஓடுங்கள். வேறு சில வேளைகளில், குறைவான வேகத்தில் - ஆனால் அதிக தொலைவு ஓடுங்கள்.



● உடை விஷயத்திலும் உங்கள் கவனம் இருக்கட்டும். ஆடைகள் மிக இறுக்கமாக இருக்கக் கூடாது. தொடக்க காலத்தில் 'ட்ராக் சூட்' போன்ற சிறப்பு ஆடைகள் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. பயிற்சியாளர்களிடம் எந்தப் பயிற்சிக்கு எந்த உடை உகந்தது எனக் கேட்டறியுங்கள்.

● விளையாட்டுப் பயிற்சிகளின் போது ஓர் ஒழுங்குமுறை - சுயகட்டுப்பாடு மிக முக்கியம். தூங்குதல், சாப்பிடுதல், வேலை செய்தல், விளையாடுதல் ஆகியவற்றில் ஒழுங்குமுறை வேண்டும். எறிதல் விளையாட்டுகளில் குழு ஒழுங்கு இல்லாவிடில், மற்றவர்களுக்கு காயம் ஏற்படும் வாய்ப்புண்டு.

● பயிற்சிக்கு முன் ஐஸ் கிரீம், இனிப்பு வகை, மூக்கு முட்ட சாப்பாடு – கூடவே கூடாது! உங்களுக்குத் தேவையான அளவு மட்டுமே சாப்பிடுங்கள். அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு!

● விளையாட்டுப் பயிற்சிகளை விருப்பத்துடன் செய்யுங்கள். உங்களுக்கு அவை மகிழ்ச்சி தரவில்லையெனில், செய்யும் முறையில் கூட ஏதேனும் குறையிருக்கலாம். அதைக் கண்டறிந்து நிவர்த்தி செய்யுங்கள்.

● உங்கள் வயதில் - நீங்கள் எவ்வளவு தொலைவை எவ்வளவு நேரத்தில் கடக்க வேண்டும்; எவ்வளவு நீளம், உயரம் தாண்ட வேண்டும்; வட்டு அல்லது குண்டை எவ்வளவு தூரத்தில் எறிய வேண்டும் - போன்ற விவரங்களைக் கேட்டறியுங்கள். அந்தக் கணக்கிடு களுக்கு ஏற்ப முயற்சி செய்யுங்கள். முதலில் சிரமமாகவே இருக்கும். மனந் தளராதீர்கள். வெற்றி நிச்சயம்!

— விளையாட்டுப் பையன்









சென்னைக்கு வந்த சக்திமான்!

அக்டோபர் ஏழாம் தேதி சென்னையில் உள்ள குழந்தைகள் மிகுந்த உற்சாகத்தில் இருந்தார்கள். அதற்குக் காரணம் அவர்களின் உள்ளம் கவர்ந்த டீ.வி. தொடரின் நாயகன் சக்திமான் சென்னை வந்திருந்ததுதான்.

ஒரு நாள் முழுவதும் அவருடைய குட்டி ரசிகர்களைக் காண்பதற்காக ராஜரத்தினம் ஸ்டேடியத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

மேடையில் நின்று, உட்கார்ந்து, கையசைத்து, கைகுலுக்கி, பேசி குழந்தைகளை மகிழ்ச்சிக் கடலில் மூழ்கடித்தார் சக்திமான்.

ஸ்டேடியம் முழுவதும் பல ஆயிரக்கணக்கான குழந்தைகள் குழுமியிருந்தனர். சிறிய குழந்தையிலிருந்து பெரிய குழந்தைகள் வரை 'சக்திமான் சக்திமான்' என பெயரை உச்சரித்த வண்ணமிருந்தனர்.

இந்நிகழ்ச்சியில் ஏராளமான போட்டிகள் நடத்தப்பட்டன. மாறுவேடப் போட்டியில் நிறைய குட்டி சக்திமான்கள் காட்சியளித்தார்கள்.

எழும்பூரில் ஆறாம் வகுப்பு படிக்கும் பாஸ்கரிடம் "உனக்கு சக்திமான் பிடிக்குமா?" என்று கேட்டதற்கு, "யாருக்குத்தான் பிடிக்காது! அவருடைய சாகசங்கள் அற்புதமாக இருக்கும்" என்று பதில் கூறுகிறான்.

ஏழாம் வகுப்பு படிக்கும் ஆர். வித்யா, "எவ்வளவுதான் எதிரிகள் சக்திமானை அழிக்க நினைத்தாலும் அதையெல்லாம் எதிர் கொண்டு தமது சக்தியால் தப்பி விடுவார். ஒரு வாரம் கூட பார்க்காமல் இருந்ததில்லை" என்கிறாள்.

குழந்தைகளைப் பற்றி சக்திமானாக வரும் திரு. முகேஷ்கன்னா என்ன கூறுகிறார்? "புத்தகங்கள் வாசிப்பதிலிருந்து குழந்தைகளின் கவனத்தைச் சிதறச் செய்து தன் வசப்படுத்தி விடுகின்றன டீ.வி. நிகழ்ச்சிகள். இது எனக்கு வருத்தத்தை அளிக்கிறது. டீ.வி. நிகழ்ச்சிகள் குழந்தைகளின் புத்தக வாசிப்பிற்கோ, விளையாட்டிற்கோ, பள்ளி படிப்பிற்கோ இடையூறாக இருக்கக் கூடாது. ஒரு மனிதன் முழுமை பெற வேண்டும் என்றால் படிப்பும் விளையாட்டும் அவசியம் தேவை எனது தொடரில் நாட்டுப்பற்றையும், நட்புணர்வையும் குழந்தைகளுக்குப் பிடிக்கும் வகையில் வலியுறுத்தி வருகிறேன்" என்கிறார்.



ரெயின்கோட்!

வெளியில் நல்ல மழை. அலுவலகம் செல்வோர், பள்ளிக்குச் செல்வோர், கடைக்கு, ஊருக்குச் செல்வோர் – இப்படி அனைவரையும் சிறிது சிரமப்படுத்துகிறது இந்த மழை.

மழைக்கு பயந்து கொண்டு வெளியே செல்லாமல் இருக்க முடியுமா? அதற்காக நனைந்து கொண்டும் செல்ல இயலாதே! என்ன செய்யலாம்? கவலையே வேண்டாம்! குடையும், ரெயின் கோட்டும் இருக்கவே இருக்கிறதே!

குடையை இரு சக்கர வாகனங்களில் போகும்போது பயன்படுத்த முடியாது. ஆனால் ரெயின் கோட்டை எங்கும், எப்படியும் பயன்படுத்தலாம்.

சரி! ரெயின் கோட் எனப்படும் நீர்புகா ஆடையின் வரலாறுதான் என்ன?

தென் அமெரிக்காவிற்கு ஆய்வுப் பயணத்தை மேற்கொண்டிருந்த ஸ்பானிஷ் பயணிகளால் எண்ணெய் பசையுள்ள ரப்பர் கோட் தயாரிக்கப்பட்டது. இதுதான் முதல் ரெயின் கோட் என சிலர் கருதுகின்றனர்.

மேலும் சிலர் ஃப்ரான்காய்ஸ் பிரெஷ்னே என்ற பிரெஞ்சு பொறியியலாளரால் கண்டு பிடிக்கப்பட்டதாகக் கூறுகின்றனர். இவர் 1748 ஆம் ஆண்டு ஒரு கூட்டத்தில் ரப்பரைப் பற்றியும் ரப்பரை எப்படி கோட் மற்றும் ஷூக்களில் பயன்படுத்தி தண்ணீர் புகாதவாறு உருவாக்குவது என்பதைப் பற்றியும் பேசினார்.

ஆனால் இந்த முறையைக் கையாண்டு அதிக அளவில் ரெயின் கோட்டுகளை உற்பத்தி செய்தவர் சார்லஸ் மேக்கின்டாஷ் என்ற ஆங்கிலேயர்தான்.

மெக்கின்டாஷின் நீர் புகா ஆடைகள் இரண்டு பருத்தி துணிகளுக்கு நடுவில் ரப்பரை வைத்து தயாரிக்கப்பட்டது. ரப்பரை மென்மையாக்க டர்பன்டைன் சேர்க்கப்பட்டது. பின் இவற்றை வெட்டி, தைத்து நீர்புகா ஆடையை உருவாக்குவர். இவ்வாடைகளுக்கு மெக்கின்டாஷ் – சுருக்கமாக 'மெக்' ஆடைகள் என்று பெயர்.

மெக் ஆடைகளில் தொடக்க காலத்தில் சில இடையூறுகளும் இருந்தன. இந்த நீர்புகா ஆடைகளை உபயோகிக் கும் வேளையில் வெயில் வந்து விட்டால் ரப்பர் உருகி உடலில் ஒட்டிக் கொண்டு விடும். பேருந்தில் உட்காரும்போதோ அல்லது கூட்டத்தில் செல்லும்போதோ உருகிய ரப்பர் ஒருவித மணத்தைப் பரப்பும். மேலும் அருகில் உள்ளவர்கள் மீது படும்போது உருகிய ரப்பர் ஒட்டி சிரமப்படுத்தும். இந்த ஆடையை அணிந்து வருபவரைப் பார்த்தால் 'கூடாரம்' போல் காட்சி தரும். அத்தனை பெரிது!

இப் பிரச்னைகளுக்கு சார்லஸ் குட்இயர் தீர்வு கண்டார். இன்று நீர்புகா ஆடைகளில் வேதிப் பொருட்கள் கலக்கப்பட்டு உருவாக்கப்படுகின்றன. சில நீர்புகா ஆடைகள் இரு விதங்களில் பயன்பட்டு செலவைக் குறைக்கின்றன. உதாரணமாக குளிர்காலத்திற்கு கம்பளியால் ஆன கோட்டும், மழை காலத்திற்கு ரப்பரால் ஆன கோட்டும் தேவை. இவை தனித்தனியே வாங்காமல் ஒரே கோட்டில் ஒரு பக்கம் கம்பளி, மறுபக்கம் ரப்பரால் செய்யப்பட்டு விற்கப்படுகின்றன.

'ரெயின்'கோட் பட்டன்களை கழற்றும் முன் இதைக் கண்டுபிடித்த 'மெக்' அவர்களை நினைத்து நன்றி சொல்லுங்கள்.

நம் ஊர்களில் தரமான ரெயின் கோட் நானூற்று ஐம்பது ரூபாய்க்கு கிடைக்கிறது. பிளாஸ்டிக், ரப்பரால் செய்யப்பட்ட ரெயின் கோட்கள் நூறு ரூபாயிலிருந்து கிடைக்கின்றன. பெரிய பிளாஸ்டிக் பை மற்றும் உரச் சாக்குகளைக்கூட மழையில் நனையாமல் செல்ல பயன்படுத்துகிறார்கள்.

அட்டையில்: **ராஜன், சுபஸ்ரீ**
வண்ணப்படம்: **ஸ்ரீஹரி**

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47 Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Subscription — (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-






மறுபாதி...?


பிருந்தாவனம்

"அந்த ஆமை மட்டும் ரொம்ப ரொம்ப மெதுவா நகருதே ஏன்?"

"வயசான ஆமை. அதான் 'தள்ளாமை' வந்து விட்டது!"

— ஜூனியர்தேஜ்





புஸ்வாணம் கொளுத்தி வழி காட்டுங்கள்!



Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / MS (S) 281/98 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 14 * Registered as a Newspaper in Srilanka



Mudra:RASNA:103 Tam.